வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12;

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

மில்க்வைற் நீலசோப்




பிரகாசமாய் சலவை செய்கிறது

மில்க்வைற் சோப் தொழிற்சாலை யாழ்ப்பாணம்

புத்தகம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 1994 சித்திரை திங்கள் 1-ம் நாள் (14—4—1963) ஞாயிற்றுக்கிழமை துல்கஃ 19 | இதழ் 46

# அறப் போர் படிப்படியாக விரிவடையும்

## தமிழியக்கத்தின் பின் அடுத்த நடவடிக்கை


தமிழரசுக் கட்சி தனது நேரடி நடவடிக்கையைப் பிற்போட்டுள்ளது என்ற பொய்ச் செய்தியைச் சில பொறுப்பற்ற தினசரிகள் பிரசுரித்து மக்களிடையே ஐயப்பாட்டை உருவாக்க முனைகின்றன. நேரடி நடவடிக்கையை இன்ன வழிகளில் நடத்துவது என்பதனை கட்சியின் நடவடிக்கைக் குழு திட்டமிட்டு தக்க நேரத்தில் அவற்றை வெளியிட்டு அத்திட்டங்களுக்கமைய கட்சி இயங்கும் என்றும் பிற்போடும் முடிவெதுவும் வவுனியாவில் எடுக்கப்படவில்லை என்றும் கட்சி வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

நேரடி நடவடிக்கை எனக் கட்சி முடிவு செய்ததும் பத்திரிகைகள் தாங்களாகவே பலவித செய்திகளை உண்டு பண்ணிப் பிரசுரித்தன. உப்புச் சத்தியாக்கிரகம் நடக்கும் என்று மட்டுமல்ல நாவலம்சத் திட்டம், சுத்திகரிப்பியக்கம் போன்ற பத்திரிகைக் காரியாலயங்களில் புனையப்பட்ட செய்திகள் கூட வெளிவந்தன.

கட்சியைப் பொறுத்த மட்டில் எந்த முறையைக் கையாளுவது என்று நடவடிக்கைக் குழு ஆராய்ந்து முடிவு செய்ததேயன்றி பத்திரிகைகளுக்கு போராட்டம் எப்படி நடைபெறும் என்று ஒருபோதும் அறிக்கை விடவில்லை எனக் கூறப்படுகிறது.

நேரடி நடவடிக்கை என்றவுடன் கச்சேரிமுன் மறியல் அல்லது டிக்கட் இல்லாப் பிரயாணம் நடக்கும் என்று சிலர் எண்ணுவதுண்டு. சென்ற அறப்போர் இயக்கம் ஜனவரி 30ல் தொடக்கப்பட்டது. அன்று தலைவர்கள் துண்டுப் பிரசுரங்களை அரசாங்க அலுவலகங்களில் விநியோகித்தே அன்று போராட்டத்தை ஆரம்பித்தனர். பின்னர் பெப்ரவரி மாதம் 20-ம் திகதி தான் மறியல் இயக்

(8-ம் பக்கம் பார்க்க)



மட்டக்களப்பு பாட்டாளி புரத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சிக் கூட்டத்தில், மட்டக்களப்பு முதலாவது பிரதிநிதி திரு. செ. இராசதுரை, தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம் எம். பி. ஆகியோர் உரை நிகழ்த்துகிறார்கள். அறப்போர் முன்னணித் தலைவர் திரு. ஆர். டபிள்யூ. வி. அரியநாயகம், வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

—படம்: "இதயம்"

# அடங்கிக்கிடந்த தமிழினம் துடித்தெழுந்துவிட்டது!

## தமிழ் தமிழ் எனத் தமிழியக்கம் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது

"யாழ்ப்பாணத்தில் எல்லாம் தமிழியக்கம் ஆரம்பமாகிவிட்டது" என்ற தந்திச் செய்தியைத் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. இராசமாணிக்கம், தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்திற்கு அனுப்பிவைத்து, கடந்த திங்கட்கிழமை 'எல்லாம் தமிழியக்கத்தை' ஆரம்பித்து வைத்தார். இதைத் தொடர்ந்து வடக்குக் கிழக்கு மாகாணங்கள் முழுவதும் தமிழியக்கம் ஆரம்பமாகியுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய அஞ்சல் நிலையத்தின் முன், எல்லாம் தமிழியக்கத்தைக் கட்சித் தலைவர் திரு. இராசமாணிக்கம், வாலிப முன்னணித் தலைவர் திரு. சி. கதிரவேற்பிள்ளை, செனட்டர் திரு. ஜி. நல்லையா, திரு. கா. பொ. இரத்தினம் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர்.

இதைத்தொடர்ந்து இயக்கம் ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இரவு திருமலைப் பிரதிநிதி திரு. ந. இ. இராஜவரோதயம் வீட்டில் தமிழரசுக் கட்சித் திருமலைக் கிளையின் அவசரக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழியக்க வாரத்தையொட்டி பல முடிவுகள் எடுக்கப்பட்டன. அதாவது செவ்வாய்க்கிழமை எல்லாம் தமிழியக்கத்தை திருமலை மத்திய அஞ்சல் நிலையத்தில் திருமலைப் பிரதிநிதி திரு. ந. இ. இராஜவரோதயம் தலைமையில் நடத்துவதென்றும், அதைத் தொடர்ந்து மறுதினம் நகராண்மைக் கழக எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு இயக்கத்தை விஸ்தரிப்பதென்றும், மூன்றும் நாள் மூதூர்ப் பகுதி உட்பட திருமலை மாவட்டம் முழுவதும் தமிழியக்கத்தைப் பரப்புவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

தீர்மானத்திற்கு அமைய தொண்டர்கள் செயல்பட்டு வருவதாக தமிழரசுக்கட்சி திருமலைக் கிளைச் செயலாளரும், நமது திருமலை நிருபரும் அறிவித்து வருகிறார்கள். மேலும் அவர்களின் செய்தி கூறுவதாவது: செவ்வாய்க்கிழமைக்கு முன்னரே பொது மக்கள் தங்கள் கருமங்கள் அனைத்தையும் குறிப்பாக காசோலை முதலியனவற்றைத் தமிழ் மொழியிலேயே எழுதத் தொடங்கிவிட்டனராம்.

செவ்வாய்க் கிழமை உத்தியோகபூர்வமாக தமிழியக்கம் ஆரம்பமாகிய சிறிது நேரத்தில் இரு 'கனவான்கள்' தந்தி கொடுக்கச் சென்ற பொழுது, தொண்டர்கள் அவர்களைத் தமிழில் எழுதும்படி வேண்டியபொ

(9-ம் பக்கம் பார்க்க)

### அறை கூவல் 9

"உன்னைபின்ற
அன்னையானை
ஓர்மை பெற்று
நில்லடா!
பின்னாலிலைச்
செந்தமிழ்ப்
பிறப்புரிமை
இன்றடா!"




சுகாதாரமான நவீன முறைப்படி
கைபடாமல் தயாரிக்கப்பட்ட

ரேஸ் பிராண்ட்
சுவீட்ஸ் டொபீஸ்

இலங்கையில் முதல் இடத்தை வகிப்பவை
ஒரு முறை சுவைத்தால் போதும்
மறுமுறை டொபி சுவீற்ஸ் வாங்கும்பொழுது

'ரேஸ்' பிராண்ட்

என்றே கேட்பீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையே தமிழ்மாதா அழாதே!

## உயிரீந்தும் உன்னை நாம் காப்போம்

### எழுச்சி ஏட்டின் உணர்ச்சி மிக்க ஆசிரியத் தலையங்கம்

அன்னையே!

தமிழே!

எங்கள் உயிரே!

நாங்கள் வணங்கும் தெய்வமே!

ஏன் அம்மா இந்தக் கண்ணீர்?

ஏன் அம்மா இந்தக் கோலம்?

எங்கே உன் அருள் மழை பொழியும் விழிகள்?

எங்கே உன் பவளச் செவ்வாயில் தவழும் குமின் சிரிப்பு?

எங்கே உன் எழில்கொழிக்கும் திருமேனி?

எங்கே? எங்கே?

ஏன் அம்மா இந்த மௌனம்?

ஏன் அம்மா இந்தக் கண்ணீர்?

பேசமாட்டாயா?

பேசவே மாட்டாயா?

மௌனம்தான் உன் மொழியா?

கண்ணீர்தான் உன் பதிலா?

எங்களுக்குத் தெரிகிறது!

எங்களுக்குப் புரிகிறது!

நீ உன் பழைய வாழ்வை நினைத்து விட்டாய்!

முடியுடை மூவேந்தர்கள் உன் அடி தொழுது வாழ்ந்த காலத்தை நினைத்து விட்டாய்!

அரியாசனத்தில் சரியாசனம் வீற்றிருந்த ஏற்றத்தை நினைத்து விட்டாய்!

எட்டுத் திக்கும் பதினறு கோணமும் புகழ் பரப்பி கொற்றம் இருந்து கோலோச்சிய நாட்களை நினைத்து விட்டாய்!

புலவர்கள் உன் புகழ் மாலை பாடி பாமாலை சாத்திய இன்பநினைவை நினைத்து விட்டாய்!

இளங்கோவின் சிலம்பு!

சாத்தனின் மேகலை!

சமணரின் குண்டலம்!

இந்த அணிகள் உன்னை அணி செய்த காலத்தை எண்ணி விட்டாய்!

தமிழைப் பழித்தான், இழித்தான், ஒரு கனகனும் விசயனும் என்பது கேட்டு தமிழைப் பழித்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன் என சொல்லில் அனல் கக்கி, சூளுரைத்து, நாற்படை நடாத்தி, வடபுலம் ஏகி, கனக—விசயனைச் சாடி, சிறைப் பிடித்து, அவர்கள் தலையில் கல் சுமந்து பத்தினி தெய்வம் கண்ணகிக்கு சிலை வடித்த சேரன் செங்குட்டுவனின் வீர காவியத்தை உன் நினைவுத் திரையில் மீண்டும் போட்டுப் பார்த்துவிட்டாய்!

சென்ற காலத்தை—நிகழ் காலத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து விட்டாய்!

பழைய வாழ்வை—இன்றைய வீழ்ச்சியோடு உரைத்துப் பார்த்து விட்டாய்!

அது தான் அழுகிறாய்!

கண்ணீர் சிந்துகிறாய்!

மனம் வெதும்புகிறாய்! இல்லையா அம்மா?

தமிழ் பழிக்கப்பட்டது என்பதற்காக படையெடுத்து பழிதுடைத்த வீர வரலாறு எங்கே? தமிழ் அழிக்கப்படுவது கண்டும் உழைக்கிற காலுக்கு முத்தமிட எத்தனிக்கும் அடிமைப் புத்தி எங்கே?

கங்கை கொண்ட, கடாரம் வென்ற அன்றைய பெருமை எங்கே?

மானம் விலை கூறி விற்கப்படும் இன்றைய சிறுமை எங்கே?

மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம்!

தங்கத்துக்கும்—பித்தளைக்குமுள்ள வேற்றுமை!

கத்தும் கடலின் முத்துக்கும் கிழிஞ்சலுக்கும் உள்ள இடைவெளி!

இவை எல்லாவற்றையும் நினைத்து விட்டாய்!

அதனால் உன் கண்கள் குளமாகி விட்டன!

அன்னையே தமிழ் மாதா நீ அழாதே!

உன் கண்ணில் நீர் வடிந்தால் அது எங்கள் நெஞ்சில் உதிரத்தைக் கொட்டுது அம்மா!

ஒரு சிலர் தவறுகிறார்கள் என்பதற்காக எல்லோரையுமா தண்டிப்பது?

ஒரு சிலர் பெற்ற தாயை மறந்துவிட்டு மாற்றாந்தாய் பின்னல் போவது கண்டு எல்லோரையுமா கோபிப்பது?

இப்படிப்பட்ட வீணர்களை இன்றுதான் முதன் முறை காண்கிறாயா?

எல்லா இனத்திலும் எல்லா நாட்டிலும் எல்லாக் காலத்திலும் இப்படிப்பட்ட பதர்கள் தோன்றி மறைந்திருக்கிறார்களே!

இனிமேலும் தோன்றி மறைவார்களே!

அன்றிருந்த இலங்கைதனை ஆண்ட மறத் தமிழன், இராவணன் காலத்தில் ஒரு துரோகச் சின்னம் வீடணன் உருவில் வாழவில்லையா?

கட்டபொம்மன் காலத்தில் ஒரு எட்டப்பன்!

அந்த எட்டப்பனையே நல்லவனாக்கிவிட்ட ராஜாதிராஜ ஸ்ரீராஜ கருணாகரத் தொண்டமான்!

சங்கிலியன் காலத்தில் ஒரு காக்கை வன்னியன்!

பட்டியல் போதுமா அம்மா?

வரலாறு இன்றும் இவர்களுக்குச் சூட்டியுள்ள பட்டம் நாட்டுக்குத் தெரியாத ஒன்றா?

ஆகவே—

அன்னையே தமிழ் மாதா—நீ அழாதே!

அவர்கள் தங்களை அறியாமலே தவறு செய்கிறார்கள்!

நீ பெருந்தன்மையோடு அவர்களை மன்னித்து விடு!

தமிழ் வீரம் இன்னும் முற்றுகப் பட்டுவிட வில்லை!

தமிழ் மானம் இன்னும் கட்டோடு கெட்டு விட வில்லை!

உன்னை மீண்டும் அரியணை ஏற்றி பழைய சீரோடும் சிறப்போடும், பேரோடும் புகழோடும் பார்க்க நாங்கள் இருக்கிறோம்! அம்மா நாங்கள் இருக்கிறோம்!!

உன் உயர்வுக்கு எங்கள் செங்குருதிதானே காணிக்கையாகத் தரவேண்டும்?

உன் வளர்ச்சிக்கு எங்கள் எலும்புதானே எருவாக்கப் படவேண்டும்?

இதைக் கூடவா நாங்கள் செய்யமாட்டோம்?

கட்டாயம் செய்வோம்!!

உயிரைக் கொடுத்தும் உனை நாம் காப்போம்!

இது உன் மீது ஆணை!!

—எழுச்சி.




# ரிஷி லேகியம்

## ரிஷி கருணைக் கிழங்கு லேகியம்

ரிஷி படம் உள்ளதாவெனப் பார்த்து வாங்கவும்

மலச்சிக்கலுக்கும், மூலவியாதிக்கும்

மூல முளைகள், இரத்த மூலம், சீழ் மூலம், வெளி மூலம், உள் மூலம், பௌந்திர கை கால் அசதி, சோம்பல், அஜீரணம், பசியின்மை, பத்தவாயு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், இடுப்பு வலி, நெஞ்சுவலி, புற்றுகள், கண், கை கால், திரேக எரிச்சல், தேக மெலிவு, மூலச் சூட்டினல் உண்டாகும் எல்லா வியாதிகளையும் உடனே கண்டிக்கும்.

விபரமடங்கிய கேட்லாக் இனம்

**15 நாள் டின் ரூபா 3-00**

**30 நாள் டின் ரூபா 5-75**

தபால் செலவு /-95

**ஞானசுந்தர வைத்தியசாலை.**

187, செட்டியார் தெரு, கொழும்பு.





சாகித்திய மண்டலத்தைப் பற்றியும் அதன் உறுப்பினருள் ஒருவராகிய பட்டதாரிப் பண்டிதரைப் பற்றியும் 'இழித்தும் பழித்தும்' பல கட்டுரைகள் அண்மை காலத்தில் வெளிவந்ததை நீங்கள் பார்த்திருப்பீர்கள். பெரும்பாலான கட்டுரைகள் யார் யாருடைய பெயர்களில் வெளிவந்தனவோ; அந்தப் பேர்வழிகள் உண்மையில் அந்தக் கட்டுரைகளை எழுதவில்லை. இந்தச் செய்தி உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம், ஆனல் உண்மை அது தான். நான் சென்ற வாரம் குறிப்பிட்ட சிங்கப்பூராரும், அவருடன் ஒட்டிப் பிறவாத ஒரு 'பெரிய' எழுத்தாளரும் வேறும் சிலரும் சேர்ந்து கட்டுரைகளைத் தயார் செய்து தங்களின் 'விடுகாய்'களின் பெயர்களில் கட்டுரைகளை வெளியிட்டவர். இப்படி ஒளிந்துநின்று அம்பெய்ததின் காரணம் என்ன? நேர்லே தோன்றினல் பட்டதாரிப் பண்டிதரின் எதிர்ப்புக்கு அவர்கள் பணிந்தே ஆகவேண்டும். அப்படிப் பகிரங்கமாகத் தமது அறிவீனத்தை ஒப்புக்கொள்ள அவர்கள் தயாராயில்லை. ஆகவேதான் இந்த முகமூடி விளையாட்டெல்லாம்.

இந்த முகமூடிவிளையாட்டு இன்னும் நிற்கவில்லை. 'இழிசனர் வழக்கு' என்ற விஷயத்தில் சாதிச் சண்டையை உண்டாக்குவதற்குக் கூடச் சில முற்போக்கு எழுத்தாளக் குஞ்சுகள் முயன்றார்கள் என்றல் அவர்களைப் பற்றி மேலும் நான் என்ன சொல்ல வேண்டும்.

உண்மையைச் சொல்லப் போனல், இந்த முற்போக்கு எழுத்தாளர்களுக்கு இப்போது ஒரே ஆத்திரம். தங்களுடைய 'பிடி'யிலிருந்து சாகித்திய மண்டலம் நழுவி விட்டதே என்று, அவர்களுக்கு ஒரே ஏக்கம். இல்லாவிட்டால் அவர்கள் இலக்கியம் என்ற பெயரில் எழுதும் கசாய்புக்கடைப் படைப்புகளுக்கு எல்லாம் பரிசு கிடைத்துக்கொண்டேயிருக்குமல்லவா?

இவர்கள் நினைத்தபடி நடப்பதற்குப் பட்டதாரிப் பண்டிதர் இடங்கொடுக்க மாட்டார். இதை அடிமனதில் வைத்துக்கொண்டு தான், இழிசனர் வழக்குப் பற்றியும், இலக்கியம் பற்றியும் நெருப்பெடுக்கிறார்கள் எங்கள் தோழர்கள்.

எங்களுடைய ஆள்மட்டும் மண்டலத்தில் இருந்தால், 'சுளையாக......' என்று அங்கலாய்க்கும் அவர்களின் வண்டவாளங்கள் இப்போதாவது புரிகிறதா?

# தமிழ் உயர தமிழன் உயர்வான்

## தமிழியக்க விழாவில் புதுமைலோலன் பேச்சு

தமிழ் பேசும் மக்களாகிய நாங்கள் யாவரும் சேர்ந்து தமிழ் மட்டும் சட்டத்தை வகுத்து அதை நடை முறைக்குக் கொண்டு வருவோம். சிங்கள மக்களின் பிரதிநிதிகளால் நிறைவேற்றப்பட்ட சிங்களம் மட்டுஞ் சட்டத்துக்குத் தமிழ் பேசும் மக்கள் யாவராலும் வகுக்கப்படும் தமிழ் மட்டுஞ் சட்டம் எவ்வகையிலும் குறைந்ததாகாது. நாம் மேற்கொள்ளும் "தமிழ் மட்டும்" சட்டத்தை முழுதுமாக நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கே நாம் தமிழியக்கவாரம் கொண்டாட முன் வந்துள்ளோம். தமிழியக்க வாரத்திலே எல்லோரும் எல்லா அலுவல்களையும் தமிழிலே செய்து "தமிழ் மட்டும்" சட்டத்தைச் செயற்படுத்துவோம். தமிழ்ப் பெருமக்களே ஒன்றுபடுங்கள்! நாம் வகுக்கும் இச் சட்டத்தை நாமே போற்றி நடப்போம்.

இவ்வாறு கடந்த 30-ம் திகதி சனிக்கிழமை கொழும்பு சைவ மங்கையர் கழக மண்டபத்தில் திரு. மு. வயிரவப்பிள்ளை தலைமையில் கொழும்புத் தமிழ்ச் சங்க ஆதரவில் நடைபெற்ற எல்லாம் தமிழியக்க வாரப் பிரசாரக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் பண்டிதர் கா. பொ. இரத்தினம் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் கூறியதாவது:— ஏப்பிரில் எட்டாந் தேதி தொடக்கம் இலங்கை முழுவதிலும் தமிழியக்க வாரம் கொண்டாடப் பல ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. தமிழியக்கம் ஓர் அரசியற் கட்சிக்கோ, ஒரு குழுவினருக்கோ உரியதன்று. தமிழ் பேசும் மக்கள் யாவருக்கும் உரியது. எனவே இந்தத் தமிழியக்க வாரத்தில் தமிழ் பேசும் மக்கள் யாவரையும் ஒன்றுபட்டுத் தொண்டாற் [illegible] மாறு கேட்டுக்கொள்கிறோம்.

இத்தமிழ் மட்டுஞ் சட்டத்தைப் போற்றித் தமிழ் பேசும் மக்கள் யாவரும் தங்கள் அலுவல்களையெல்லாம் தமிழிலே செய்ய உறுதி பூணல் வேண்டும்.

### தமிழன் உயர...

அடுத்து திரு. புதுமைலோலன் பேசுகையில் கூறியதாவது: தமிழ் உயரத் தமிழன் உயருவான். இதைத் தமிழ் பேசும் மக்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். தமிழ் மொழி உயர வேண்டுமானல் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் தங்கள் வாழ்வின் துறையனைத்திலும் தமிழ் மொழிக்கு முதன்மையளித்தல் வேண்டும்.

திருவாளர்கள் மு. திருநாவுக்கரசு, செ. குமாரசாமி, வேதநாயகம், இ. சங்கரப்பிள்ளை, செல்வி. ச. நாதன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்கள்.

## மொழி பறிக்கும் முயற்சிக்கு நீர்கொழும்பில் எதிர்ப்பு

தமிழ் மொழியையே தம் மொழியாகக் கொண்டவர்களான நீர்கொழும்பு மக்கள் மத்தியில் சிங்களத்தைத் திணிக்கப் பெரு முயற்சிகள் நடைபெற்று வருகிறது. கடற்றொழிலில் ஈடுபட்டுழைக்கும் இம் மக்கள் அனேகமாக எல்லோரும் கத்தோலிக்க மதத்தவர்களே. நீர்கொழும்புப் பகுதியில் இருக்கும் தேவாலயங்களிலும், தமிழ்ப் பாடசாலைகளிலும் தமிழை ஒதுக்கிவிட்டு சிங்கள ஆராதனையையும், சிங்களப் போதனையையும் நடத்துவதற்கு மும்முரமாக முயலுகின்றனர் சிலர்.

இவர்களுடைய செயலைக் கண்டித்து நீர்கொழும்புத் தமிழ் மக்கள் பெரும் கிளர்ச்சி செய்து வருவதாக நமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. நீர்கொழும்பு பெரிய தெரு வாலிப முற்போக்குச் சங்கத்தினர் மேற்படி சிங்களத் திணிப்பினை எதிர்த்து துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டுள்ளனர்.

### தீர்மானம்

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பாராளுமன்றத்தில் தமிழ் மொழியிலேயே உரை நிகழ்த்த வேண்டும் என்று தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கோரும் ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

ஈற்றில் திரு. ஈழவேந்தன் அவர்கள் நன்றி கூறினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இராசையா-திருநாவுக்கரசு,
க. சஞ்சீவி, ஸ்பிரிங்வல்லி.

கே: நாங்கள், எங்களால் இயன்ற அளவு, தமிழுக்குச் சேவை செய்ய விரும்புகிறோம். எந்த வகையில் அந்தச் சேவையைச் செய்யலாம்?

ப: எல்லாம் தமிழியக்கத்தில் தொண்டராகச் சேருங்கள்.

ஃ

வ. அப்புத்துரை,
வல்வெட்டித்துறை.

கே: தமிழ் மாணவர்களைச் சிங்களம் படிக்கவேண்டாமென்று கூறுகிறீர்களே, அப்போது இம் மாணவர்களுக்கெல்லாம் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உத்தியோகம் வைத்திருக்கிறீர்களா?

ப: சிங்களம் படித்தாலும் இன அடிப்படையில் விகிதாசாரப்படிதான் உத்தியோகம் என்று கூறிவிட்டார்களே! எனவே தமிழன் சிங்களம் படித்தாலும் உத்தியோகம் கிடைக்காது. ஆனல் அதனல் சொந்த இனத்தையே அழித்தொழித்து விட முடியும்.

ஃ

வே. அருளப்பு, பெரியகல்லாறு.

கே: நாம் மேற்கொண்டுள்ள காந்திய முறையால் புத்தி சுவாதீனமற்ற சிங்கள அரசாங்கத்திடமிருந்து, எமது உரிமைகளைப் பெறுதவிடத்து, இறுதியில் மேற் கொள்ள வேண்டியதென்ன?

ப: காந்திய முறையில் தோல்விக்கு இடமில்லை. எனவே வேறு முறைகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய அவசியமுமில்லை.

ஃ

வே. நடராசா, தலாத்தோயா.

கே. அகில இலங்கை ஆளைப் பந்தியடிக் காங்கிரஸ் தலைவரின் வாலிப முன்னணிப் பேச்சொன்று பத்திரிகையில் வெளிவந்தவிடத்தில் வரிக்கு வரி முரண்பாடு இருந்தது. இது ஓர் தலைசிறந்த நியாய வாதியான அவருக்கு ஏன் புரியவில்லை?

ப: நியாயம் பேசுவது நீதிமன்றத்தில்—வெளியே அரசியலில் அவர் பேச்சில், செயலில் ஏக முரண்பாடு தான்.

ஃ

அ. வெள்ளைச்சாமி,
பிட்டக்கந்தை.

கே: ருஷியர் சந்திர மண்டலத்திற்குப் போவதற்கு ரொக்கட்டைக் கண்டு பிடித்தனர். ஆனல் குருஷேவின் தலை வழுக்கையைப் போக்குவதற்கு ஒரு மருந்தைக் கண்டு பிடிக்கவில்லையே!

ப: ஆனல் அதை அமெரிக்கர் கண்டு பிடித்துவிட்டனர். நாற்று நடுவதைப் போல வழுக்கைத் தலையில் தலைமயிர்களை நடுவதுதான் அந்தக் கண்டுபிடிப்பு.

ஃ

திக்கம் சதாதனம், அல்வாய்.

கே: ஆண்டுக்கொரு முறை, கூடுங்கள் வட்டமேசை மகாநாடு என்று மேடையில் முழங்குவதால் மொழிப் பிரச்சினை தீர்ந்து போகுமா?

ப: மொழிப் பிரச்சினை தீராவிட்டாலும் தங்கள் பிரச்சினையாவது தீருமல்லவா?

ஃ

ஆ. கணேசமூர்த்தி,
திருக்கோயில்.

கே: குயுக்தியாரே! சத்தியாக்கிரகம் தொடங்கினுல் சிறிமா என்ன செய்வார்?

ப: அவர் முதலில் செய்வது அலரி மாளிகைப் பாதுகாப்பைப் பலப்படுத்துவது தான். பின்னர் திரு. பீலிக்ஸை யுத்த மந்திரியாக்குவதைப் பற்றி ஆலோசிப்பார்.

ஃ

சூ. மரியதாசன், உருத்திரபுரம்.

கே: நீச்சல் வீரன் ஆனந்தன் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்ததை வானொலியில் கூட பாவிப் பசங்கள் சொல்லவில்லையே! ஒரு சிங்களவன் நீந்திக் கடந்தால் சிறிமாவோ தன்னுடைய தலையில் தூக்கி வைத்திருப்பாரே! ஏன் இந்த ஓர வஞ்சனை?

ப: இது புரியவில்லையா? ஆனந்தன் ஒரு தமிழர் என்பதே காரணம்.

ஃ

மு. இராசேந்திரன்,
காங்கேசன்துறை.

கே: இராமநாதன் கல்லூரியில் சில ஆசிரியைகளும் மாணவிகளும் உக்கிரமாக சிங்களம் படிக்கிறார்களாம்!

ப: பெரியார் திரு. இராமநாதனின் நற்பெயருக்கு இழுக்குத் தேட வழி தேடுகிறார்கள் போலும்!

ஃ

ட. யெம். சரிப்தின் ரஷீதா,
அம்பாந்தோட்டை.

கே: நீங்கள் முதலில் அவசரமான காரியத்தைச் செய்வீர்களா, அவசியமான காரியத்தைச் செய்வீர்களா?

ப: அவசியமான காரியமெனினும் அவசரமில்லையேல் உடனடியாகச் செய்ய மாட்டேன்.

ஃ

செல்வி ஜெயராணி-
சபாபதிப்பிள்ளை, மல்லாகம்.

கே: ஜனநாயக அடிப்படை உரிமை முன்னணிக் குழுவில் எத்தனை அங்கத்தவர் இருக்கிறார்கள்?

ப: ஒரே ஒருவர் தான். அவர்தான் திருவாளர் கு. சாமி.

ஃ

"தாமரையாள்", ஏழாலை.

கே: மூன்று வருடத்தின் பின்னர் பழைய தனிக் காட்டுக் கோழி, பெரிய ஆரவாரக் கொக்கரிப்புடன், முட்டை இட்டதை யிட்டு ஆச்சரியப்பட்டீரா?

ப: எப்படி ஆச்சரியப்பட முடியும்? அது இட்டது பழைய கூழ் முட்டையாச்சே!

ஃ

ச. தனபாலசிங்கம்,
முகத்துவாரம்.

கே: "இடது சாரிகளின் ஐக்கியம் அடுத்த பொதுத் தேர்தலில் ஐ. தே. கட்சி சுலபமாக ஆட்சியைக் கைப்பற்ற வழி வகுக்கும்". இதைப் பற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: இது ஒரு கருத்து. மற்றொரு கருத்து தமிழரசுக் கட்சியின் உதவியின்றி எந்தக் கட்சியும் அரசாங்கத்தை அமைக்க முடியாதென்ற நிலை ஏற்படுமென்பது.

ஃ

பி. எஸ். ராஜூ, கொழும்பு-3.

கே: தமிழ காங்கிரஸ் தலைவர் அவர்களின் வட்டமேசை மகாநாட்டைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: அன்றும், இன்றும், என்றும் அது வெறும் வறட்டுக் கூச்சல்தான். வ. மே. மகாநாடு யாரால் எங்கே எப்பொழுது கூட்டப்படுமென்பது அவருக்கே தெரியாதே!

ஃ

எஸ். எஸ். நாதன், ஏருவூர்.

கே: இலங்கை வாழ் தமிழ் பேசும் இனத்தின் வருங்காலம் எப்படிப்பட்டதாக இருக்கும்?

ப: தூங்கினல் இருண்டு விடும்-விழித்துக்கொண்டால் பிரகாசிக்கும்.

திருவாளர்
**குயுக்தியார்**
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினுக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

எஸ். ஆர். ஏசுதாசன்,
நீர்கொழும்பு.

கே: காதலுக்கு கண்ணில்லை, என்று சொல்லுகிறார்கள். ஆனல் நான் சொல்லுகிறேன் காதலுக்கு கண் இருக்கு என்று! உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: காதலுக்கு கண் இருந்தாலும் அது குருடாகி விடுகிறதே!

ஃ

குமாரச் செல்வன், சுன்னுகம்.

கே: ஆனையிறவு உப்பளத்தைச் சுற்றி அம்மையாரின் பரிவாரங்கள் முட்கம்பி வேலி போடுவது எதற்காக?

ப: வெறும் மனப்பிராந்தி! பொலிஸ் ஒற்றர்களின் பேச்சை நம்பிச் செய்யும் வேடிக்கைகளில் இதுவும் ஒன்று.

## கட்டுண்டேன்!


''பிரமன்''

ஆற்றினி லலைக ளடிக்கையிலே—நான்
வீற்றிருந் தேனோர் நிழலினிலே—அங்கு
வாடையி லாடை சலசலக்க—அவள்
பாடியாடி விளையாடி வந்தாள்.

சுவைத்தால் மலரும் மகிழம்பூ—அவள்
நகைத்தால் மலரும் முல்லைப்பூ.
அணைத்தால் மலரும் குராவின்பூ—அவள்
உதைத்தால் மலரும் சோகின்பூ.

பாட்டால் மலரும் குருக்கத்தி—அவள்
பார்வையில் மலரும் மாவின்பூ.
நண்பினில் மலரும் பாலைப்பூ,—அவள்
தண்நிழல் மலருஞ் சண்பகப்பூ.

அவள்மேற் கொண்ட ஆசையிலே—நான்
வசமே இழந்தேன் உண்மையிலே—பின்
கன்னியின் நயன பாஷையிலே—நான்
கட்டுண்டேன் இப் பாரினிலே.



திறமாக நீர்ப்பாய்ச்சுவதற்குகந்த
நம்பிக்கை வாய்ந்த பம்ப்.

# விங்கெட்

நிர்மாண இயந்திரங்கள் உற்பத்தி செய்யும் உலகப் பிரசித்தி பெற்ற மெஸ்ஸேர்ஸ் விங்கெட் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்ட இந்த அடக்கமான உறுதி வாய்ந்த தண்ணீர் பம்ப்கள் அதிக காலம் மிகத் திறமான சேவையைத் தருகின்றன.

இவற்றின் பராமரிப்புச் செலவு மிக மிகக் குறைவு. மிகப் போட்டா போட்டி விலைகளில் கிடைக்கும். வில்லியர்ஸ் 4 ஸ்ரோக் பெற்ரோல்/மண்ணெண்ணெய் என்ஜின்கள் பாவனைக்குச் சிக்கனமானவை. எம்மிடம் அவற்றில் பலரக உப உறுப்புகள் உள்ளன. ஹோஸ் குழாய்களும், கைஉருளைகளும் கிடைக்கும்.

1½" மொடல்-மணித்தியாலம் 1500-6000 கலன் இறைக்கிறது.
2" மொடல்-மணித்தியாலம் 1680-11000 கலன் இறைக்கிறது.
3" மொடல்-மணித்தியாலம் 4800-16809 கலன் இறைக்கிறது.

டிலிவரிக்கேற்ப ஹெட்டும், சக்ஷன் லிவ்ட்டும் தேவை.

ஆகக் கூடிய ஏற்றும் உயரம் 70 அடி
ஆகக் கூடிய உறிஞ்சும் ஆழம் 25 அடி.

விற்பனையாளர்கள்

சண்முகம் ஸ்டோர்ஸ்,
222, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

ஏ. எஸ். அரசரத்தினம் அன் கோ,
11, ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

எம். எஸ். நாகலிங்கம்,
பிரதான வீதி, பருத்தித்துறை.

ஜி. எச். ஏ. டி. சில்வா அன் கோ,
வவுனியா.

முழு விபரங்களுக்கு எங்களை விசாரிக்கவும்:

**கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பெனி லிமிட்டெட்,**
([illegible] இணைக்கப் பெற்றது. அங்கத்தவர் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)
தபாற் பெட்டி இல: 33. கொழும்பு.
காட்சி அறை: ஜெனரல் லேக்ஸ் ரோட், போன்: 79351.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு, எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர் ஒன்றுதல் கண்டே," என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அன்று பாடியது இன்று ஈழத் தமிழகத்தில் உண்மையாகி விட்டது.

### தமிழியக்கம் ஆரம்பம்

தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம் அவர்கள் தமிழரசுத் தந்தைக்கு ஒரு தந்தியை தமிழில் அனுப்பி தமிழியக்கத்தை எட்டாம் திகதி ஆரம்பித்து வைத்துள்ளார். இக்குறுகிய காலத்தில் நாடு பூராவும் நல்ல முறையில் தமிழியக்கம் பரவியுள்ளதாக தினமும் தொண்டர்களிடமிருந்து கிடைக்கும் கடிதங்களில் இருந்து அறியப்படுகிறது.

தமிழியக்கம் தமிழர் வாழும் மாநிலங்களுடன் மட்டும்நின்று விடக்கூடாது. தமிழியக்கம் தமிழன் வாழுமிடமெல்லாம் பரவ வேண்டும். நாம் எங்கு வாழ்ந்தாலும் 'நாம் தமிழன்' என்பதை மறந்து விடக்கூடாது.

### தொண்டர்கள் கடிதம்

நாவலப்பிட்டியிலிருந்து ஒரு தொண்டர் கடிதம் அனுப்பியிருக்கிறார். தான் வட்டுக் கோட்டைத் தொகுதியைச் சேர்ந்தவரென்றும், தொழில் சம்பந்தமாக நாவலப்பிட்டியில் இருப்பதாகவும், தமிழியக்க வாரத்தில் தனது கடமை யென்ன என்றும் வினவியிருக்கிறார். இது போன்று வேறும் பல தொண்டர்கள், அன்பர்களிடமிருந்து அஞ்சல்கள் வந்துள்ளன. இவர்களுக்கு நாம் கூறுவது இதுதான். 'உங்கள் கருமங்கள் அனைத்தையும் தமிழிலே செய்யுங்கள், தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களுடன் தமிழிலே உரையாடுங்கள்.' தமிழ் மாநிலங்களைத் தவிர்ந்தஏனைய பகுதிகளில் வாழும் தமிழ் பேசும் மக்கள் தற்போதைக்கு இவற்றைச் செய்தால் போதுமானதாகும்.

### குறைந்த பணிதான் தமிழியக்கம்

தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட ஒவ்வொருவரும் தமிழுக்குச் செய்யக் கூடிய குறைந்த பணி தங்கள் கடமைகள் அனைத்தையும் தமிழில் செய்தல் என்பதைப் பல முறை நாம் இப்பகுதியில் வற்புறுத்தி வந்துள்ளோம். தமிழ் பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளில் உள்ளவர்களே தங்கள் கடமைகள் அனைத்தையும் தமிழிற் செய்ய முனையும் பொழுது தமிழ்ப் பகுதியில் உள்ளவர்கள் பின்நிற்பது வேதனைக்குரிய விடயமாகும்.

### வரலாறு காட்டும் உண்மை

மக்களை ஒன்று படுத்தும் சக்திகளில்முதன்மையானது மொழியேயாகும், மத இன வேறுபாடுகளுக்கும் அப்பாற்பட்டது மொழிப்பற்று. மொழிவழி மக்கள் ஒன்றுபட்ட நிகழ்ச்சிகள் பலவற்றைக் கடந்த கால வரலாறு நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

### சில எடுத்துக் காட்டுகள்

மதத்தால் ஒன்றுபட்ட பாகிஸ்தானிலும் கூட உருது மொழியை மட்டும் ஆட்சி மொழியாக வைத்திருக்கச் செய்த முடிவு பத்து வருடங்களுக்கு மேலாகச் செய்யப்பட்ட கிளர்ச்சியின் பயனாக மாற்றப்பட்டு விட்டது. வங்காள மொழியைப் பேசும் மக்கள் செய்த கிளர்ச்சியின் பயனாக வங்காள மொழியும் பாகிஸ்தானின் அரசகரும மொழியாக்கப்பட்டது.

# தமிழியக்கம்

## "தேசமெல்லாம் தமிழியக்கம் செழிக்கச் செய்வோம்"

இரு மொழி மாகாணமாய் இருந்த பம்பாய், இப்பொழுது மராட்டி பேசும் பகுதியாகவும், குசராத்தி பேசும் பகுதியாகவும் பிரிக்கப்பட்டிருப்பதன் காரணம் யாது? மக்களின் தாய் மொழிப் பற்றை, உரிமை உணர்ச்சியை அடக்குவதற்கு எந்தச் சக்தியாலும் முடியாதென்பதையே இது காட்டுகிறது.

இந்தக் கடந்த கால வரலாறுகளையெல்லாம் ஒருக்கால் திரும்பிப் பார்க்கும் வண்ணம் சோர்ந்து கிடக்கும் நம் தமிழர் சிலருக்கும் நினைவூட்ட விரும்புகிறோம்.

### சலுகைகள் உரிமையாகுமா?

'சிறுபான்மையினராகிய நாம் என்ன செய்ய முடியும்' என்று கூறுபவர்கள் சிலர் இன்றும் நம் மத்தியில் இருக்கத்தான் செய்கிறார்கள். இன்று நம்முன் உள்ள பிரச்சினை நாம் இழந்த உரிமைகளை மீண்டும் பெற்று இந் நாட்டில் சிங்களச் சகோதரர்களுடன் சரிநிகர் சமானமாக வாழ்வதா? அல்லது ஆட்சியாளர் கொடுக்கும் சலுகைகளை உரிமைகள் என்ற போர்வையில் இரு கையும் நீட்டி வேண்டிக் கொண்டு அமைதியாக வாழ்வதா? என்பதுதான். மானமுள்ள தமிழர்கள் நம்மிடையே இருக்கும்வரை நமது உரிமைப் போர் ஓயப் போவதில்லை என்பதைச் சோர்வு மனப்பான்மை படைத்தோருக்குக் கூற வேண்டும்.

### தமிழில் வாழ்த்துச் செய்தி

தமிழில் வாழ்த்துச் செய்திகள் அனுப்புவதற்கு ஏற்ற வகையில் வாசகங்கள், சுலோகங்கள் அனுப்பி வைக்கும்படி பல தொண்டர்கள் தினம் தினம் கடிதம் எழுதி வருகிறார்கள். இதோ மணவினை விழாவிற்கு அனுப்பி வைக்கக் கூடிய வாழ்த்துச் செய்திகள் சில:—

(1) மனமொத்த மணமக்கள் மன மகிழ்வுடன் வாழுக.

(2) ஈருயிர் ஒருடலாய் இணைந்து வாழியவே.

(3) இல்லறம் என்னும் நல்லறத்தே இன்புடன் வாழியவே.

(4) இல்லறம் நாடி இறைவன் நல்லருள் நாடி இன்புற வாழியவே.

(5) இல்லற வாழ்வு இன்புற்றோங்க இறைவன் அருள் புரிவாராக.

மேலும் பழமையில் பற்றுக் கொண்டோருக்கு இதோ ஒன்று: பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்க!

இதைக் கூறுவிடின் நமது பெரியவர்களுக்கு தாங்கள் வாழ்த்தியதாகத் தோன்றுதல்லவா? தொடர்ந்து நமது வாழ்க்கையில் ஏற்படும் இன்பதுன்ப நிகழ்ச்சிகளுக்கு அறிவித்தல்கள், வாழ்த்துக்கள் எழுதும் முறை இங்கு தரப்படும். அவற்றைக்கத்தரித்து வைத்திருக்க வேண்டியது தொண்டர்களின் கடன்.

### தொண்டர்களாகச் சேருங்கள்

இதுவரை தமிழியக்கத்தில் தொண்டர்களாகச் சேராதவர்கள் இன்றே ஒரு தபால் அட்டையில் உங்கள் பெயர், முகவரி, வயது, தொழில் அனைத்தையும் குறித்து தமிழியக்கம், மே/பா சுதந்திரன், த. பெ. இல 1183, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பவும்.

நாய்க்கு மங்கோர் பாழியுண்டு
நாங்கள் மாந்த ரில்லையா?
தாய்க்கு நேர்ந்த ஈனம் உன்னைச்
சாகவாட்ட வில்லையா?
பேய்க்கு மன்னை பாசமுண்டே!
பிள்ளைகட்கே இல்லையா?
தீய்க்குளும் சுதந்திரத்
திறம் படைக்க நில்லடா!

—"திமிலைத்துமிலன்"

# சந்தித்து வந்தவை

## காலைகண்டன்

## சுப்பையா நடேசபிள்ளையே நீ தியாகி!

திரு. சுப்பையா நடேச பிள்ளை அவர்கள் செனட்டராக நியமிக்கப் பட்டதைக் கேள்வியுற்ற எங்கள் அம்மான் அவருக்கொரு புகழுரை அனுப்பியுள்ளார். அதன் மறுபிரதியைக் கீழே தருகிறோம்.

அன்புள்ள சுப்பையா நடேசபிள்ளை அவர்களுக்கு உங்கள் பாலிய நண்பன் அ. கு. அம்மான் எழுதிக் கொள்வது யாதெனில், தள்ளாத காலத்தில் சுயநலமிகள் வாழ்க்கையில் செய்த பாவங்களுக்குப் பிராயச்சித்தம் செய்யுமுகமாகக் காசிக்குப் போவதுண்டு. ஆனால் நீங்களோ பெரும் தியாகி. கிடைத்த கடைசி'சான்ஸை'யும் தவறவிடாது இனத்திற்குக் குழிபறிக்கும் பொதுத் தொண்டில் இறங்கியுள்ளீர்கள்.

நீங்கள் தனிச் சிங்களச் சட்டத்தை விரும்பாது யூ. என். பியை விட்டுவிலகினீர்கள். அன்று இருந்த கொஞ்ச நஞ்ச நேர்மையையும் தியாகம்செய்து இன்று தனிச் சிங்கள சிறிமாவின் செனட்டர் பதவியை ஏற்றுக்கொண்டுள்ளீர்கள் — என்னே உங்கள் தியாகம்!

தமிழ் படித்த பெரியார் நீங்கள். அக்காலத்தில் ஓர் அரசனின் வீரத்தை வெளியிட அவன் பாதத்தில் மற்றயமன்னர்களின் முடிபட்டவடு காணப்படும் என்று கூறுவார்களே—இன்று நிலைமை மாறிவிட்டது போலும். டி.எஸ் சேனநாயகா பாதத்தூசி தொடக்கம்—சிறிமாவின் சினச் செருப்புத் தூசி வரை உங்கள் பழம்பெரும் தலைப்பாகையில் பட்டுள்ள பெருமையை புராணமாகப் பாடவேண்டும்.

மேலும் தமிழ் மக்களின் மொழிப் பிரச்சினையையும் தீர்க்க முற்படுவீர்கள் என்று நாங்கள் கனவிலும்கூடக் கருதவில்லை. நீங்கள் பெரும்தமிழ் அறிவாளி. யூ. என். பியுடனிருந்து அலக்கழிந்த காலத்தில்தான் யூ. என். பி. தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டுவந்தது என்பதை நீங்கள் இந்தத் தள்ளாத வயதில் மறந்திருக்கக்கூடும். யூ.என்.பி யினர் தனிச் சிங்களத்தை உண்டு பண்ணுவதை நிறுத்த முடியாமல் நீண்ட பிரசங்கம் செய்த நீங்கள், [illegible] பிஞ்சிலே கிள்ளி எறிய முடியாதவர், இன்று தனிச் சிங்களச் சட்டம் அமுலுக்கு வந்து பல பகுதிகளில் இயங்கிவரும் காலத்தில்அதனைக் களைய வருவது போற்றத்தக்க தொன்றாகும்.

### அடுப்படி முன்னணிக் கூட்டம்

அத்துடன் நீங்கள் சேர்ந்த ஒரு கட்சிக்குத்தான் விசுவாசமாக இருப்பீர்கள் என்று பலர் எண்ணினார்கள். ஆனால் நீங்கள் எந்தப் பந்தியானாலும் குந்திவிடுவீர்கள் என்பதை அவர்களுக்கு வெளிப்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

முடிவாக பலர் தியாகிகளாக வேண்டும் என்ற எண்ணம் கொண்டு நேர்மையுடன்சேவை செய்து பல கஷ்டங்களுக்குள்ளாகிறார்களாம். இவர்களுக்கு நீங்கள் நல்லதொரு படிப்பினை படிப்பித்துவிட்டீர்கள் — மிகவும் கஷ்டப்பட்டு நல்ல பெயர் எடுப்பதை விட மிக விரைவில் கெட்ட பெயர் பெற்று இவ்வுலக வாழ்வை இன்பமாகப் போக்கலாம் என்பதை உங்கள் ஆழ்ந்த தமிழறிவும், பரந்த சைவ ஞானமும், கடவுள் பக்தியும் உங்களுக்கு எடுத்துக் காட்டியுள்ளதைக் கண்டு அக மகிழ்கிறேன்.

ஏதோ இந்தத் தள்ளாத வயதில் தலைப்பாகை கழராதிருந்தால் போதும்.

இப்படிக்கு
அ. கு. அம்மான்

பிற்குறிப்பு

ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கப் பதவியிலிருந்துஉங்களுக்கு'கல்த்தா' கொடுத்து விட்டார்களே என்று மிக வருத்தப்படுகிறேன். அது மட்டுமா? உங்களை [illegible] வரும் அதுவரை காலம் நடைபெற்றுவந்த சிங்கப் பரீட்சைகளை இலாபம் வரத்தக்கதாக உங்கள் இடத்தைப் பிடித்தவர் நடத்தி உங்கள் சாயத்தைக் கழற்றியது பற்றி நான் மிக மிக வருந்துகிறேன்.

அ. கு. அ.

***

அகில சாவகச்சேரி அடுப்படி முன்னணியின் கூட்டம் சில வருடங்களுக்குப் பின் திடீரெனக் கூட்டப்பட்டது. இக் கூட்டத்தின் அறிக்கையை எங்கள் அப்பாக்குட்டி அம்மான் அனுப்பியுள்ளார்.

சாவகச்சேரியில் ஓர் அடுப்படியினருகே நடந்த அடுப்படி முன்னணிக் கூட்டத்திற்கு மக்களால் விரட்டியடிக்கப்பட்ட அரசியல் வாதி ஒருவர் தலைமை தாங்கினார். கூட்டத்திற்குத் தலைவரின் குடும்பத்தினர், முன்னணிச் செயலாளர் மற்றும் சிலரும் சமுகமளித்திருந்தனர். நாற்காலிகள் காலியாக இருப்பதைக் கண்டு அப்பக்கமாக ஓடித்திரிந்த நாய்களிரண்டு நாற்காலியில் அமர்ந்து எஜமானுக்கு ஊக்கமளித்தன.

### கூட்டத்தின் முடிவுகள்

நீண்டகால இடைவேளைக்குப் பின்னர் முன்னணி மீண்டும் கூடுவதால் பலர் முன்னணியின் அடுப்படித் திட்டங்களை மறந்து விட்டிருக்கலாம் என்ற நினைவில், முதலில் அடுப்படித் திட்டங்கள் வாசிக்கப்பட்டன.

அடுப்படிக் கொள்கைகள் இவை:

(1) தலைவருக்கு ஒரு மந்திரிப் பதவி பெற்றுக் கொடுத்தல்.

(2) கிடையாத பட்சத்தில் ஓர் உதவி மந்திரிப் பதவிக்காவது முயற்சி செய்தல்.

(3) அதுவும் கிடையாத பட்சத்தில் சில பல வழிகளில் ஊதியம் கிடைக்கத்தக்க ஒரு தொட்டாட்டு வேலைக்காவது முயற்சி செய்தல்.

இந்தக் கொள்கையை பெறுவதற்காக அவர்கள் எடுக்கவிருக்கும் நேரடி நடவடிக்கை கீழே.

### குறுக்குவழி நடவடிக்கை

(1) கருணைக் கடலாம் பெண் பிரதமருக்குப் பாத பூசை செய்தல். (பிரதமருக்கு வேண்டியோருக்கும் இப் பாத பூசை செய்யப்படலாம்.) காரணம், ஒதுங்கியிருந்தோர் பூசை செய்ததின் பலன் இப்பொழுது கைமேல் கிடைத்துவிட்டது.

(2) இனத்தின் உரிமைகளைப் பெற முயலும் எந்த இயக்கத்திற்கும் செய்யக் கூடிய இடைஞ்சல்களைச் செய்தல்.

ஆங்கிலத்தில் இந்த முடிவுகள் செய்யப்பட்டதும் நன்றியுரை தொடங்கியது- மன்னிக்கவும், தமிழ் பேசும் மக்கள் மீது வசை புராணம் பாடப்பட்டது.

அடுத்த கூட்டம் தேர்தல் நெருங்கியதும் கூட்டப்படும் என்று அவர்கள் கதைத்துக் கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்து மக்களின் துன்பமயமான வாழ்வை மலரச் செய்ய இணைப்பாட்சியாலேயே முடியும்

## அறப்போர் வென்றிட அருள் ஆண்டே!

—தமிழோவியன்—

பொங்கும் மனத்துயர் தீரவில்லை!—தமிழர்
பொருமும் நிலையும் மாறவில்லை!
எங்கும் கலங்கும் தமிழருக்கு—இனி
ஏற்றவழி நீ காட்டு ஆண்டே!

சங்கம் பலப்பல ஏற்படுத்தி—அதில்
சண்டைகள், பிளவுகள் மிகப் புகுத்திப்;
பங்க மடைந்திடும் எங்களினம்—ஒரு
பாதையில் நடத்திடத் துணைபுரிவாய்!

தன்னல வெறியினில் தலைமயங்கி—உயிர்(த்)
தன்மான மெல்லாம் விலை கொடுத்து;
இன்னல் இழைக்கும் மூடர்களுக்கு—நீ
இடித்து அறிவு புகட்டு ஆண்டே!

கொஞ்சமும் நெஞ்சத்தில் வீரமின்றி—ஒரு
கொள்கையில் பற்றுமின உணர்வுமின்றி;
அஞ்சி ஒதுங்கும் கோழைகட்கு—வீர
ஆர்வமும் உணர்வு மூட்டு ஆண்டே!

மறக்களம் புகுந்து வெற்றி கொண்ட—நீள்
மாண்புகழ்(ப்) படைத்த தமிழினத்தார்;
அறக்களம் புகுந்திட அணி வகுக்கும்—செயல்
அத்தனையும் வென்றிட அருள் ஆண்டே!

— கரவைச் சலீம் —

மண்ணில் மலர்ந்தது மக்களாட்சி. விலங்கொடித்து வெற்றி விழா நடத்த மக்களின் மனம் மகிழ்ந்தது. சுதந்திர நாட்டின் சுந்தரச் செல்வங்களானோம்.

ஈழத் திருநாட்டின் எழிலையும் பொருளாதாரச் சுபீட்சத்தையும் உச்ச நிலைக்கு உருவாக்க வேண்டுமென்று ஆசை பிறந்தது. விளைவு? மாறுபட்ட மனக்கருத்துக்கள் இதயவானில் உதயமாயின. அடிமைப்பட்ட இனம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றனர். அதிகாரத் திமிர் சிறுபான்மை மக்களை அடக்கி, அடிமைகளாக ஆள எத்தனிப்பதுதான், வியப்பின் விளிம்புக்கே இட்டுச் சென்றது தமிழ் பேசும் மக்களை. வியப்போடு அசட்டை கொண்டோம். விளைவு மலைநாட்டு வாக்குரிமைக்கு வேட்டு வைக்கப்பட்டது ஆட்சியாளர்களால். நாடற்றவர்கள் நாம், கள்ளத் தோணிகள் நாம் என்று பழிக்கப்படுகிறோம் சுதந்திர ஜனநாயக சர்க்காரால்.

நாட்டின் பிரசை, அந்த நாட்டில் பிறந்த ஒருவராக இருக்கவேண்டும். அல்லது மிகக் குறைந்தபட்சம் ஐந்தாண்டுகள் தொடர்ந்து வசித்திருத்தல் வேண்டும். மற்றொன்று பிறநாட்டு மனைவியானால் கணவன் நாட்டில் அவனுடன் இரண்டுவருடங்களாவது சீவித்திருக்க வேண்டும். இவை போன்ற விதிமுறைகள் அரசியற் சட்டத்திலுள்ள. ஆனால் ஈழத் திருநாட்டில் மலையகத்து மறவர் அரசியல் அனாதைகளாக, நாடற்றவர்களாக வாழுகின்றனர். எனினும் அரசியல் விதிமுறைகளுக்கு மலையகத்து மக்கள் உட்பட்டவர்கள்தான்.

முற்போக்கு வாதிகளான முதுகெலும்பு அற்றவர்கள், பொதுவுடைமைச் சுயநல வாதிகள், ஈழ நாட்டுக்கே உரித்தான ஒருதினுசு இராச தந்திரிகள் எல்லாரும் ஒன்றுபட்டு மலையகத்து மக்களுக்கு வாழ்வுச் சுதந்திரம் அளிக்க மறுக்கிறார்களே!

ஆனால் இந்த நாடற்றவர்கள் நாட்டை வளமாக்கி வண்ணச்சோலையாக மாற்றினார்கள், காடெல்லாம் கழனியாக்கினார்கள், குருதி கொட்டி கொழுக்கவைத்தார்கள் நாட்டின் பொருளாதாரத்தை, லங்கையை சொர்க்க பூமியாக தூரகிழக்கு ஆசிய நாடுகளில் திகழ வைத்தார்கள். செழிப்பை, வளர்ச்சியை, திறனும் வகையுமற்ற ஆட்சியாளர் சோரம்போக வைப்பது மடமை.

பெரும்பான்மைத் தொழிலாளர்களின் சேமநிதிப் பட்டியல்களை நோக்கினால், தந்தை தாய் வழிப்பாட்டன் பெயர்களைக் காண முடியாது. பிறந்த இடமும் தெரியாது என்று மகுடமிட்டிருக்கும். இவர்களுக்கு இந்த நாட்டில்வாக்குரிமையுண்டு. விஜயனின் பரம்பரை அல்லவா? மலைநாட்டு மக்களுக்கோ அரசாங்க நிபந்தனை அத்தனையுமுண்டு. ஆனால் வாழ்வில்லை. இந்தப் பாழும் அரசாங்கத்தை வாழவைப்பதும் இவர்கள்தான்.

### வாழ்க்கைத்தரம்

நாட்டையே வாழவைக்கும் நல்லவனின் வாழ்க்கைத்தரம் நாற்றமடிக்கிறது. இந்த நல்லவனை ஏமாற்றிப் பிழைக்கும் தலைவர்கள் இவர்களின் நிலையை உயர்த்த வேண்டுமென்று முதலைக்கண்ணீர் வடிக்கிறார்களே தவிர, பயன் குதிரைக் கொம்பாகிறது.

இந்த மலைநாட்டு மகனின் வீட்டை ஒருதரம் பார்த்தால் கல்லான நெஞ்சம்கூட உடைந்துபோகும். ஆறுஅடி அகல வீடு. அதனுள்ளே பெரிய குடும்பம், குடும்பத்தில் பருவப் பெண்கள்; பால் மணம் மாறாத பிஞ்சுக்குழந்தைகள். இவர்கள் எல்லாம் வாழ்வில் தவறுவதில் வியப்பில்லையே! கல்லையே கதை பேச வைத்த தமிழினத்தின் ஒரு சிலரின் வாழ்க்கைத் தரத்தை வள்ளுவன் கண்டால் மனை அறத்தை எழுதியே இருக்க மாட்டான்.

இதைவிட மோசமானது தோட்டத்து வாழ் இளம் குடும்பங்கள் பிரிந்துவாழ நினைப்பதுதான். ஏகப்பட்ட குடும்பத் தகராறுகளை விசாரிக்க முடியாமல் திண்டாடுகின்றன தொழில் இணைக் காரியாலயங்கள் மலையகத்

(13-ம் பக்கம் பார்க்க)




## நமது இன்ப வாழ்வுக்கு வழிகாண முயல்கிறது தமிழரசுக் கழகம்

## எமது ஆதரவு அதற்கே

வி. தர்மலிங்கம்

மலையகத்து மக்கள் இழந்த உரிமைகளைப் பெற்று இன்பகரமாக வாழ, நமக்கென தனி வழி வகைகளை வகுத்துக் கொள்ள வேண்டும். அதற்கு, நாம் நம் இனத்தோடு இணைந்து செயலாற்ற வேண்டும். நம்மிடையே உள்ள 'தாழ்வு மனப்பான்மைகளை' நீக்கி 'தமிழ் குடி என்றும் தலை குனிந்ததில்லை' என்று எடுத்துரைக்க வேண்டும்.

#### இதற்கான வழிகள்

இன்று நேற்றல்ல, நம் தமிழ் சமுதாயம் என்றைக்குமே யாருக்கும் அஞ்சி வாழ்ந்ததாக சரித்திரம் கூறவில்லை.

போர் மரபினரே நம்மினத்தவர்தான். இத்தகைய இனத்தவர்கள் மாற்று இனத்தாரால் வதைக்கப்பட்டு வருவதை யாரும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

ஆனால் இன்று நமக்குள் நிலவி வரும் பல முக்கிய பிரச்சினைகள் நம்மாலேயே தீர்க்கப்பட முடியாத அளவிற்கு வளர்ந்து வருகின்றன. மலைநாட்டுத் தொழிலாளர் வர்க்கம் பல கட்சிகளிலே சேர்ந்து அல்லல்படுகிறது.

நம்மினத்தவரைத் தலைவராகக் கொண்டிருந்தும் கூட ஏன் இந்தத் தாழ்வு நிலை? என்று யாரும் இப்போது நம்மைப் பார்த்துக் கேட்காமல் விட்டதில்லை. இவைகள் யாரால் வந்த தொல்லைகள்? யாரோ ஒரு சிலரின் நன்மைக்காக நம்மை வசப்படுத்திக் கொண்டார்கள், இனியும் நாம் எதையும் விட்டுக்கொடுப்பதிற்கில்லை.

'காங்கிரசு'க்காரர்களையோ, கம்யூனிஸ்டு சமசமாஜிஸ்டுகளையோ நம்பி எதுவித பலனுமில்லை. நமக்கு வேண்டிய நம்மினத்தவர் அனைவரும் ஒரு கொடியின் கீழ் நின்று உரிமைகளுக்காகப் பாடுபட்டு உயிர் நீக்கினும் பரவாயில்லை. அதற்குரிய ஒரே வழி, இலங்கைத் தீவின் ஈடு இணையற்ற 'தமிழ்த் தலைவர்' 'தமிழர் தந்தை' செல்வாவின் தலைமையின் கீழ் இயங்கும் தமிழரசுக் கட்சி ஒன்றுதான்.

மலையகமெங்கும் தம் கிளைகளை ஏற்படுத்தி நம் குறைகளை நீக்கும்பணியில் இயங்கி வருகிறது இக்கட்சி. இதுஒன்றினால்தான் இன்றைய அரசின் கொட்டத்தை அடக்க முடியும். நமது இன்ப வாழ்விற்கும் வழிகாண இயலும். இலங்கைத் தமிழ் அரசுக் கழகம் மலையகத்தில் நிலவி வரும் பல முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். இது எப்படி?

மொழி, இனம், பண்பாடு, கலை, கலாச்சாரம் ஆகியவற்றில் நமக்கும் வடகீழ் தமிழ் மக்களுக்கும் வேற்றுமை கிடையாது!

#### அனைவரும் தமிழரே

தமிழர் என்றால் நாம் அனைவரும் தமிழரே தான், தன்மானமிக்கவர்கள். நம்மிடையே வேற்றுமை கற்பிக்கச் சிலர் இல்லாமல் இருக்க மாட்டார்கள். இருந்தாலும், மலையகத்தில் ஒரு தொல்லை யென்றால் தலையகத்தில் பல தொல்லைகளாகவிருக்கும். இத் தொல்லை, இருவருக்கும் பொதுவான ஒன்றேதான். நாம் அனைவரும் தமிழன்னையின் புதல்வர்கள் அல்லவா?

'நாடற்றவன்' 'கள்ளத் தோணி' என்ற பட்டங்கள் நம்மை அலங்கரிக்கின்றன. இதனால் நம் இனத்தவருக்கு ஒரு புது எழுச்சி ஏற்பட்டிருக்கிறது. எல்லா வகையிலும் சிலரால் நயவஞ்சகமாக காட்டிக் கொடுக்கப்பட்டு நமக்குக் கிடைத்த இச் 'சிறப்புப் பெயர்'களை ஒழித்தற்குரிய ஒரே வழி, பாகுபாடின்றி, பண்பாட்டால் ஒன்று பட்டு தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்து உழைத்து நாம் இழந்த சகல உரிமைகளையும் பெறப் பாடுபடுவதே!

மொழியும், இனமும் நம திரு விழிகள். இவைகளை மலையகத்து மக்கள் மனதிற் கொண்டு செயலாற்றினால் நிச்சயம் நாம் நம்மினத்தவரின் நலனுக்கான நம் கடமைகளைச் செய்தவர்கள் ஆவோம்.

காலமாறுதலுக் கேற்ப நாம் நம்மை மாற்றிக்

(13 ம் பக்கம் பார்க்க)





ராஜபீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றேதான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜாபீடி கம்பனி
கொழும்பு-14.

டெலிபோன் : 2739


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சியாளருக்கு நமது நிலையை எடுத்துரைக்க முன் வாரீர்

## அரசியல் கட்சித் தலைவர்கட்கு
## அரசாங்க எழுதுவினைஞர்சங்கம் வேண்டுகோள்

'செப்டம்பர் 1956-ம் ஆண்டுக்குப் பின்னர் அரசாங்க சேவையிற் சேர்ந்த எல்லாத் தமிழ் அரசாங்க ஊழியர்களையும் சேவையில் உறுதிப் படுத்தாது இருக்கிறது இன்றைய அரசாங்கம். தற்போது நாட்டை எதிர் நோக்கும் நெருக்கடியான பொருளாதார நிலையில், இவ்வாறு, பெரும் தொகையான அரசாங்க ஊழியர்களின் திறமையைப் பாதிக்கக் கூடிய ஏற்பாடுகளை அகற்றி அவர்களுக்கு நீதி வழங்க வேண்டியதின் அவசியத்தை ஆட்சிபீடத்திற்கு எடுத்துரையுங்கள்.'

அரசியல் கட்சிகள் அனைத்தின் தலைவர்கட்கும், கட்சிச் சார்பற்ற பாராளுமன்ற, மூதவை உறுப்பினர்கட்கும், எல்லாத் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கட்கும், அரசாங்க எழுதுவினைஞர் சங்கப் பொதுச் செயலாளர், 'தமிழ்பேசும் அரசாங்க ஊழியரை எதிர் நோக்கும் பிரச்சினைகள்' என்ற தலைப்பில் விடுத்த ஒரு வேண்டுகோளில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அந்த வேண்டுகோளில் கூறப்பட்டிருப்பதாவது:—

அரச கரும மொழிச் சட்ட அமுலால் தமிழ் பேசும் அரசாங்க ஊழியருக்கு ஏற்பட்டுள்ள பாரதூரமான இடர்களைக் களைதற்குத் தங்களினதும் தங்களுக்கு ஒத்துழைப்பு நல்கக் கூடியோரினதும் தலையீட்டினை வேண்டி அ. எ. ச. தங்களை அணுகுகின்றது. மேற்படி சட்டம் நிறைவேறியதிலிருந்து அரசாங்கத்தின், குறிப்பாக இச்சட்ட அமுலோடு தொடர்புடைய திணைக்களங்களின் போக்கு விபரீதமாக மாறி வந்துள்ளது. இதனால் சிங்களவரல்லாத ஒவ்வொரு அரசாங்க ஊழியரும் அரசவைச் சட்டத்தின் 29ம் பிரிவின்படி தெளிவாக விளக்கப்பட்ட பாரதூரமான இடர்ப்பாடுகளுக்குள்ளாக்கப்படுகின்றார்கள். சங்கம் இங்கு அரச கரும மொழிச் சட்ட ஏற்பாடுகளின் தன்மைகள் பற்றி எடுத்துரைக்க விரும்பவில்லை. ஆனால் இச்சட்டம் அமுல் செய்யப்படும் விதம் சட்டமியற்றிய காலை— அதிலும் குறிப்பாக இதனை அமுல் செய்தற்கான வழிமுறைகள் வகுக்கப்பட்ட காலை—வழங்கப்பட்ட உறுதிமொழிகளிலிருந்து எவ்வாறு மாறுபடுகின்றன என்பதை விளக்கச் சங்கம் விழைகின்றது.

### பிரச்சினையின் பின்னணி

காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்காவும், பிற அரசாங்கப் பிரமுகர்களும் பாராளுமன்றத்தில் கொடுத்த பல்வேறு உறுதிமொழிகள், இவ்வேண்டுகோளுக்கு மிகப் பொருத்தமுடையனவாயினும், அவை யாவருக்கும் தெரிந்த விடயமாகையால், இங்கு எடுத்துச் சொல்லப்படவில்லை. ஆனால் காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்கா அவர்கள் அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்த நிருபங்களில் சிங்களவரல்லாத அரசாங்க ஊழியர்கட்குத் தாம் முன்பளித்த உறுதிமொழிகளைப் பெருமளவில் உள்ளடக்கி வகுத்த கோட்பாடுகள் பற்றிக் குறிப்பிட விரும்புகிறோம். இவை பாராளுமன்ற உறுப்பினர்கட்குத் தெரிந்திருக்குமாதாகையால் இவை பற்றிச் சிறிது விரிவாகக் குறிப்பிடவேண்டியது அவசியமெனச் சங்கம் கருதுகிறது.

### பலவந்தம் முறையன்று

அப்போது சேவையிலிருந்த எல்லா அரசாங்க ஊழியர்களும் 'தாம் பணியாற்றுதற்கான மொழி ஆங்கிலமே என்னும் நம்பிக்கையுடன் சேவையிற் சேர்ந்தவரென்றும், அந்த நம்பிக்கை இருந்ததென அரசாங்கம், அரசாங்க ஊழியர் ஆகிய இரு சாராராலும் கருதப்பட்டதென்பதில் ஐயமில்லை' எனவும் காலஞ்சென்ற பிரதமர் அரச கரும மொழிச் சட்ட அமுலுக்கான தனது நிருபங்களில் ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் 'இவ்வாறு சேர்த்துக் கொள்ளப்பட்ட ஒரு ஊழியரை—அவர் தன் சொந்த விருப்பப்படி ஒரு புதிய உடன்படிக்கைசெய்து கொண்டாலொழிய — சிங்களத்தில் கடமையாற்றும்படி பலவந்தம் செய்தல் முறையன்று' எனவும் அவர் வற்புறுத்தியுள்ளார். இதுவே அவர் கொள்கையாக இருந்தது. இதனை ஏற்றுக் கொள்வதற்கான அடிப்படைக் காரணம் 'தற்போது சேவையிலுள்ளவர்களை அரசகரும மொழிக் கொள்கையின் சாட்டில் வெளியேற்றப்படுகிறார்கள் என்ற பழிச் சொல்லுக்கு இடமிருக்கக்கூடாது' என்பதாகும். அத்துடன் 'அரசாங்க ஊழியர்கள் அரசாங்கத்துடன் முதலில் ஒப்பந்தம் செய்து கொண்டபோது ஆங்கிலத்திலேயே பணியாற்றுவார்களென எதிர்பார்க்கப்பட்ட நிபந்தனையை எள்ளளவேனும் மாற்ற அரசாங்கம் விரும்பவில்லை என்னும் அடிப்படைக் கோட்பாட்டை நிலை நாட்டுவது புத்திபோல் தோன்றுகிறது' என்பதும் ஒரு காரணமாகும்.

### பண்டாவின் கொள்கை அலட்சியப் படுத்தப்படுகிறதா?

அரச கரும மொழிச் சட்ட அமுல் பற்றி காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்கா வகுத்த வழிகாட்டியான கொள்கைகள் இவையாகும். அப்போது சேவையிலிருந்த தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்கட்கு இச்சட்டம் நிறைவேற்றியிருக்காவிட்டால் கிடைத்திருக்கக் கூடிய பதவிகளையும் வாய்ப்புகளையும் குறித்த கொள்கைகள் உறுதிப் படுத்தவில்லை. இருப்பினும் சட்டம் நிறைவேறியதால் ஏற்பட்டிருந்த குழப்பமான சூழலில் அவர்களை எதிர்நோக்கிய பிரச்சினைக்கு, இக்கொள்கைகளின் அடிப்படையில் வகுக்கப்படவிருந்த செயல் முறை, சில திருப்திகரமான தீர்வை உண்டு பண்ணியிருக்கும். ஆனால் அவர்கள் இக்கொள்கைகளை கடைப்பிடிப்பதாகப் பறைசாற்றும் அவரது வழித்தோன்றல்கள் இது போன்ற ஒரு முக்கியமான தேசிய பிரச்சினையில் அன்னார் வகுத்த செயல் முறைகளை அடியோடு அலட்சியம் செய்வார்களென்று சிறிதளவும் எதிர்பார்க்கவில்லை.

### மனித உரிமைக்கு மாறுபட்ட செயல்

இவ்வாறு காலஞ்சென்ற பிரதமரின் கொள்கையினின்று அரசாங்கம் பிறந்தமையாலும், எதிர்பாராத விதத்தில் அரச கரும மொழிச் சட்டத்தை அமுல் செய்வதாலும், பலர் சேவையிலிருந்து விலகவும் எஞ்சியுள்ளோர் எப்படியும் இந்த

(13-ம் பக்கம் பார்க்க)



மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற வள்ளுவர் விழாவில் திருமதி கங்கேஸ்வரி கந்தையா உரை நிகழ்த்துவதை மேல் படத்திலும், துறை நீலாவணை தமிழ் பேரவை நடத்திய கவிதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கவிஞர் இராஜபாரதி, தேனருவி நாடகப் போட்டியில் முதல் பரிசு பெற்ற நாடகாசிரியர் திமிலைத்துமிலன் ஆகியோருக்கு, மட்டு நகர் வில்லுப் பாட்டுக் குழு நடாத்திய பாராட்டு விழாவிற்குத் தலைமை தாங்கிய வித்துவான் கமலநாதன் உரை நிகழ்த்துவதைக் கீழ்ப் படத்திலும் காணலாம்.

—படம்: "இதயம்"

## கவிதைப் பூங்கா

### விழி(ளி)த்திட்டேன் அந்தோ! தேவா!!

"ஜெயம்"

ஆதாமும் ஏவாள் மற்றும்
அவர்வழி வந்த யாரும்
பாதகம் செய்த தாலே
பாவத்தில் ஆழ்ந்த தாலே!
காதலால் உந்தப் பட்டு
கடவுளின் நிலையும் மாறி
மாதாவின் மைந்தனாக
மாநிலம் வந்து உதித்தாய்!

முப்பத்து மூன்று ஆண்டு
முனைந்தாய் உலகைத் திருத்த
அற்புதங்கள் செய்து காட்டி
அருளையும் பொழிந்து நின்றாய்!
பொற்புறு போதகத் தாலே
பொல்லாத பாவம் போக்கி
நித்தியத்(தை) காட்டிச் சென்றாய்
நிர்மலனே! நேச தேவா!

பாருளோர் பாவம் போக்க
பாரச் சிலுவை சுமந்து
காருளோர் கள்வன் போல
கட்டியடிக்கப் பட்டு!
பேருளோர் பேடியென்ன
பெரும் பாரச் சிலுவை தொங்கி
நேருளோர் வாழ வேண்டி
நேசனே! உயிர் துறந்தாய்!

மண்ணிலே பாவத்தால் வெந்த
மக்களுக்கு மோட்சம் காட்ட
எண்ணிலா துன்பம் ஏற்று
ஏனோ நீயும் மரித்தாய்!
கண்ணிலே நீரும் மல்க
கருத்திலே அன்பும் பொங்க
விண்ணிலே வாழும் இறைவா!
விழி(ளி)த்திட்டேன் அந்தோ! தேவா!!

## கவிதை நெஞ்சம்

யூ. எல். தாவூத்

சிறியதொரு காவியமே கண்டிடாத
சீர்மைமிகு பாரஸீக நாடு ஈன்ற
உரியபே ரரசர்களி னுயர்வை எல்லாம்
உற்றகவி பலசேர்த்து நயங்க லந்து
பெரியதொரு இலக்கியத்தை ஆக்கி விட்ட
பெருமையினைப் பூத்திட்டேன்;நிறைவு பெற்றேன்
அரியநற் பணியினையே புரிந்த தற்கு
அரசுதரும் பரிசிலுனக் களிப்பே னென்றார்.

தந்தையரின் எண்ணத்தைக் கேட்ட பரங்கேஸ்
சந்தோஷம் மிகக்கொண்டாள் "நமது நாட்டின்
முந்தையோர் வாழ்வையே கலையா யாக்கி
முடிமன்னர் பரிசிலினை நோக்கி யுள்ளீர்!
சிந்தையி லய்யமே யொன் றுளது
சிருடை தந்தையே செல்வா" என்றாள்
"எந்தனி னுயிரேய மகளே யுந்தன்
இதயத்தி லுள்ளதை உரைப்பா" யென்றார்.

"பன்னருஞ் சுவைநிறை பாக்கள் கொண்ட
பாரகா வியத்தை ஏற்று வாழ்த்தி
பொன்னினைப் பரிசிலா யளித்துப் பாரின்
புகழினை ஈட்டுவா ரெங்கள் நாட்டின்
மன்னவ ரெனவெண்ணி மகிழு முங்கள்
மாசறு "ஷாஹ்நாமா திறனை யோர்ந்து
பொன்னினைத் தருவாரோ? என்ற ஐயம்
புந்தியில் தோன்றியே யுளது" என்றாள்.

பரங்கேஸி னுளநிலை கண்ட கவிஞர்
பரிவோடு அவள்சென்னி தடவிச் சொன்னார்
அரசரே அளித்திட்ட வாய்மையில் நாம்
ஐயமே கொள்ளுதல் தவறு அம்மா!
தரணியே அறிந்திடச் சொன்னார் கோமான்
தருவதாய் ஆயிரம் பொன்க ளென்று
புரவலர் நெறியினில் தவறி ழைப்பின்
பூதல மிகழ்ந்திடு மிழிவ டைவார்.

என்றுசொலுந் தந்தையா ருறுதி கேட்டு
இதயமே மலர்ந்திடு மின்பு பூண்டு
"நன்றுதான்! ஷாஹ்நாமா நிறைவு பெற்ற
நற்செய்தி மன்னருக் கியம் பிடுக
மண்ணெலாம் போற்றிட அவர ளிக்கும்
மாபெரும் பரிசினைக் காண்போ மென்றாள்.
முன்னமே இயம்பியிதை அரச ருக்கு
முடங்கலை அனுப்பினே னென்றார் கவிஞர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரங்கம் 19**

**POBLACHT NA H EIREANN**

# அயர் குடியரசின் இடைக்கால அரசாங்கம்

## அயர்நாட்டு மக்கள் அறிவதற்கு

### அயர் புதல்வர்காள்! அயர் புதல்வியர்காள்!!

இறைவனின் பெயராலும் இனத்தை வாழ வைத்த மூதாதையர் பெயராலும், அயர்நாடு, தான் ஈன்றெடுத்த மைந்தர்களைத் தனது கொடியின் கீழ் கூடுமாறும் கூடி விடுதலைக்காக முழங்குமாறும், எம் மூலமாக, அறை கூவி அழைக்கின்றாள்.

இரகசியமாக இயங்கும் புரட்சிகர நிறுவனமாகிய அயர் குடியரசு மன்றத்தின் மூலமாயும் வெளிப்படையாக இயங்கும் இராணுவ நிறுவனமாகிய அயர் தொண்டர் படை மூலமாயும் தனது வீரப் புதல்வர்களை ஒன்று திரட்டி,ஒழுங்காய்ப் பயிற்சி அளித்து, பொருத்தமான வேளை வரும் வரையும் மன உறுதியுடன் காத்திருந்து, அவ் வேளை இப்போழ்து வந்து விட்டதென முடிவு செய்து, தனது சொந்தப் பலத்திலேயே பெரும் நம்பிக்கை வைத்து, நாட்டைத் துறந்து அமெரிக்காவில் குடியேறிய தனது புதல்வர், புதல்வியர் ஆகியோரின் துணையுடனும் தயாளமும் நிரமும் நிறைந்த ஐரோப்பிய நண்பர்களின் உதவியுடனும், அயர்நாடு, வெற்றி நிச்சயம், நிச்சயம் என்று முழங்குகின்றாள்.

அயர்நாட்டிற்கு உரித்துடையவர் அயர்நாட்டவரே. அயர்நாட்டின் விதியை நிர்ணயிக்க அயர் நாட்டவருக்கே உரிமை உண்டு. இந்த உரிமைகள் மேன்மையானவை, தோல்வியற்றவை. அன்னிய அரசோ, அன்னிய மக்களோ அயர்நாட்டை அபகரித்து வைத்திருந்த போதிலும் அவ்வுரிமைகள் அழிந்தொழிந்து போகவில்லை; அயர் இனம் பூண்டோடு அழிக்கப்பட்டால் அன்றி, அவை அழியப் போவதுமில்லை. கடந்த மூன்று நூற்றாண்டுக் காலத்தில், அயர் நாட்டின் ஒவ்வொரு சந்ததியினரும் தமது இன விடுதலையைப் பெறுவதற்கு உறுதி பூண்டு, அவ்வுரிமைகளைப் படைப் பலம் மூலம் ஆறு தடவைகள் நிலை நிறுத்தியுள்ளார்கள். இந்த அடிப்படை உண்மையை ஆதாரமாகக் கொண்டும் ஆயுதங்களைப் பக்கபலமாகக் கொண்டும், நாங்கள், இதனால், உலக மக்கள் கண் முன்னே, அயர் குடியரசை மகிமை பொருந்திய ஒரு சுதந்திர நாடாகப் பிரகடனப் படுத்துகின்றோம். அயர் குடியரசின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காகவும் அதன் மக்களின் சுக வாழ்வைப் பேணுவதற்காகவும் அக் குடியரசை உலக நாடுகளில் மேன்மை பொருந்திய ஒரு நாடாக உயர்த்துவதற்காகவும் எமது உயிரையும் எமது இராணுவத் தோழர்களின் உயிரையும் அர்ப்பணிப்பதாகச் சத்தியம் செய்கின்றோம்.

ஒவ்வோர் அயர் மகனிடமிருந்தும் ஒவ்வோர் அயர் மகளிடமிருந்தும் நாட்டுப் பற்றை எதிர்பார்க்க அயர் குடியரசுக்கு உரிமை உண்டு—அந்த நாட்டுப் பற்றை, இப்பொழுது அயர் அன்னை, எம் மூலம் கோருகின்றாள். மக்கள் அனைவருக்கும் சம சந்தர்ப்பமும் மத உரிமையும் மற்ற உரிமைகளும் அளிக்கப்படுமெனக் குடியரசு உறுதி மொழி கூறுகின்றது; அன்னிய ஆட்சியினர் பெரும்பான்மை மக்களையும் சிறுபான்மை மக்களையும் பிரித்து வைத்து வளர்த்து வந்த வேற்றுமைகளைப் பொருட்படுத்தாது, நாட்டு மக்கள் அனைவரையும் சமமாகக் கணித்து, அவர்களுடைய மகிழ்ச்சிக்கும் செழிப்புக்கும் உழைக்கும் என உறுதி கூறுகின்றது.

நிரந்தரமான குடியாட்சி அரசு ஒன்றை நிறுவுவதற்குரிய சூழ்நிலையை எமது படை உருவாக்கக் காலம் செல்லும். அந்த இடைக்காலம் முழுவதும் இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கும் அரசாங்கம், குடிகளினதும் இராணுவத்தினதும் விவகாரங்களை, குடிகளின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்து, நிர்வகிக்கும்.

அயர் குடியரசின் பாதுகாப்பை எல்லாம் வல்ல இறைவனிடம் விட்டு விடுகின்றோம். அவருடைய ஆசிகள் எமது பலத்தை அதிகரிக்குமாறு வேண்டுகின்றோம். நமது நியாயமான கோரிக்கைக்கு, கொடுமை, கொள்ளை, கோழைத்தனம் ஆகியவைதான் அபகீர்த்தி ஏற்படுத்தும். ஆகையினால் அவைகள் ஏற்படா வண்ணம் நாம் இறைவனை இறைஞ்சுகின்றோம். புனிதமான இவ்வேளையில், அயர் இனம், வைராக்கியத்தினாலும் கட்டுப்பாட்டினாலும் உயிர்த் தியாகம் செய்யத் தயாராவதினாலும், மகிமை பொருந்திய இக் குறிக்கோளை அடைவதற்குத் தகுதி வாய்ந்ததெனை நிரூபிக்க வேண்டும்.

இடைக்கால அரசாங்கத்தின் சார்பில்,
(கையொப்பம்)

தோமஸ் ஜே. கிளாக்,

| | |
|---|---|
| சோண் மக் டயாமடா, | தோமஸ் மக்டொனு, |
| ப. ஹெ. பியேஸ், | எமன் கென்ற், |
| ஜேம்ஸ் கொனோலி, | யோசேப் பிளங்கே. |

# பட்டாளம்-தொண்டர் மோதல் டப்ளின் நகரெங்கும் சன்னமாரி

தொண்டர்கள் ஜேக்கப் விஸ்கோத்துத் தொழிற்சாலையையும் அதையடுத்திருந்த கட்டடங்களையும் கைப்பற்றினர்.

ஏமன் டி வேலரா தலைமையிலுள்ள மூன்றாவது பட்டாலியனைச் சேர்ந்த தொண்டர்கள் போலண்ட் போறனையையும் அதற்கு அருகிலிருந்த மதுவடிச் சாலையையும் கைப்பற்றி இங்கிலாந்திலிருந்து வரவிருக்கும் பட்டாளத்தினரைத் தாக்குவதற்காகக் காத்திருந்தனர்.

ஏமன் கென்ற், கதல் புருகா ஆகியோரின் தலைமையில் இயங்கிய நான்காவது பட்டாலியனைச் சேர்ந்த தொண்டர்கள் கிங்ஸ் பிரிஜ் யிலிருந்து ஆங்கில இராணுவத்தினருக்கு எதிராகக் கொரில்லாப் போர் புரியத் தொடங்கினர்.

திங்கட்கிழமையும் செவ்வாய்க்கிழமையும் தலைமை அஞ்சல் அலுவலகத்தில்

**'கோமகன்' 'மாமல்லன்'**

இருந்த தொண்டர்களுக்கும் ஆங்கிலப் பட்டாளத்தினருக்கும் இடையில் உக்கிரமான போர் நடைபெற்றது. தொண்டர்கள், ஒளிந்திருந்து துப்பாக்கிகளாலும் படைத்துப்பாக்கிகளாலும் சுட்டனர். இராணுவத்தி

## வந்திறங்கியது 10,000 துருப்புகள்

புகைவண்டி நிலையத்தைக் கைப்பற்றி இருப்புப் பாதைகளுக்குக் குறுக்கே சிலிப்பர் கட்டைகளைத் தடையாகப் போட்டனர்.

பினிக்ஸ் பூங்காவில் இருந்த அரசாங்க வெடி மருந்துச் சாலைக்குச் சிறுவர்கள் சிலர் தீ வைத்தனர். அது சுவாலை விட்டெரிந்தது. பொலீஸார் தலத்திற்கு விரைந்தனர். சிறுவர்களோ ஓடி மறைந்தனர்! இச் சிறுவர்களின் திரமே திரம்!

நகர மண்டபமும் மற்றும் முக்கிய கட்டடங்களும் புரட்சியாளரிடம் சிக்கின. பத்திரிகை அலுவலகங்கள் சிலவும் கைப்பற்றப்பட்டன. அவ்வாறு கைப்பற்றப்பட்ட பத்திரிகை அலுவலகம் ஒன்றின் மேல் மூவர்ணக் கொடி

னர் படைத்துப்பாக்கிகளாலும் ஏந்திரத் துப்பாக்கிகளாலும் எதிர்த்துத் தாக்கினார்கள்.

செவ்வாய்க்கிழமையன்று, அயர்நாட்டின் மேற்குக் கரையிலுள்ள கோல்வே மாவட்டத்திலிருந்த 1,000 தொண்டர்கள் ஆங்கிலேயரின் படை வீடுகளைத் தாக்க முற்பட்டனர்; பாலங்களையும் தந்திக் கம்பிகளையும் நாசமாக்கினர்; அத்தென்றி பட்டணத்தைக் கைப்பற்றி அங்கு எறிகுண்டுகளை ஏராளமாகத் தயார் செய்து ஆங்கிலேயப் பட்டாளத்தினரைக் கதி கலங்க வைத்தனர்.

புதன்கிழமை, சுதந்திர மண்டபம் ஆங்கிலேயரின் களத் துப்பாக்கிகளால் தரைமட்டமாக்கப்பட்டது; பக்

துப்பாக்கிச் சூடு எங்கிருந்து வருகின்றது என்பதை அறிய முடியாது பின்வாங்கி ஓடினார்கள்! கிங்ஸ்ரௌண் துறைமுகத்தில் தங்கியிருந்த மற்றப் பட்டாளத்தினரையும் சேர்த்துக் கொண்டு, அவர்கள் டப்ளினை நோக்கித் திரும்பவும் அணிவகுத்துச் செல்லத் தொடங்கினார்கள்.

தளபதி ஏமன் டி வேலரா யுத்த வியூகங்களைக் கையாளத் தொடங்கினார். தாம் கைப்பற்றிய மது வடிச்சாலையின் மீது மூவர்ணக் கொடியைப் பறக்கவிட்டு, அங்கிருந்த தொண்டர்கள் அனைவரையும் அப்புறப்படுத்தினார். வீதியோரத்திலிருந்த மற்றக் கட்டடங்கள் அனைத்திலும் தொண்டர்களை நிறுத்தினார். இக்கட்டடங்களைத் தாண்டியதும் எதிர்ப்படும் பாலத்திற்கு அணித்தாயுள்ள வீடுகளிலும் தொண்டர்களை நிறுத்தினார்.

பிற்பகல் 3-30 மணியளவில் ஆங்கிலப் பட்டாளத்தினர் மீண்டும் போலண்ட் போறனை அருகாக அணிவகுத்து வரலாயினர். மது வடிச்சாலையின் மீது மூவர்ணக் கொடியைக் கண்டதும் சட்டிப் பீரங்கிகளால் மது வடிச்சாலையைத் தாக்கத் தொடங்கினார்கள்! அந்த மது வடிச்சாலையில் அயர் தொண்டர்கள் எவரேனும்




யை சோண் கொனோலி உயர்த்தும் பொழுது இராணுவத்தினரால் சுடப்பட்டுத் தலத்திலேயே மாண்டார்.

டப்ளின் மாவட்டத்தின் வட பகுதியில், தோமஸ் ஆகஸ் தலைமையிலுள்ள தொண்டர்கள் பொலீஸ் படை வீட்டைக் கைப்பற்றினர்; பெல்பஸ்ற்றையும் டப்ளினையும் இணைக்கும் புகைவண்டிப் பாதையைத் தகர்த்து நாசமாக்கினர். ஏறத்தாழ ஐந்து மணித்தியாலமாகத் தொண்டர்களுக்கும் பொலீஸாருக்கும் இடையில் நடைபெற்ற போராட்டத்தில் ஒரு பொலீஸ் இன்ஸ்பெக்டர் கொல்லப்பட்டார்; பல பொலீஸ்காரர்கள் காயமடைந்தனர்; இறுதியில், அவர்கள் தொண்டர்களிடம் சரணடைந்தார்கள். ஆயுதங்களையும் பொலீஸ் உடைகளையும் பறித்துக்கொண்டு பொலீஸ்காரர்களைத் தொண்டர்கள் உதைத்துத் துரத்தினார்கள்.

அயர் நாட்டின் தென் கிழக்குக் கரையிலுள்ள வெக்ஸ்பட் மாவட்டத்திலிருந்த தொண்டர்கள் 600 [illegible] கேள்வியுற்றதும் வினிகர் மலை

கத்திலிருந்த மற்றக் கட்டடங்களும் தகர்க்கப்பட்டன.

இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்ட 10,000 பட்டாளத்தினரும் கிங்ஸ்ரௌண் துறைமுகத்தில் புதன்கிழமைதான் வந்திறங்கினர். அவர்களில் ஒரு பகுதியினர் டப்ளினை நோக்கி அணிவகுத்துச் செல்லலாயினர். போ

இல்லையென்பதை மூட்டாள்களான பட்டாளத்தினர் அறியவில்லை!! பட்டாளத்தினர் இவ்வாறாகத் தாக்குகையில் வீதியின் இரு மருங்கிலும் இருந்து அயர் தொண்டர்கள் அவர்களைத் தாக்க ஆரம்பித்தனர். ஐந்து மணித்தியாலங்களாக கடுஞ்

## கட்டிடங்கள், பாலங்கள், தண்டவாளங்கள் தகர்ந்தன

**அரங்கம் 20**

சுதந்திர அயர் குடியரசுப் பிரகடனம் வாசிக்கப்பட்டு முடிந்ததும், தளகர்த்தர் ஜேம்ஸ் கொனோலி சேனபதி பியேஸை நோக்கி, "இந்நாளைக் கண்டு களிப்பதற்கு உயிரோடு இருந்தோம். இறைவனுக்கு நன்றி" என்று உணர்ச்சிவசப்பட்டுக் கூறினார். பிரகடனத்தின் பிரதிகள் டப்ளின் நகரெங்கும் சுவர்களில் ஒட்டப்பட்டன. தலைமை அஞ்சல் அலுவலகம் சுதந்திர அயர் குடியரசின் தற்காலிகத் தலைமை நிலையமாக்கப்பட்டது. சேனபதி பட்றிக் ஹென்றி பியேஸ் குடியரசு அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

எட்வேட் டேலி தலைமையிலுள்ள முதலாவது பட்டாலியனைச் சேர்ந்த தொண்டர்கள் 'போர் கோட்ஸி' லுள்ள வெடி மருந்துச்சாலைகளைக் காவல் புரிந்த இராணுவத்தினருடன் மிகவும் தீவிரமாகப் போராடி, அவர்களைத் தோற்கடித்து, வெடி மருந்துச் சாலைக்குத் தீ வைத்தனர். அத்துடன் புகைவண்டிப் பாதைகளைக் கொளுத்தினர்; பாலங்களை உடைத்தனர்; தந்திக் கம்பிகளை அறுத்துத் தொண்டர் படை நிலையங்களுக்கிடையில் தொடர்பு ஏற்படுத்தினர்.

தோமஸ் மக்டொ[illegible] மையிலுள்ள இரண்[illegible] பட்டாலியனைச் சேர்ந்த

## தடுத்து நிறுத்தினர் 130 தொண்டர்கள்

லண்ட் போறனைக்கு அண்மையில் அவர்கள் வந்ததும் எதிர்பாராத விதமாக டி வேலராவின் தலைமையிலுள்ள தொண்டர்களின் தாக்குதலுக்கு உட்பட்டனர். தொண்டர்கள் பாவித்த துப்பாக்கிகளிற் சில பழையனவாக இருந்ததால் இரண்டு, மூன்று சூடுகளுக்குப் பின் அவை கொதிப்படையத் தொடங்கின. சூட்டை எண்ணெயில் தணித்துத் திரும்பவும் தொண்டர்கள் சுட்டார்கள். ஆங்கிலப் பட்டாளத்தினர்

சமர் நடைபெற்றது. பட்டாளத்தினர் சிறிது சிறிதாக முன்னேறிப் பாலத்தை அடைந்தனர். அங்கு அவர்களுக்காகச் சன்ன மாரி காத்திருந்தது. ஆத்திரமடைந்த பட்டாளத்தினர் அண்மையிலுள்ள வீடுகளுக்கு நெருப்பு வைத்து விட்டுப் பாலத்தைக் கடந்து டப்ளினை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். இந்தச் சமரில் ஈடுபட்ட அயர் தொண்டர்கள் 130 பேரே! இறந்தவர்கள் 6 பேர்!! ஆங்கிலேயப் பட்டாளத்தினரில் மாண்டவர்கள் 220 பேர்!!!

(வளரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1963 ஏப்ரல் மாதம் 14-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


## தமிழியக்கம்
## மொழியுரிமைப் போராட்டம்

போராட்டம் தொடங்கிவிட்டது "எல்லாம் தமிழ் இயக்கம்" தமிழ்ப்பகுதியெங்கும் பரவுகிறது. மக்கள் ஆதரவும் திரளுகிறது வட, கீழ் இலங்கையிலே மக்களைப் பெரிதும் ஈர்த்துள்ளது இவ்வியக்கம். மக்களிடையே உற்சாகம் பொங்குகிறது. மொழியுணர்ச்சி பெருக்கெடுக்கிறது. இனித் தங்கள் அலுவல்கள் அனைத்தும் தமிழில் மட்டுமே என்று சபதம் செய்கின்றனர்.

இன்னுயிர்ந்தேனும் இனத்தைக் காப்பதென தமிழ் பேசும் மக்கள் தீர்மானித்து விட்டனர். அதற்கேற்ப உரிமைப் போராட்டத்தின் முற்பகுதி தொடங்கிவிட்டது. அந்த மகத்தான உரிமைப் போராட்டத்தின் முதற் கட்டம்தான் எல்லாம் தமிழ் இயக்கம்.

போராட்டம் தொடங்கிய அன்றே வட இலங்கையில் திணறியது சிங்களம். சிங்களத்தைத் திணிக்க வடக்கே அனுப்பப்பட்ட சிங்கள அதிகாரிகள் விழி பிதுங்கினர். சிங்களம் படித்த தமிழ் அதிகாரிகளே சிங்களத்துக்குச் சமாதி கட்டிவிட்டு தமிழில் கருமமாற்றினர்.

"எல்லாம் தமிழ்" எங்கும் முழங்குகிறது. தமிழ் முழக்கம் கேட்கக் கேட்க, சிங்களம் மட்டும் சட்டம் மூலையில் பதுங்குகிறது. மக்களின் ஆர்வத்தைப் பெருமளவில் தட்டியெழுப்பியுள்ளது தமிழியக்கம்.

இவ்வியக்கம் ஓர் அகிம்சைப் போராட்டம். சிங்கள மக்களுக்கு "எல்லாம் சிங்களம்" என்றால், தமிழ் பேசும் மக்களுக்கு "எல்லாம் தமிழ்" என்ற நியதியை நிலைநிறுத்துகிறது தமிழியக்கம்.

தமிழ் பேசும் மக்கள் ஒவ்வொருவரும் இயக்கத்தில் பங்கு பற்றினால், அன்றே மூட்டை முடிச்சுகளுடன் வெளியேறிவிடும் சிங்களம் மட்டும் சட்டம். அச் சட்டத்தைச் செல்லாக் காசாக்கி, தமிழ்ப் பிரதேசத்திலிருந்து விரட்டியடிப்பதே இவ்வியக்கத்தின் அடிப்படை நோக்கம். ஒவ்வொருவரும் தம் அலுவல்களைத் தமிழில் செய்தால் சிங்களம் செயலற்று விடும் என்பதில் ஐயம் வேண்டாம்!

மொழிப் பிரச்சினையைத் தீர்க்கும் திறமை-மொழியுரிமையைப் பெற்றுக்கொடுக்கும் பேராற்றல்—சிங்களத் திணிப்பைச் சிதறடிக்கும் திராணி—சிங்களம் படிக்காமலே அரசாங்க சேவைசெய்ய வாய்ப்பளிக்கும் வலிமை—தமிழ் பேசும் இனம் தலை நிமிர்ந்து நிற்க வழிவகுக்கும் சக்தி—அத்தனையும் தன்னகத்தே கொண்டதுதான் தமிழியக்கம்.

எல்லாம் தமிழ் இயக்கம் சிங்களம் மட்டும் சட்டத்துக்கு ஒரு நேரடிச் சவாலாகும்

இத்தகைய மாபெரும் சக்திவாய்ந்த ஓர் இயக்கத்தைத்தான் "இது போராட்டமல்ல" என்கிறது ஒரு தமிழ்த் தினசரி. இது சாதாரண நடவடிக்கைதான் என்கின்றனர் வேறு சிலர். இயக்கத்தின் வலிமை அவர்களுக்குத்தெரியவில்லை. இவ்வியக்கம் வாகை சூடிய அன்றே தமிழ் மொழி அரியாசனமேறி விடும் என்பதை அவர்கள் உணர வேண்டும்.

போர் முரசு முழங்கியதும் பதைபதைத்துப்போன தீய சக்திகள் சில, நாசவேலையில் இறங்கியுள்ளன. மக்களின் கவனத்தைப் போராட்டத்திலிருந்து வேறு திசையில் திருப்புவதே அவர்கள் செய்யும் பித்தலாட்டப் பிரசாரத்தின் அந்தரங்க நோக்கம். இத்தீய சக்திகளுக்கு ஆட்சியாளரும் ஆக்கமளிக்கின்றனர், தீய எண்ணத்துடன்.

இதற்கிடையே ஒரு சமரச நாடகம் வேறு. தமிழ் பேசும் மக்கள் அணியைப் பிளவுபடுத்தும் முயற்சிகள் வெவ்வேறு உருவங்களில் நடைபெறுகின்றன.

உண்மைப் பிரதிநிதிகளை ஒதுக்கிவிட்டு, பதவி ஆசை பிடித்தலையும் செல்லாக்காசுகளுடன் "குசுகுசு" கூட்டங்கள் நடத்துகின்றனர் ஆட்சியாளர். தமிழ் பேசும் மக்களுக்கு ஏதோ உரிமைகளை வாரி வழங்கப் போவதாகவும் பாசாங்கு செய்கின்றனர். மக்களால் ஒதுக்கித் தள்ளப்பட்ட ஒத்துழைப்புத் தலைப்பாகைகளைக் கைக்குருவியாக்குகின்றனர்.

போர் முரசு முழங்கியதுதான் தாமதம்—வட்டமேசை, சதுரமேசை, சமரசப் பேச்சு, அடிப்படை உரிமைச் சட்டம் என்றெல்லாம் பேச்சுகள் கிளம்பிவிட்டன. அதற்கு முன்பு அவர்களின் கவனமும் தீவிரமும் சிங்களத்தைத் திணிப்பதில்தான்.

இந்த மாய்மாலங்களில்—தகிடுதத்தப் பேச்சுகளில் தமிழ் பேசும் மக்கள் மயங்கிய காலம் மலையேறிவிட்டது.

பிரதமரோ, மந்திரிகளோ யாருடன் வேண்டுமானாலும் பேசட்டும், மாநாடுகள் நடத்தட்டும், பதவிகளை வழங்கட்டும். ஆனால், அபகரித்த உரிமைகளை வழங்கினாலன்றி உரிமைப் போர் ஓயாது என்பதைமட்டும் அவர்கள் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழரசுக் கட்சி சமரசத்துக்கு மாறான கட்சியன்று. உரிமைப் போராட்டங்கள் நடத்தவும், தியாகங்கள் செய்யவும் கட்சி என்றும் தயார். அதே சமயத்தில் பேச்சுவார்த்தைகள் மூலம் காரியம் சித்தி பெறுமானால் அதற்கும் கட்சி தயார். கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்திச் செய்த முடிவுகளையும்—ஏன் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தையும்கூட, மீறியவர்கள் தானே இந்த ஆட்சியாளர்கள்?

பிரசார உபாயமாகவும், நெருக்கடியான சந்தர்ப்பத்தைத் தவிர்ப்பதற்காகவும், மக்களின் உரிமை உணர்ச்சியை மட்டந்தட்டுவதற்காகவும் நடத்தும் பேச்சுவார்த்தைகள் பயனற்ற வெறும் வெளி வேடம் என்பது கட்சியின் கருத்து. இது கட்சி அனுபவபூர்வமாகக் கண்ட உண்மை.

அலரி

## மாளிகை மாநாடு எதற்காக?

### தமிழ் உரிமை காப்பதற்கா
### அல்லது
### தமது உடைமை பேணுவதற்கா?

இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சாராத வட, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் தூதுகோஷ்டி ஒன்று பிரதமரைச் சந்தித்து இலங்கைத் தமிழ் பேசும் மக்களை எதிர்நோக்கியிருக்கும் 'உண்மைப் பிரச்சினைகள் பற்றி' ஆராய்ந்ததாம். தூதுகோஷ்டியினரிடம் பிரதமர் 'பிரச்சினைகளை தீர்ப்பதுபற்றி ஆராய்வேன்' என்று கூறியுள்ளாராம்.

இந்த தூதுகோஷ்டி தமிழ் பேசும் மக்களின் சார்பில் உரிமையுடன் பேசக்கூடிய பிரதிநிதித்துவம் வாய்ந்தது என்று பிரதமர் எண்ணியுள்ளாரா? அப்படியாயின் வட-கிழக்கு மாகாண மக்கள் அனுப்பி வைத்துள்ள இதர பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் இல்லையா? இதில் எது உண்மை?

தூதுகோஷ்டியில் கலந்து கொண்ட ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களா என்றால், இல்லை. நெல்லிக்காய் மூட்டைபோல, ஐந்து சுயேச்சை உறுப்பினர்களுடன் பொறுப்பு வாய்ந்த பதவியில் அமர்ந்திருக்கும் இந்நாட்டின் பிரதமர், நாட்டை எதிர்நோக்கியிருக்கும் அதிமுக்கியமான பிரச்சினை ஒன்றைப்பற்றிப் பேச்சுவார்த்தை நடாத்தியிருக்கிறார்.

இந்த ஐந்து உறுப்பினர்களுள் ஒருவர் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர். மற்ற நால்வரும் முடிவான ஒரு திட்டமின்றிச் செயல்பட்டுக் கொண்டிருப்பவர்கள். இவர்கள் எவ்வகையில் தமிழ் பேசும் மக்கள் சார்பில் பிரதிநிதித்துவம் வகிக்க முடியும்?

தமிழ் பேசும் மக்களின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்ற இயக்கமாக இலங்கைத் தமிழரசுக்கட்சி இருப்பது இந்நாட்டின் பிரதமருக்குப் புலப்படவில்லையா?

தமிழரசுக் கட்சி போர்க்கொடி உயர்த்திவிட்டதென்றால், மேலும் தமிழ் மக்களின் சார்பில் பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் இரு சுயேச்சை உறுப்பினர்களான வவுனியாப்பிரதிநிதியும், உடுப்பிட்டிப் பிரதிநிதியும், தூதுகோஷ்டியில் அங்கத்துவம் வகித்தவர்களிலும் பார்க்க எவ்வகையில் குறைந்தவர்கள்?

இவற்றையெல்லாம் நன்கு ஊன்றிக் கவனிக்கையில் பிரதமரிடம் தூது சென்றவர்கள் தமிழர் பிரச்சினை பற்றிச் சிறிதேனும் கவலை கொண்டவர்களல்ல என்பதும், பிரதமர் தமிழ் மக்கள் பிரச்சினையைத் தீர்ப்பதில் சிரத்தையுடையவராக இருக்கவில்லையென்பதும் பட்டவர்த்தனமாகத் தோன்றுகிறது.

பிரதமரோ அல்லது தூதுகோஷ்டியில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்களோ உண்மையில் பிரச்சினைக்கு முடிவு காணும் நோக்கமுடையவர்களாக இருந்திருந்தால் தமிழரசுக் கட்சிக்கு வெளியில் இருக்கும் உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுத்திருப்பார்கள்.

தூது கோஷ்டியில் கலந்து கொண்ட [illegible] யாழ்ப்

### ஐரோப்பியரைக் கவர்ந்த தமிழியக்கம்

விடுமுறையைக் கழிப்பதற்காக யாழ் நகர் சென்றிருந்த ஒரு ஐரோப்பியர், கொழும்பில் உள்ள தமது தமிழ் நண்பருக்கு ஒரு தந்தி அனுப்புவதற்காகச் செவ்வாய்க்கிழமை தபால் நிலையத்திற்குச் சென்றிருந்தார். அங்கு தமிழியக்கத் தொண்டர்கள் மும்முரமாகச் செயலில்ஈடுபட்டிருப்பதைக் கண்டு, என்ன நடக்கிறதென்பதை விசாரித்தறிந்ததும்தான் அனுப்பவந்த செய்தியை அங்கு நின்ற ஒரு தொண்டரிடம் கூறி அதைத் தமிழ்படுத்தி, தந்தியைத் தமிழிலேயே அனுப்பி வைத்தாராம்.

பாணப் பிரதிநிதியும், 'தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தமிழர் ஒருவர் மந்திரி சபையில் இடம்பெற வேண்டும்' என்ற கருத்துப்பட முன்னர் அறிக்கைவிட்டவர்களேதான். எனவே பிரதமரிடம சென்ற தூது கோஷ்டியினரின் நோக்கம் இப்பொழுது ஒரளவாகுதல் புரிகிறதல்லவா? தமிழரசுக் கட்சி போர்க்கொடி உயர்த்தியிருப்பதைப் பார்த்த ஆட்சி பீடம் ஆட்டங் காணத் தொடங்கியுள்ளது. இந்த நேரத்தில் தாங்கள் பெற்ற பதவி அறுதியானது என்ற முடிவிற்கு இவர்கள் வந்திருப்பதில் தவறில்லை அல்லவா?

இப்படியான ஒரு நிலைமை ஏற்பட்டது இது முதல் தடவையல்ல. தமிழ் பேசும் மக்களுக்கோ அல்லது ஆட்சியாளருக்கோ இது புதுமையானதுமல்ல. கடந்த காலங்களிலும் இப்படியான நிலைமை ஏற்பட்டதுண்டு. தமிழரசுக் கட்சி போராட முனையும் பொழுது எல்லாம் வட-கிழக்கு மாகாணங்களில் இருந்த சுயேச்சை உறுப்பினர்கள் பிரதமரைப் பேட்டி கண்டுள்ளார்கள். முன்னாள் பட்டிருப்புப் பிரதிநிதி திரு. எஸ்.யு. எதிர்மனசிங்கம் போன்றோர் அரை மந்திரிப் பதவி பெற்றது இப்படியான ஆபத்தான நேரங்களில்தான் என்பதை தமிழ் பேசும் மக்களோ அல்லது அரசாங்கமோ மறந்திருக்க முடியாது.

எனவே தமிழ் பேசும் மக்கள் இப்படியான சலசலப்பைக் கண்டு ஏமாந்துவிடக் கூடாது. இந்த முயற்சிகள் அனைத்தும் தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தை நசுக்க எடுக்கும் முயற்சிகள் என்பதை மக்கள் மறந்துவிடக் கூடாது.

யாழ் நகரில்

## 17ம் திகதி மாபெரும் கூட்டம்

### சத்தியாக்கிரக நினைவை யொட்டி நடைபெறுகிறது

கடந்த எட்டாம் திகதி ஆரம்பமாகிய எல்லாம் தமிழியக்கம் நாடெங்கும் நல்ல முறையில் பரவியுள்ளது. பொது மக்களின் ஆதரவு பூரணமாகக் கிடைத்துள்ளது. பள்ளிப் பாலகர் தொட்டு வயோதிபர் வரை தங்கள் கருமங்கள் அனைத்தையும் தமிழில் செய்ய முனைந்து விட்டார்கள். தினமும் தமிழரசுக்கட்சித் தலைவர்கள் வட கிழக்கு மாகாணங்களில் உள்ள மத்திய அஞ்சல் நிலையங்களின் முன் நின்று பொது மக்களுக்குத் தங்கள் கருமங்களைத் தமிழில் செய்வதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறார்கள். மேலும் மக்களுக்கு தமிழியக்கத்தின் நன்மைகளை எடுத்துக் கூறும் முகமாகப் பிரசாரக் கூட்டங்களும் நாடெங்கும் நடைபெற்று வருகின்றன. மேலும் பல கூட்டங்கள் நடைபெறவிருக்கின்றன. இம் மாதம் 17-ம் திகதி யாழ். முற்றவெளி மைதானத்தில் நடைபெறவிருக்கும் சத்தியாக்கிரக நினைவுக் கூட்டத்தை மிக விரிவான முறையில் நடத்துவதற்கான ஏற்பாடுகளைத் தொண்டர்கள் கவனித்து வருகிறார்கள்.

17-ம் திகதி பிற்பகல் யாழ். நகரின் பிரதான வாசல்களான ஐந்து முக்கிய இடங்களிலிருந்து ஊர்வலங்கள் ஆரம்பமாகி கூட்ட மைதானத்தை அடையும். ஊர்வலத்தைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் கூட்டத்தில் மட்டக்களப்பு, திருமலை, மன்னார் ஆகிய இடங்களிலிருந்து சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழரசுக் கட்சி முக்கியஸ்தர்களும் கூட்டத்தில் கலந்து உரை நிகழ்த்துவார்கள் என்றும் அறியப்படுகிறது.

இவ்வாரம் வட பகுதியில் பெரும்பான்மையான பிரசாரக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. அடுத்த வாரம் கீழ்க்கண்ட இடங்களில் தமிழியக்கப் பிரசாரக் கூட்டங்கள் நடைபெறும்.

கிளிநொச்சி 16-ம் திகதி, யாழ்ப்பாணம் முற்றவெளி 17-ம் திகதி (ஐந்து பிரமாண்டமான ஊர்வலங்களுடன்), மட்டக்களப்பு 20-ம் திகதி, பட்டிருப்பு 21-ம் திகதி, கல்முனை 22-ம் திகதி, பொத்துவில்—நிந்தாவூர் 23ம், திகதி கல்குடா 24-ம் திகதி.

## அறப்போர் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கம் தொடங்கியது என்பது குறிப்பிடத் தக்கது.

இதுபோல படிப்படியாக இம்முறையும் எமது இயக்கம் நடைபெறவுள்ளதேயன்றி பிற்போட கட்சி முடிவு செய்யவில்லை என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. பத்திரிகைகளோ தங்களது ஜோஸ்யங்களும் ஹேஷ்யங்களும் நடவாதது கண்டு இப்போது இயக்கம் பிற்போடப்பட்டுள்ளது என்று பொய்ச் செய்திகளைப் பிரசுரிக்கின்றன என்று தெரியவருகிறது.

கட்சியைப் பொறுத்தமட்டில் தமிழியக்க வாரத்தைச் சிறப்பாக நடத்தி வடக்குக் கிழக்கு மாகாணங்களெங்கும் தமிழியக்கத்தைப் பரப்பியபின் அடுத்த நடவடிக்கையை மேற்கொள்ளுவார்கள் எனத் தெரிய வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் தமிழரசு எதிர்ப்பு இயக்கம்?

## வீரகேசரிச் செய்தி பொய்!

### ஈழநாட்டின் செய்தியைத் திரித்துள்ளது

'சமரச முயற்சிக்கு இடமளிக்கவே நேரடி நடவடிக் கையைப் பின் போட்டோம் என்று நான் கூறியதாக இம்மாதம் 10ம் திகதி வீரகேசரியில் வெளியான செய்தி முற்றிலும் பொய்' என்று தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. சி. மூ. இராச மாணிக்கம் சுதந்திரன் நிருபரிடம் கூறியுள்ளார்.

இது பற்றி அவர் மேலும் நமது நிருபருக்குக் கூறியதாவது:-

'நான் எந்தச் சந்தர்ப்பத்திலும் வீரகேசரிக்கு என்று தனியாகவோ அல்லது வீரகேசரியில் வந்த செய்தியின் கருத்தையோ தெரிவிக்கவில்லை.'

இம்மாதிரி விஷமத்தனமான செய்திகளை வெளியிடுவதின் நோக்கம் யாது என்பதை வாசகர்கள் ஆராய வேண்டும்.

தமிழ் பேசும் மக்களின் உரிமைப்போராட்டங்களைப் பொறுத்தவரையில் 'வீரகேசரி' போராட்டத்துக்கு எதிரான முறையிலும், கட்சித் தலைவர்கள் முன்னுக்குப் பின் முரணுகப் பேசுகிறவர்கள் என்பதைத் தமிழ் பேசும் மக்களின் உள்ளங்களில் பதியச் செய்வதற்காகவும் ஒரு யுக்தியான முறையைக் கையாண்டு வருகிறதென்பதை போராட்டம் சம்பந்தமாக அது வெளியிடும் செய்திகளும், தலையங்கங்களும் எடுத்துக் காட்டுவதாகவே தோன்றுகின்றன.

'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்திருந்த திரு. இராசமாணிக்கத்தின் பேட்டியைத் தனக்குத் தேவையானபடி திரித்து வீரகேசரி வெளியிட்டிருப்பதாகவே வீரகேசரி செய்தியையும், ஈழநாடு செய்தியையும் வாசிப்பவர்களுக்குத் தோன்றும்.

திரு. இராசமாணிக்கத்தைப் பேட்டி கண்டதாகக் கூறும் அப் பொய்ச் செய்தியைப் பிரசுரித்த அதே தினத்தில் அப்பத்திரிகை எழுதியுள்ள தலையங்கத்தில் திரு. இராசமாணிக்கம் இச்செய்தியை மறுத்தாலும், அந்த மறுப்பு உண்மையாக இருக்கமுடியாது என்று மக்கள் கருதக்கூடியதாக ஒரு தகவலையும் குறிப்பிட்டுள்ளது. சுத்திகரிப்பு இயக்கத்தைக் கட்சி ஆரம்பிக்கப்போவதாக வீரகேசரி ஒரு செய்தியை வெளியிட்டதாகவும், அதனைத் திரு. இராசமாணிக்கம் மறுத்ததாகவும், ஆனுல் வவுனியாத் தீர்மானம் அதனை ஊர்ஜிதம் செய்திருப்பதாகவும் கூறும் வீரகேசரி, திரு. இராசமாணிக்கம் மறுத்தாலும் மறுப்பில் உண்மையிருக்காது என்ற ரீதியிலே எழுதுகிறது.

விஷமத்தனமான ஒரு பொய்ச் செய்தியை வெளியிடுவதால் அச்செய்தியை அவர் மறுக்கக்கூடுமென்பது அவர்களுக்குத் தெரியுமாதலின், அவர் மறுத்தாலும் மக்கள் அதனை நம்பாமலிருக்க வேண்டுமென்பதற்காகவே விஷமத்தனமான தலையங்கமும் எழுதியுள்ளனர் என்று எண்ண இடமேற்பட்டுள்ளது.

இதிலிருந்து எவ்வளவு தூரம் திட்டமிட்டு மிக நுட்பமான முறையில் தமிழரசுக் கட்சிக்கு எதிராக இப்பத்திரிகை பிரசாரம் செய்கிறதென்பதை ஊகிப்பது கடினமாகாது.

சுத்திகரிப்பு இயக்கம் ஆரம்பிப்பதுபற்றி வீரகேசரி வெளியிட்டிருந்தசெய்தி பற்றி நாம் விசாரித்தபொழுது வேறு சில தகவல்களும் கிடைத்தன.



திரு. சி. மூ. இராசமாணிக்கம்

இச் செய்தியைத் தாங்களே முதலில் பிரசுரித்ததாக அவர்கள் தம்பட்டமடித்துக்கொண்டாலும், இது அவர்களின் சொந்தச் சரக்கு அல்லவென்பதும், ஒரு சிங்களத் தினசரியின் செய்தியை ஏதோ ஒரு வழியில்பெற்று தங்களின் சொந்தச் செய்தியாகப் பிரசுரித்துவிட்டார்களென்பதும் தெரியவந்தது. அதே தினத்தில் அந்தச்சிங்களத் தினசரியும் இச்செய்தியை வெளியிட்டிருந்ததாம்.

அத்தோடு, இம்மாதம் 10ம் திகதி வீரகேசரியில் "எல்லாம் தமிழ் இயக்கம்" கொழும்புப் பகுதிக்கும் மலைநாட்டுக்கும் விஸ்தரிக்கப் படலாமென்று ஒரு கட்சிப் பிரமுகர் கூறியதாக ஒரு செய்தியைப் பிரசுரித்துள்ளது. இதுவும் விஷமத்தனமான பொய்யாகும். ஈழநாட்டுச் செய்தியொன்றிலிருந்து திரித்ததாகவே இச் செய்தியும் தோன்றுகிறது.

## அடங்கிக்கிடந்த...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ழுது அவர்கள் மறுத்து ஆங்கிலத்திலேயே எழுதிக் கொடுத்தனராம். இவர்கள் இருவரும் இடதுசாரிக் கட்சிப் பிரமுகர்கள் என்று தெரிய வருகிறது. ஆனுலும் திருமலைப் பகுதியில் தமிழியக்கம் பூரண வெற்றியளித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்கள்.

மட்டக்களப்பு, திருக்கோயில், கல்முனை, பட்டிருப்பு, பொத்துவில், நிந்தாவூர் பகுதிகளில் தமிழியக்கப் பிரசாரக் கூட்டங்கள் இதுவரை நடைபெறவில்லை. என்றுலும் மக்கள், அஞ்சல் முகவரி, காசோலை இவற்றை எழுதுவது, மற்றும் சகல காரியங்களையும் தமிழ் மொழியிலேயே செய்து வருகிறுர்களாம். இப்பகுதியில் தமிழ் சுலோகங்கள் பொறித்த அஞ்சல் உறைகள் பெருமளவில் விற்பனையாகியுள்ளதாக திரு. இரா. பத்மநாதன் தெரிவித்துள்ளார். இப் பகுதியில் எங்கு திரும்பினுலும் தமிழியக்க சுலோகங்கள் காட்சியளிக்கின்றனவாம்.

மன்னார், வவுனியாப் பகுதிகளிலும் தமிழியக்கம் எட்டாம் திகதியே ஆரம்பமாகிவிட்டதாகத் தெரிகிறது. மன்னார் பட்டின சபைப் பகுதியில் திரு. வி. ஏ. அழகக்கோன் தலைமையில் இயக்கம் நடைபெறுவதாகவும், வவுனியாவில் திரு. ச. சுப்பிரமணியம் தலைமையில் இயக்கம் நடைபெறுவதாகவும் நமது நிருபர்கள் தெரிவித்துள்ளார்கள்.

## அனுமதேயப் பேர்வழிகளின் பிரிவினைப் பிரச்சாரம்

### அத்தனையும் அலரி மாளிகையிலே தான்

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிராக மன்னாரில் ஒரு இயக்கம் உருவாகியுள்ளதாக வெளிவந்த செய்திகள் பற்றி மன்னார் மக்களுக்கோ மன்னார் மாவட்ட மக்களுக்கோ உண்மையில் எதுவுமே தெரியாது என்று நமது நிருபர் அறிவித்திருக்கிறுர். எனவே மன்னாரில் உருவாகியுள்ளதான தமிழரசுக் கட்சி எதிர்ப்பியக்கம் பற்றிய உண்மையை வாசகர்கள் அறிந்து கொள்வது நல்லதே.

மன்னாரில் தமிழரசுக் கட்சிக்கு எதிராக ஒரு இயக்கம் நிறுவப்பட்டிருக்கிறதா என்றுல், நிச்சயமாக இல்லை. எந்தப் பெயருடனுவது இவ்வித இயக்கம் மன்னார் நகரிலோ அல்லது மன்னார் மாவட்டத்திலோ கிடையாது. இக் கருத்தை முன்னிருத்தி இதுநாள் வரை ஏதாவது கூட்டம் நடைபெற்றதாக மன்னார் மக்கள் அறியமாட்டார்கள். எனவே உண்மை நிலையென்ன?

#### 'தாய் மகளுக்குக் கட்டிய தாலி'

கூட்டமோ அன்றி செயற்குழு உறுப்பினர் தெரிவோ நடந்தறியாத இந்தச் சங்கத்தின் செயலாளர் எனப்படும் திரு.எஸ்.ரி.குரூஸ் என்பவரையும், தலைவர் எனச் செய்திகள் வெளியிடும் திரு. எஸ். டி. கிறிஸ்தோபர் என்பவரையும் எண்ணும்போது 'தாய் மகளுக்குக் கட்டிய தாலி' என்ற விதத்திற்தான் தெரிவு நடந்திருக்கிறது என எண்ணத் தோன்றுகிறது.

#### அனுமதேயப் பேர்வழிகள்

இவர்களுக்கும் அரசியலுக்கும் தொடர்பு உண்டா என்றுல் நிச்சயமாக இல்லை என்ற பதிலே கிடைக்கிறது. மன்னார் மக்களே இவர்களை இன்றுவரை சரியாகத் தெரிந்து கொண்டது கிடையாது.

யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்த இந்த எதிர்ப்பு இயக்கத்தின் தலைவர், மன்னாரில் மணம் முடித்துக் கொண்டதும் ஏனே இந்த யாழ்ப்பாணம்-மன்னார் மனப்பான்மை உருவானது என்று சிலர் கதைத்துக் கொள்கிறுர்கள்.

இன்றைய நிலையில் தமிழரசுக் கட்சியை எதிர்ப்பவர்களுக்கு கைமேற்பலன் உண்டு என்பது தெரிந்ததே. பெயர் பிரபலப்படுத்தப்பட வேண்டுமானுல், தனிப்பட்ட சலுகைகளை அரசாங்கத்திடம் பெற வேண்டுமானுல், தமிழரசுக் கட்சியைத் தாக்கிப் பேச வேண்டும், சத்தியாக்கிரகம், விடுதலைப் போராட்டம் எல்லாம் வெறும் காட்டுக் கூச்சல், இதில் சேரவும் மாட்டோம், மக்களைச் சேரவும விடமாட்டோம் என்று ஆட்சியாளர் அறியக்கூடியதாக எடுத்துக் கூறவேண்டும்.

#### வழிகாட்டிகள்

இத்துறையில் வழிகாட்ட யாழ்ப்பாணப் பிரதிநிதியும், கடந்த தேர்தலில் திருமலையில் தோல்வி கண்ட, எண்ணைக் கூட்டுஸ்தாபனத் தலைவரும் உளரே.

மன்னாரில் தோன்றியுள்ளதாகக் கூறும்எதிர்ப்பியக்கத்தினர் செய்திருப்பதுதான் என்ன? பிரதமரைப் பேட்டி கண்டார்கள், பத்திரிகைகளில் அறிக்கை விட்டார்கள். விடுதலைப் போராட்டத் தொண்டர்களைக் கவனித்துக் கொள்ள நாம் இருக்கிறோம், உங்கள் இரா [illegible] [illegible] முன்னுல் விசுவாசப் பிரமாணம் எடுத்துள்ளார்கள். இத்துடன் முடிந்து விட்டது அவர்களின் எதிர்ப்பு இயக்கம்.

#### சுயநலவாதம்

மன்னார் பிரதிநிதி திரு. அழகக்கோன் கூறியுள்ளதைப் போல, மன்னாரைப் பற்றி வெளிவந்தவை யாவும் சில சுயநலமிகளின் பொய்ப் பிரசாரமேதான்.

மன்னார்க் கச்சேரி ஊழியரிற் பெரும்பாலோர் சமஷ்டிவாதிகள் என்றும் அவர்கள் உள்ளூர் மக்களது காணி விண்ணப்பங்களைக் கிழித்து எறிந்து விடுகிறுர்களென்றும் பிரதமருக்குக் கூறியது அபாண்டம்! அத்துடன் தமிழ் ஊழியர்களை மாற்றி சிங்கள ஊழியர்களை மன்னாருக்கு அனுப்புங்கள் என மன்னார் மக்களின் சார்பில் அவர்கள் கேட்டதாய் நடித்தது அவர்கள் தம் இனத்துக்குத் துணிந்து செய்த துரோகம்!

#### உண்மையில் நடந்தது

காணி விநியோகம் பற்றி இவ்வித குறைகளிருந்தால், தாங்கள் அடிக்கடி கச்சேரியில் காணும் அரசாங்க அதிபரிடம் ஒரு முறையேனும் அவர்கள் இது பற்றி முறையிட்டிருக்கலாமே? அது கிடையாது!

பதினைந்து கிராமச் சங்கத் தலைவர்களும் பிரதமரைச் சந்தித்தார்கள் எனக் கூறப்பட்டிருந்தது. உண்மையில் போனவர் ஒரே ஒருவர்தானும். அவரும் வேறேதோ வேலைக்காக என்று கூறியே கூட்டிச்செல்லப்பட்டாராம். இவ்விதம் தமிழ் இனத்தைக் காட்டிக் கொடுப்பதற்கே அலரி மாளிகையில் நுழைகிறேம் என அவர் எண்ணியதே இல்லையாம். உண்மை இதுதான்.

மீன்பிடித் தொழிலிற்கூட வட பகுதியினர் மன்னார் மக்களுக்கு இடைஞ்சல், தடை என்றும் திரு. குரூஸ் என்பவர் கூறியிருக்கிறுராம். மன்னார் நிலையோ எதிர்மாறு! சிங்களப் பகுதிகளிலிருந்து நூற்றுக் கணக்கான மீன்பிடி வள்ளங்கள் மன்னாருக்கு வந்து செல்கின்றன. தமிழர்களது கடற் தொழிலே இங்கு பறிபோகும் நிலையில் உள்ளது. இது பற்றி பெருவாரியான பணச் செலவில் திரு.ஜி. ஜி. பொன்னம்பலத்தை வைத்து தலைமன்னார் மக்கள் கடந்த வருடம் வழக்காடினர். எதிர்ப்பு இயக்கம் என்று கூறப்படும் இயக்கத்தின் செயலாளர் என்பவரும் ஒரு வழக்கறிஞரே. இருந்தும் அவரது கூற்று விசித்திரமாயிருக்கிறது!

> **அறைகூவல் 10**
>
> "தமிழ் தமிழ்!
> தமிழனுக்கு
> உயிரிலும்
> சிறந்ததாம்
> அமிழ்தெனும் நம்
> அன்னைவாழ
> ஆவிவந்து
> கூடடா!"

#### இந்நேரத்தில் தேர்தல் எண்ணமா?

அவர்தான் இந்த 'எதிர்ப்புச் சங்கத்தின்' (என்னே குறிக்கோள்!) செயலாளராம்! மேற்குறித்த 'சங்கம்' ஒன்று மன்னாரில் உண்டு தானு என்பதை மன்னார் மக்கள் அறிவர். இனி ஏனையோரும் அறியட்டும்.

தேர்தல் நினைவும் சிலரது மனத்தில் இடம் பெறுகிறது போலும்! இன்றைய கட்டத்தில் இவ்வித பொய்ப் பிரச்சாரத்தில் ஈடுபடுவது எத்தகைய கொடிய துரோகச் செயலாகின்றது என்பதையும் அந்த 'பிரமுகர்கள்' உணரட்டும்; உணர்ந்து தம் விஷமச் செயலை நிறுத்தட்டும்.

எமது வாடிக்கைக்காரர், நண்பர்கள், சகவர்த்தகர்கள் அனைவருக்கும்

பொங்கி வரும் புத்தாண்டு நன்னுவில் இதயம் தங்கி வரும் எமது நல்வாழ்த்துக்கள்!



குண்டன்மால்ஸ் லிமிட்டெட்

எலேட் சுப்பர்லோன் ஜோர்ஜெட், லதா அச்சடி கிளோஸ்ட் கொற்றின், லதா பொப்ளின், லதா மணிப்புரி சேலைகள், லதா சற்றின் டிரில், லதா கைக்குட்டைகள்

யாவற்றுக்கும் ஏக விநியோகஸ்தர்கள்

110, 114 மெயின் வீதி,

மொத்த விற்பனை இலாகா
26, கெய்லர் வீதி,

கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் கதை




## கதிர் ஐந்து
## "அண்ணை"

மலர்கள் எல்லாம் ஒரே வடிவானவை அல்ல; ஒரே தன்மையானவையுமல்ல- பூமித் தாயின் மடியில், மலர்ந்து, மணம் வீசிக் கொண்டு கோடானு கோடி மலர்கள் அசைகின்றன. அவற்றில் எத்தனை நிறங்கள்... எத்தனை மென்மைகள்...எத்தனை மணங்கள்!

மனிதர்களின் மனங்களும் மலர்களைப் போன்றவை. மனங்களில் தான் எத்தனை விதங்கள்? அந்திவானின் செம்மையிலே வசமிழக்கும் ஒரு மனம்; இன்னொரு மனத்திற்கு அந்திவானின் செம்மை அருவருப்பை ஊட்டும். மழலையின் குதலையில் மயங்கும் ஒரு மனம்; இன்னொரு மனமோ அதை வெறுக்கும். ஒரு மனத்திற்குப் பிடித்தது, இன்னொரு மனத்திற்குப் பிடிக்காமல் போகிறது.

மனங்களின் விசித்திரங்களைப் பற்றி ராஜகோபாலிற்குத் தெரியாது; ஆனால், அவனது மனத்திற்கு ஒரேயொரு காட்சி மிகவும் பிடித்தமானது. அவன் உள்ளத்தைக் கவர்ந்து, தெய்வீகவுணர்வை ஊட்டும் காட்சி ஒன்றே ஒன்றுதான்.

தாய்மையின் பெருமை முகத்திலே பிரவாகிக்கக் கைகளிலே ஓர் அழகு மதலையோடு நிற்கும், இளம் பெண்களைப் பார்க்கும்போது, களங்கமற்ற புனிதவுள்ளத்தோடு, ஒரு தெய்வத்தின் முன் நிற்பதுபோல உணர்வான். குழந்தையைத் தோளில் சாய்த்து அணைத்துக் கொண்டு, உலகத்தையே வென்றுவிட்ட பெருமையோடு நிற்கும் தாய்களைக் கண்ணிமைக்காது பார்ப்பதில் அவனுக்கு வெகு பிரியம்.

வக்கிரம் நிறைந்த மனவிகாரப் பார்வையல்ல அது; பக்தனின் பரவசப் பார்வையது. இளங்கணவன், மனைவி; கைக் குழந்தை ஆகியோரை ஒருங்கே சந்திக்க நேர்ந்தால் ஓர் ஆலயத்தின் முன் நிற்கின்ற தெய்வீக வுணர்வை அடைவான்.

அண்ணனையும் அந்நிலையில் காண... அண்ணி கையில் ஒரு குழந்தையோடு நிற்பதைக் காண... அண்ணனுக்குத்தான் இன்னும் கலியாணம் நடக்கவில்லையே?

—ராஜகோபாலின் மனம் நிலையற்று, பட்டாம் பூச்சியாக அலைப்புறுகிறது. கரங்களை முகத்திற்கு முண்டு கொடுத்துக் கொண்டு மேசையின் முன் அமர்ந்திருக்கிறான். இரு முழங்கைகளுக்கு இடையில், மேசையின் மேல், புத்தகம் ஒன்று விரிந்து கிடக்கிறது. மேசையின் ஓரங்களில் புத்தகங்களாயும், கொப்பிகளாயும் நிறைந்துள்ளன. மேசையின் இடப் பக்க ஓரத்தில் மேசை விளக்கொன்று பிரகாசமாக எரிந்து கொண்டிருக்கிறது.

அவன் வேறெங்கேயோ சிந்தையை லயிக்க விட்டுவிட்டு அமர்ந்திருக்கின்றான்:

அன்று காலை...

'ஐயா...ஐயா...' என்று இதயம் ஒலமிட, வெறி பிடித்தவனாக அச் சந்தியில் நின்று கொண்டிருக்கிறான்: அடுத்தடுத்து அவனிதயத்தை எத்தனை நிகழ்ச்சிக் கோர்வைகள் கலக்கி விட்டன? கனகம் என்றொருத்தி.. சின்னராசு என்றொருவன்... கந்தையர்... முகம் காணாத தகப்பன்...

உறுமிக் கொண்டு அவனை நோக்கிப் பாய்ந்து வருகிறது ஒரு கார். கணப் பொழுது தான். தன்னிலை யடைந்த ராஜகோபால், மின்னல் வேகத்தில் கரைக்குப் பாய்ந்திருக்காவிடில்... காரின் சக்கரங்களின் பசிக்கு இரையாகி...வீதியோடு அரைக்கப்பட்டு...புழுதியோடு புழுதியாக எல்லாம் முடிந்து விட்டிருக்கும்.

'என்ன, வீட்டிலை சொல்லிப் போட்டே வந்தனீ?' என்று கார்க்காரன் ஏளனமாகக் கேட்டதும், காருக்குள்ளிருந்த கல்லூரி மாணவிகள் 'கொல்' லென்று சிரித்த சிரிப்பும், அவன் நினைவில் பின்னுகின்றன.

'எல்லாம் முடிந்திருந்தால்...?' என்று எண்ணிப் பார்க்கிறான், அவன். விரும்பாமலேயே அந்நிலையைக் கற்பனை பண்ணுகிறது, அவன் மனம்.

ஆச்சி வயிற்றிலும், வாயிலும், அடித்துக் கொண்டு கதறுவாள்; அண்ணன் சுவரில் முகத்தை மோதிக் கொண்டு, 'தம்பி! தம்பி!!' என்று கண்ணீர் விட்டுத் துடிப்பான்.

இவர்களைத் தவிர அவனுக்காக வேறு யார்தான் இதயமுருகி அழவிருக்கிறார்கள்?

'பாலா இல்லையா?...புவனம் எங்கே?!

பாலா நிச்சயமாக அவனுக்காகக் கண்ணீர் வடிப்பான்; அவன் மிகவும் அமைதியானவன். அமைதியாகப் 'பொருமிப் பொருமி' அழுவான். புவனம் செய்தி கேட்டுத் துடிப்பாள் நிச்சயமா; கத் துடித்துப் போவாள். நிலத்தில் புரளுவாளா......? கிணற்றை நோக்கி ஒடுவாளா....? அல்லது, மண்ணெண்ணெயைத் தன் மீது ஊற்றி......

—ராஜகோபால் சிரித்துக் கொள்கிறான்.

'மண்ணெண்ணெய்' என்றதும் அவனுக்குப் புவனத்தின் வீட்டில் நிகழ்ந்த ஒரு சம்பவம் நினைவு [illegible]

பொதுவாகப் [illegible] நேரம் செல்லப்படுத்து, நேரத்தோடேயே எழும்ப வேண்டும் என்பார்கள். ஆனால், புவனம் அதற்கு முற்றிலும் எதிர்மாறானவள். காலையில் இவளைத் துயில் எழுப்புவதற்குப் பிரத்தியேகமாக ஒருவர் வேண்டும்.

அன்று ஒரு வெள்ளிக் கிழமை-

கந்தையருக்கு அது ஒரு புனிதமான விரத நாள். அன்று வீடுவாசல் கழுவி,

**செங்கை ஆழியான்**

மெழுகித் துப்பரவாக இருக்க வேண்டும் என்பது கந்தையரின் கட்டளை. இந்த ஒரு விஷயத்தில் கந்தையரின் மனைவியும், இவரோடு ஒத்துப் போவாள். கணவன் மீது தான் பக்தியில்லாவிடினும், தெய்வத்தின் மீது அதிக பக்தி. எனவே, கணவனோடு போட்டி போட்டுக் கொண்டு வெள்ளிக்கிழமைகளில் விரதமிருப்பாள்.



எல்லாரும் குளித்துக் கோப்பியும் குடித்து விட்டார்கள். புவனம் மட்டும் படுக்கையை விட்டு அசைவதாகக் காணேம். எங்காவது போய் குடும்பம் நடத்தப் போகிற ஒரு பெண், இப்படி விடிந்ததும் தெரியாமல் படுக்கையில் கிடப்பதைக் காணத் தாய்க்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

'மூதேசி...சனியன்...!எழுந்திரண்டி?' என்று திட்டியதோடு நில்லாது, முதுகில் 'பளார் பளார்' என்று இரண்டடிகளையும் வழங்கி விட்டாள். புவனம் துடித்துப் பதைத்துக் கொண்டு எழுந்தாள்.

'புவனக்காக்கு அம்மா அடிச்சா.....' என்று தம்பி [illegible] கும்மாளமிட்டன.

'உன்னாலை இந்த வீட்டுக்குத் தரித்திரம் பிடிக்கப் போகுதடி!...'

புவனத்திற்கு அழுகை வெடித்துக் கொண்டு வந்தது.

'விறு விறெ'ன்று அடுப்படிக்குள் ஓடினாள்; மூலையிலிருந்த மண்ணெண்ணெய்ப் போத்திலை எடுத்துத் தனது சட்டையெல்லாம் ஊற்றிக் கொண்டாள்.

'அம்மா!அம்மா...!இஞ்சை ஓடியா...? இவள் புவனத்தி சட்டையிலை மண்ணெண்ணையை ஊத்துருள்...!' என்று வெருண்டு போன கனகம் போட்ட கூச்சலில், வீடே அடுக்களைக்குள் திரண்டு விட்டது.

அதன் பின் புவனத்தைச் சமாதானப் படுத்தத் தாய் பட்ட பாடு...

அதன் பிறகு அந்த வீட்டில் புவனத்திற்குத் தனி மரியாதை.

'ஒற்றைப் புத்திக்காரி, எதையும் செய்திடுவாள்!'

* * *

ராஜகோபாலின் நினைவு நிழல்கள் அழிந்து ஓய்கின்றன. அவன் தனது சிந்தையைப் புத்தகத்தில் பதிக்க முயல்கிறான்; முடியவில்லை. சோதனைக்கு இன்னும் ஒரு மாதம் இருக்கின்றது. படிப்பதற்கோ மலை போலப் பாடங்கள் இருக்கின்றன.

எப்படித்தான் படிக்கப் போகின்றேனே?

அவனுடைய புவியியல் ஆசிரியர் மகாதேவா வகுப்பில் அடிக்கடி கூறுவார்:

"படிப்பதற்கு முன் மனதில் அமைதி தேவை! மனதில் அமைதி இருந்தால் தான் படிப்பில் தெளிவு இருக்கும்! மனது ஒரு நிலையில்லாது அலைப்புறும் போது படிக்கவேண்டுமே என்பதற்காக இருந்து மூளையைக் கஷ்டப் படுத்துவதிலும், படுத்துத் தூங்குவது நல்லது......!"

அவன் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு எழுகிறான்; பாலாவின் குரல்கனவுபோல அவனுக்குக் கேட்கிறது.

"ராஜ்...! உனக்கு நான் ஒன்றை எப்போதும் கூறுவேன்! காதல் இருக்கிறதே... அது சிலருக்குப் படிப்பதற்கு ஊக்கத்தைக் கொடுக்கும்! சிலருக்குப் படிப்பைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கி விடும்! உனக்கு எப்படியோ; எனக்கு இன்னுந் தெரியவில்லை......! கவனம், படிப்பைக் கெடுத்துக் கொள்ளாதே..."

அவனுடைய தமையனும் அதைத்தான் கூறுவான்; அதிகாலை நான்கு மணிக்குப் படுக்கையை விட்டு எழும்பி விடும் அண்ணன், அவனையும் தட்டி எழுப்பி விடுவான்.

"எழுந்திரடா! எழுந்து கொஞ்ச நேரம் படி....! காலையிலை படித்தால் தான் புத்தியிலை பதியும்....!"

புவனம் மட்டும் குறைவா?

"படியுங்கள், ராஜ்! கவனமாகப் படியுங்கள்....!" என்று சந்திக்கும் வேளைகளில் அடிக்கடி கூறுவாள்.

'படிப்பு......! படிப்பு......! படிப்பு...!'

—ராஜகோபால் அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வருகிறான். ஆச்சி திண்ணையின் மூலையில் வாங்கைப் போட்டுப் படுத்துத் தூங்கி விட்டாள், போலிருக்கிறது. அண்ணன் திண்ணையின் ஒட்டில் சாய்மனைக் கதிரையைப் போட்டு விட்டு, படுத்துக் கிடந்தபடி வானத்தைப் பார்த்துக் கொண்டு கிடக்கிறான்.

ராஜகோபால் கதவைத் திறந்து கொண்டு வந்ததை அவன் காணவில்லை. அவன் நினைவுகள் வேறெங்கோ நிலைத்து நிற்கின்றனவா? வானத்திலே அவன் அப்படி என்னத்தைக் கண்டு விட்டான்......? என்றும் பார்க்கின்ற தாரகைகள்...நிலவு... மேகம்...இவைதானே? மனம் தத்தளிக்கும் போது வானத்தைப் பார்ப்பார்களோ?

ராஜகோபால் தமையனைப் பார்த்துக் கொண்டு நிற்கிறான்; தமையனைக் கால்களிலிருந்து தலைவரை பார்க்கின்ற அவன் பார்வையில் பாசமும், பரிவும் நிறைந்து கிடக்கின்றன.

'பாவம், அண்ணை! குடும்பத்தைக் காப்பாற்ற எவ்வளவு கஷ்டப் படுகிறான்...? விடிய நாலைந்து மணிக்கு எழும்புகிறான்......! ஆச்சி கொடுக்கிறதைச் சாப்பிட்டு விட்டு, சைக்கிலை எடுத்துக் கொண்டு கலட்டியிலுள்ள முத்துத்தம்பி சுருட்டுக் கொட்டிலுக்குப் போனால், மத்தியானம் ஏதாவது சாப்பிட்டுவிட்டு, மாலை நாலு நாலரைக்கு, சிலவேளை ஐந்து ஐந்தரைக்கு வீட்டிற்கு வருவான்...! பாவம்...எங்களுக்காக உழைக்கிறான்...!சாய்... நான் நெடுகப் படிக்கிறேன்......அறுந்த படிப்பு! 'கிளரிக்கல்' எடுக்கிறதெண்டாலும் அண்ணை விடமாட்டான்! படிக்கட்டாம்...படிக்கட்டாம்...!

தமையனைப் பரிவோடு பார்க்கிறான், ராஜகோபால்.

நடராசாவின் விழிகள் அகண்ட வெளியில் பதிந்தே இருக்கின்றன. என்னத்தைத் தேடுகிறான்?

பெருமூச்சு அவன் நெஞ்சக் குகையில் மோதுகிறதா? அவன் நெஞ்சு விம்மித் தணிகிறது.

ராஜகோபால் துடித்துப் போகிறான்.

"அண்ணை...!"

பதிலை; அண்ணன் ஏக்கத்தின் பிடியில் ஆழ்ந்து போகிறானு?

"அண்ணை!...அண்ணை...!"

நடராசா துடித்துப் பதைத்து எழும்புகிறான்.

"என்னடா, தம்பி?..."

"உள்ளுக்கை போய்ப் படென்...!"

"இல்லை...இதிலை கொஞ்ச நேரம் கிடக்கிறன்......நீ போய்ப் படு...!"

* * *

'அண்ணை! அண்ணை...!'

—ராஜகோபாலின் நெஞ்சக் கடலில் 'அண்ணை' என்ற தெப்பம் மிதக்கிறது; நினைவுகள் துடுப்புகளாகித் 'தெப்பத்'தை உந்த...

படுக்கையில் இருப்புக் கொள்ளாது அவன் தவிக்கிறான்.

ராஜகோபால் பிறந்த போது, நடராசாவிற்கு ஏழு வயது; தம்பியைத் தூக்கி வளர்த்தவன் நடராசாவாதலால், அவன்மீது அவனுக்கு ஒரு தனி வாஞ்சை. தகப்பனின் பரிவும், சகோதரனின் பாசமும் ஒருங்கே தமையனிடமிருந்து பெற்றிருப்பவன், அவன்.

'அண்ணை! அண்ணை!...'

படுக்கையில் உடல் புரள்கிறது.


தமையனைப் பற்றி அவனால் நினைக்காமலிருக்க முடியவில்லை.

அண்ணனின் நல்ல மனதிற்கு அந்த ஏமாற்றம் ஏற்பட்டிருக்க வேண்டாம். அந்த ஏமாற்றச் சம்ப

(15-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு கதை




திருமணம் முடிந்து ஒரு வாரம் ஆகிவிட்டது.

பார்வதியும், சிதம்பரம் பிள்ளையும் என்னதான் சிரித்துப் பேசிக் கொண்டாலும், இருவருக்கும் அவரவர் மனத்தில் விபரிக்க முடியாத ஏதோ ஒரு 'சுமை' இருக்கத்தான் செய்தது.

கணவன்-மனைவி என்று இருவரும் சேர்ந்து, முப்பது வருடங்களைக் கடத்திவிட்டார்கள். அதில், ஆறு வருடங்கள் திருமணமாகிப் பிள்ளைப் பேறு இல்லாமல் இருந்தபோது, இருவரிடையே இருந்த மகிழ்ச்சி, கலகலப்பு, குறும்புத்தனம் எல்லாம் ஆறு வருடங்களுக்குப் பிறகு பிறந்த குழந்தைச் செல்வத்தால் செத்துப் போய்விட்டன.

குழந்தை பிறந்தால் குடும்பத்தில் புதிய பொலிவும், மகிழ்ச்சியும் உறவும் பெருகும் என்று சொல்வார்கள். ஆனால், சிதம்பரம்பிள்ளை—பார்வதி என்ற குடும்பத்தைப் பொறுத்தவரையில், இனம் தெரியாத ஏதோ ஒன்றால் அந்தக் குடும்பம் குழம்பிக் கொண்டிருந்தது.

'ஆண் குழந்தை வேண்டும் வேண்டும்' என்று இல்லாத தெய்வங்களை எல்லாம் பார்வதி வேண்டிக் கொண்டது போது, சிதம்பரம்பிள்ளையும் தன் மனைவிக்காக, மனைவியின் பேரில் உள்ள அன்பிற்காக, நடை பாதையில் காணுகின்ற கோயில்களின் முன்னெல்லாம் கும்பிடு போட்டுக் கொண்டிருந்தார்.

மனைவியின் மனம் கோணும்படி இதுவரை அவர் நடந்ததில்லை என்றாலும், ஏதோ தவறு செய்து விட்டவர் போலவே கடந்த இருபத்திஞலு வருடங்களாக வருந்திக் கொண்டு வாழ்கிறார்.

ஒரு வாரத்திற்கு முன்பு...

இன்று வரை சிதம்பரம் பிள்ளையால் மறந்து விட முடியவில்லை. தவறுகளுக்கு மேல் 'பெரிய' தவருக ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டார்.

பெண்ணுக்குக் கூறைச் சேலை எடுப்பதற்காக, கடைக்குப் போன பார்வதி. முன்னூற்றி ஐம்பது ரூபாவிற்கு தங்க இழை போடப் பட்ட சேலையை எடுத்து வந்திருந்தாள்.

'ஏனம்மா, ஐநூறு ரூபாவிற்கு இன்னும் நல்ல சேலையாக எடுத்திருக்கலாமே' என்று அந்தச் சேலையைப் பிரித்துப் பார்த்தபடி கூறிய வடிவேலுவின் வார்த்தைகளை வாங்கிக் கொண்டு, அறையின் ஜன்னல் பக்கமாக நின்றிருந்த சிதம்பரம் பிள்ளை, 'யாற்ர பணம் எண்டு நினைச்சிப் பேசுருன்?' என்று மனைவியைப் பார்த்துக் கேட்டார்.

அந்த வார்த்தையிலே தனது ஆத்திரத்தைத் தீர்த்துவிட்டது போல அப்போதைக்கு அவருக்குத் தோன்றினும், அடுத்த நிமிடம் அவர் உண்மையிலே மனம் வருந்தினர்.

சிதம்பரம்பிள்ளை இப்படிக் கேட்ட போது, பார்வதிக்கு அழுகை அழுகையாக வந்தது. தந்தைக்கும் மகனுக்கும் இடையே பெரிய இடைவெளி ஏற்படுவதை எப்போதோ அவள் தெரிந்து கொண்டு, எப்படியும் அது பெரிது பட்டுவிடக் கூடாது என்பதற்காக எப்படியோ எல்லாம் முயன்று, இறுதியில் தன்னால் முடியாது என்ற நிலையில், இதை எண்ணித் தன்னந் தனியாக இருந்து அழுது தீர்த்துக் கொள்வதோடு சரியாகிவிட்டவள் பார்வதி.

இப்போது...'உங்கள் மகன் தானே? இது நீங்கள் சம்பாதித்த பணம்தானே?' என்று சொல்லிவிட அவளால் முடிந்தும், சொல்லாமல், சேலையை மடித்துக்கொண்டு ஒரு புறமாகப் போய் விட்டாள்.

தான் அவசரப் பட்டுவிட்டதையும், அதனால் பார்வதிக்கு வேதனை ஏற்பட்டுவிட்டதையும் நினைத்த போது, சிதம்பரம்பிள்ளை தன் மனத்திலே புதைந்து கிடக்கும் ரகசியத்தை அவளிடம் சொல்லிவிட வேண்டும் என்ற முடிவோடு சமையல் கட்டுப் பக்கம் வந்த போது, உள்ளிருந்து தாயும் மகனும் பேசும் குரல் கேட்டு அப்படியே நின்று கவனித்தார்.

'அம்மா, ஏனம்மா அப்பா என்னேடு இப்படி நடந்து கொள்கிருர். நான அவர் பிள்ளையில்லையா?' இந்த வார்த்தைகளைத் தொடர்ந்து அவனுடைய தேம்பல் கேட்டது.

'அப்படி எல்லாம் சொல்லக் கூடாது மகன். உன்னைப் பெத்தவள் நான். அவர் தான் உன் அப்பா. நீ பிறந்த போது. அப்பாவின் வியாபாரத்தில் சிறிய நட்டம்



ஏற்பட்டு, அதற்கு நீதான் காரணம் என்று யாரோ சொல்லியதை மனத்திலே வைத்திருக்கிருர் போல இருக்கிறது. இதெல்லாம் நாளைக்கு உனக்குக் கல்யாணம் நடந்தா சரியாப் போகும்.'

பார்வதியின் தேறுதல் மகனுக்காகச் சொல்லப் பட்டபோதும், அவை தனக்கும் ஆறுதலாக இருப்பதாக சிதம்பரம்பிள்ளை எண்ணிக் கொண்டு, சொல்ல வந்ததைச் சொல்லாமலே திரும்பிவிட்டார்.

திருமணத் தினத்தன்று...

பெற்ற பிள்ளையாச்சே என்ற எண்ணம் சிதம்பரம் பிள்ளைக்கு இருந்ததோ இல்லையோ! தெரியாது; இயந்திரமாக ஆடி ஓடி வேலை செய்து அலுத்துப் போன கால்களுக்கு ஓய்வு கொடுப்பதற்காக, நடுக் கூடத்து மூலையிலே போய், [illegible] காகக் கால்களையும் கைகளையும் நீட்டிக் கொண்டு படுத்திருந்தார்.

வீடே கலகலப்பாக-ஆட்களின் நடமாட்டம் எந்த நேரமும் இருந்துகொண்டேயிருந்தது, முகூர்த்தத்திற்கு இன்னும் ஆறு மணித்தியாலங்கள் இருந்தன.

பக்கத்து மேசையில் கிடந்த அன்றையத் தினசரி ஒன்றை எடுத்துப் புரட்டிக் கொண்டிருந்த சிதம்ப

-ஈழத்து இரத்தினம்-

ரம்பிள்ளை, பத்திரிகையின் மறைவுக்கு மேலாக, கூடத்தில் அவருக்கு எதிரே கிடந்த பேசையில் எதையோ தேடிக் கொண்டிருக்கும் வடிவேலுவின் முதுகுப் புறத்தை அர்த்தத்தோடு பார்த்துக்கொண்டிருந்தார்.



தன் மனைவியின் மேல் உள்ள ஆசையால், தான் செய்துவிட்ட தவறு, தன்னையும் சேர்த்து—மூன்று உள்ளங்களைக் குடைந்து கொண்டிருப்பதை எண்ணிக் கலங்கிக் கொண்டிருந்த போது, எதிர்பாராமல் வடிவேலு அவரைப் பார்த்ததும், மிகச் சிரமத்தோடு தனது பார்வையைப் பெயர்த்து, மீண்டும் பத்திரிகையின் மேல் நிறுத்தினர்.

ஊருக்கும் உலகத்திற்கும்-குறிப்பாகப் பிறப்புச் சாட்சிப்பத்திரத்திலும், வடிவேலு அவர் மகன் என்று உறுதி செய்யப்பட்டிருப்பதை, 'இல்லை' என்றும் அவரால் சொல்ல முடியவில்லை. 'எனக்குப் பிறந்தவனல்ல வடிவேலு' என்று சொல்லி ஒரு கலவரத்தை ஏற்படுத்தவும் அவரால் முடியும் என்பது அவரைப் பொறுத்த வரை [illegible] போதும், அப்படிச் சொல்வதனால் தன் மனைவிக்கு கலக்கம் ஏற்படும் என்பதற்குப் பயந்து அப்படிச் சொல்லவும் அவர் விரும்பவில்லை.

'வடிவேலு சிதம்பரம்பிள்ளையின் மகன் தான்' என்று எந்தக் கோயிலில் வேண்டுமானலும் பார்வதி சத்தியம் செய்யத் தயாராகவே இருந்தாள் என்பதற்கு சிதம்பரம் பிள்ளையின் 'திமிர்' நடத்தைகள் காரணமாகவே இருந்தன. பார்வதிக்குத் தெரியும், சிதம்பரம்பிள்ளையின் இரத்தம்தான் வடிவேலுவின் உடலிலும் ஓடுகிறது என்று. ஆனல் சிதம்பரம் பிள்ளை, வேண்டுமானல் மனைவிக்கு மறைமுகமாக நின்று மறுக்கலாம்.

வடிவேலுக்கு ஆறு வயதிருக்கும், ஒரு நாள். பக்கத்து வீட்டுக் குழந்தைகளோடு அவன் விளையாடிக் கொண்டிருக்கும் போது, யாரோ ஒரு குறும்புக்காரப் பையன் எதற்கோ எறிந்த 'கல்', எப்படியோ சுற்றி வந்து வடிவேலுவின் தலையைக் கிழித்து, ஏராளமான இரத்தத்தைத் தெருவில் இறைத்துவிடவே, தலையிலும் வயிற்றிலுமாக அடித்துக் கொண்டு வடிவேலுவை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனுள் பார்வதி.

இரண்டு நாளாக உணர்வற்றுப் போன வடிவேலுவை நினைத்து நினைத்து, பார்வதி அழுதபோது, அந்த அழுகையை சிதம்பரம்பிள்ளையால் இலகுவில் நிறுத்திவிட முடியவில்லை. அப்போது அவர் உள்மனம் 'இப்படியே வடிவேல் செத்துப் போனுல் நல்லது' என்று ஏனே உளறியது.

சிதம்பரம்பிள்ளையின் இரத்தம் வடிவேலுவின் உடலில் ஏற்றப்பட்டபோது, பார்வதிக்கு ஏற்பட்ட வேதனை விபரிக்க முடியாத நிலையில் இருந்தது. வடிவேலுவைப் பெற்றவள் அவள். இருந்தும் அவளின் இரத்தம் 'ஒத்து வரவில்லை' என்று டொக்டர் சொன்னபோது, ஆஸ்பத்திரி என்பதையும் மறந்து 'ஓ' என அழுது விட்டாள்.

விஷயம் தெரிந்த ஒரு பெண், 'நீங்க தாயாக இருக்கலாம். ஆனல் இரத்த ஒற்றுமை இல்லாமல் இருப்பது இயற்கை இதற்காகப் போய் நீங்க அழலாமா? இந்த ரத்த ஒற்றுமை எல்லாம் விஞ்ஞான முறையில் கண்டு பிடிச்சிருக்காங்க...'

எதையோ அந்தப் பெண் சொல்லிக் கொண்டிருந்த போது, பார்வதிக்கு ஆத்திரம் அவளை உலுப்பிக் கொண்டு வந்தது. 'பெத்தவள்ற இரத்தம் பிள்ளையிட உடம்பில இல்ல எண்டு சொல்றதுதான் விஞ்ஞானமா?' என்று கேட்டபோது வடிவேலுவைக் கிடத்தி இருந்த அறையை நோக்கிச் சென்ற டாக்டராலும், அருகே நின்று விஞ்ஞான விளக்கம் சொன்ன பெண்ணாலும் இந்தக் கேள்விக்கு உடனடியாக விளக்கம் சொல்ல முடியவில்லை. டாக்டர் மெல்லச் சிரித்துக் கொண்டு போய்விட்டார்.

வடிவேலு தப்பிப் பிழைத்து, வளர்ந்து, படித்து, ஆசிரியத் தொழில் செய்து கொண்டிருக்கிறன்—இப்போது ஒரு வாரத்திற்கு முன்பு திருமணம் செய்து கொண்டும் போய்விட்டான். தந்தை தன்னைப் பொறுத்தவரையில் நடந்து கொண்ட முறைகளை மனத்தில் வைத்திருந்த வடிவேலு, தனியாக மனைவியோடு சென்ற பல மாதங்களாக பெற்றவர்களைப் பார்க்க வராமலே இருந்துவிட்டான்.

அவனைப் பற்றிய கவலை பார்வதிக்கு இருந்ததேயன்றி சிதம்பரம்பிள்ளையிடம் எதுவும் இல்லை. இந்த நிலையில் மருமகளைப் பார்க்க ஆசைப்பட்ட சிதம்பரம்பிள்ளை வடிவேலுவை வரவழைத்தால் என்ன என்று கேட்டபோது, பார்வதியின் உள்ளம் 'இதற்கு மேல் பூரிக்க முடியாது' என்கிற அளவிற்குப் பூரித்துக் கொண்டது.

மறுநாள் மாலை மகன்-மருமகள் வரப்போகிறுள் என்ற மகிழ்ச்சியில்-அதைவெளியே காட்டிக் கொள்ளாமல் ஒருவித பூரிப்போடு இருந்த சிதம்பரம் பிள்ளையிடம் ஐம்பது வயதிற்குப் பிறகு முதல் முதலாக எந்த விதமான உளைச்சலும் இல்லாத நிலையில் பார்வதி குழைந்து கொண்டிருந்தாள்.

அந்த நிலையில் பார்வதியைப் பார்த்த சிதம்பரம் பிள்ளைக்கு, இரக்க உணர்வு பிறந்து, 'தான் செய்த தவறை உணராமல், இன்னமும் அறியாமையிலே தன்னை நம்பிக்கொண்டு, தான் செய்யும் ஒவ்வொன்றிற்கும் அர்த்தம் கற்பித்துக் கொண்டு அப்பாவியாக இருக்கிருளே' என்று தனக்குள்ளே முணகிக் கொண்டார்.

சிதம்பரம்பிள்ளை, அழவோ, தன்னை மறந்து வலிந்து சிரிக்கவோ முடியாத நிலையில் தன்னை உருவாக்கிக் கொண்டு இருந்துவிட்ட காரணத்தால் அவர் அமைதியாகவே இருந்தார். அவர் உள்ளத்திலே மருமக

(13-ம் பக்கம் பார்க்க)

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும், மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கல்யாணப் பரிசின் தொடர்ச்சி

# நெஞ்சில் ஓர் ஆலயம்

ஒருவனை மனமாரக் காதலித்த பெண் வேறொருவனை மணந்து வாழ முடியுமா என்ற ஒரு கேள்வியை எழுப்பிச் சென்றது ஸ்ரீதரின் முதல் படம் கல்யாணப் பரிசு. அந்தக் கேள்விக்குப் பதிலளிப்பதாக அமைகிறது நெஞ்சில் ஓர் ஆலயம். அது தான் திரைக் கதையின் கருவூலமாகவுள்ளது.

தமிழ் திரைப்பட உலகின் மாபெரும் சாதனையாக இப் படம் அமைகிறது. 26 நாட்களில் எடுக்கப்பட்ட படம். ஒரே ஒரு செட்டில் முழுப் படமும் எடுக்கப்பட்டுள்ளது.

புது முகங்களை நட்சத்திரங்களாக்கியுள்ள துணிகரமான சாதனை, ஒரு டைரக்டரின் திறமையிலேயே படத்தின் வெற்றி தோல்வி தங்கியுள்ளது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

நடிகர்களிற் பலர் புது முகங்களாயினும் தங்கள் பாகங்களை நன்றாகச் செய்துள்ளனர். ஆனால் அந்த பேபி பத்மினி.....அப்படியே ரசிகர்கள் மனதில் பதிந்து விட்டாள். முக்கிய பாகத்தைத் தாங்கும் கல்யாண் குமார் இறுதியில் மாரடைப்பால் அவதிப்படும் கட்டத்தில் நன்றாகச் செய்யா விட்டாலும் உண்மையாகவே ஒரு டாக்டராக மாறிவிட்டார். தேவிகாவின் பாகமோ சிரமமானது. உள்ளத்தில் பதிந்து கிடக்கும் உணர்ச்சிகளை வெளிக் காட்டியும் காட்டாமலும் அவர் முக பாவத்தாலேயே நடித்துக் காட்டுகிறார்.

நகைச் சுவையிலும் புதுமை. அதிலும் பேபி பத்மினியின் நகைச்சுவை-அதாவது சிறு பிள்ளைக் குறும்பு நன்றாக இருக்கிறது. ராமராவ் கிராமத்தானாகவும், ராமேஸ் அட்டென்டனாகவும் வந்து இடையிடையே சிரிக்க வைக்கிறார்கள்.

பாடல்கள் சில இனிமையாக இருக்கின்றன; கருத்தும் உள்ளன.


எல்லா அம்சங்களையும் விட படப்பிடிப்புத்தான் முன் நிற்கிறது. வின்செண்ட் தன் திறமை முழுவதையும் காட்டியுள்ளார். மேனாட்டுப் படங்களுடன் போட்டி போடத்தக்கதாக அமைகிறது.

டைரக்ஷன் நுணுக்கங்கள் அடுத்த சிறப்பாகும். வைத்தியசாலை அசல் வைத்திய சாலையாகத் தென்படுகிறது. செட்டுக்குள் எடுக்கப்பட்ட படம் என்றே கூறமுடியாது. இந்த டைரக்ஷன் நுணுக்கங்கள் படத்தை முழுமையாக்கியுள்ளது என்றே கூற வேண்டும்.


உள்ளத்தைத் தொடும் படம். முடிவு இன்னும் சிறப்பாக அமைய இடமிருப்பினும், ஆரம்பம் தொடக்கம் முடிவு வரை பார்ப்பவர்களைப் பிணைத்து வைத்திருக்கிறது.

ஜனாதிபதியின் வெள்ளிப் பதக்கம் பெற்ற படமாயின் கூற வேண்டுமா? 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்று காட்டியுள்ளார் ஸ்ரீதர்.

—மதி



'நெஞ்சில் ஓர் ஆலயம்' படத்தில் டாக்டரின் தாயாருக்குத் தேவிகா வணக்கம் கூறும்போது பார்த்து நிற்கிறார்கள் (டாக்டர்) கல்யாண குமாரும் முத்துராமனும்.



அறுவைச் சிகிச்சைக்கு கொண்டு செல்லப்படும் பேபி பத்மினிக்கு திலகமிடுகிறார் தேவிகா. 'நெஞ்சில் ஓர் ஆலய'த்தில் வரும் நெஞ்சை உருக்கும் காட்சி.

# சாவித்திரியின் குறும்பு ஜெமினியை கலக்கிவிட்டது

(சென்னை நிருபர்)





இன்று தென்னகத் திரை வானில் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் நட்சத்திரம் சாவித்திரி. இப்போது வடக்குத் திரையிலும் தன் ஆதிக்கத்தைக் காட்டத் தொடங்கியுள்ளார். இந்தச் சாவித்திரி இலேசுப் பட்டவரல்ல. நல்ல யுக்தி உள்ளவர்.

நடிகர்களைச் சதா கேள்வி பல கேட்டு, புதிதாக ஏதாவது அறிய முயலுபவர்கள், பத்திரிகைக்காரர்கள், இவர்கள் கேட்கும் கேள்விகளில் யார் உங்கள் மனதுக்குப் பிடித்தமானவர்? என்ற கேள்வி வழக்கமாக வருவதொன்று. இக்கேள்விக்குப் பலரும் பல விதமாகப் பதில் கூறுவர். சாவித்திரியோ எப்பொழுதும் தன் கணவன் ஜெமினி கணேசனின் பெயரைத்தான் கூறி வந்தார்.

ஒரு நாள் வழக்கம் போல சாவித்திரியிடம் இந்தக் கேள்வி கேட்கப்பட்டது. ஆனால் இம்முறை சாவித்திரி கூறிய பதில் ஜெமினியைத் திடுக்கிட வைத்தது. காரணம் 'என் மனதுக்குப் பிடித்தமானவர் பிள்ளையார்' என்று சாவித்திரி கூறிவிட்டார்!

சிறிது நேரத்தின் பின் தான் ஜெமினிக்குச் சாவித்திரியின் யுக்தி வெளிப்பட்டது. ஜெமினி உடம்பு வைப்பதைக் கவனித்து வந்த சாவித்திரி அதனைச் சொல்லாமல் சொல்லுமுகமாக பிள்ளையார் (கணேசன்) என்று கூறியிருந்தார். இந்த நிகழ்ச்சியின் பின் ஜெமினி தன் உடம்பைக் கட்டுப்படுத்த டெனிஸ் ஆட்டத்தில் பங்கு கொள்ளத் தொடங்கிவிட்டார் எனக் கூறப்படுகிறது.

## எம். ஜி. ஆரும் புது முகமும்

புது முகம் ஒருவரை எம். ஜி. ஆருக்கு ஜோடியாக அறிமுகப்படுத்த முயலுகின்றனர், கவித்தாலயா புரடக்ஷன்ஸார். இப் படத்தில் எம். ஜி. ஆர்., புதுமுகம், எம் ஆர். ராதா, அசோகன் முதலானோர் நடிப்பர் எனத் தெரியவருகிறது. டி. ஆர். ராமண்ணா டைரக்ட் செய்யவிருக்கும் இப் படத்தின் பாடல்களை கண்ணதாசன் இயற்ற, திரையுலக இரட்டையர்கள் விஸ்வநாதன், இராமமூர்த்தி இசையமைப்பார்கள்.

## ஜெமினியுடன் ராகினி

பத்மினி திரையுலகிலிருந்து ஆறுதல் பெற்றது ராகினிக்கு நன்மையாகப் போய் விட்டது போலிருக்கிறது. மஜஸ்டிக் ஸ்டுடியோவில் துரிதமாகத் தயாராகிவரும் ராஜலட்சுமி பிக்சர்சாரின் பெயரிடப் படாத தயாரிப்பில் ராகினி கதாநாயகியாக ஜெமினி கணேசனுடன் நடிக்கிறார். அசோகன், நம்பியார், நாகேஷ், மனோரமா முதலாகப் பலர் நடிக்கும் இப்படத்தை கே. வி. மகாதேவன் தயாரிக்கிறார்.

# எனது கவிதைகளை மதிப்பிட என்ன யோக்கியதை இருக்கிறது?


—கவிஞர் கண்ணதாசன்

விரைவில் இலங்கை சினிமாஸ் திரைகளில் வெளிவரவுள்ள 'ஆலயமணி' படத்தின் 100ம் நாள் விழா சென்னை கோடம்பாக்கத்திலுள்ள



விஜயா தோட்டத்தில் விமரிசையாக நடந்தேறியது. இவ்விழாவில் கலந்து கொண்ட, படத்தின் பாடல்களை இயற்றிய கவிஞர் கண்ணதாசன், விழாவில் பெரிய பரபரப்பை ஏற்படுத்திவிட்டார்.

'எனது கவிதைகளை மதிப்பிட்டு, அவை நல்லனவல்ல என்று கூற பத்திரிகைக்காரர்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது' என்று கேட்டார். 'சரி. அப்படி என் கவிதைகளை மதிப்பிட வரு முன் நான்கு கவிதை அடிகளாவது எழுதிவிட்டு மதிப்பீடு கூற முனையட்டும்,' என்று கூறினார். இந்த வார்த்தைகள் ஒரு சாதாரண கவிஞரிடமிருந்து வந்திருந்தால் அத்தனை பரபரப்பை ஏற்படுத்தியிருக்க முடியாது. ஆனால் திரு. கண்ணதாசனே ஒரு பத்திராதிபர். பத்திரிகை உலகில் பல நாள் வாழ்ந்தவர். இப்படிப் பட்டவர் இந்த வார்த்தைகளைக் கூறியது விழாவிலிருந்தோரிடையே பரபரப்பை ஏற்படுத்தியதுடன், பத்திரிகைக்காரர் என்று இவர் பொதுப்படையாகக் கூறியதால் எல்லாப் பத்திரிகையாளர் மனங்களும் புண்படவும் நேர்ந்தது.



உங்கள் நெற்றியில் பட்ட காயம் என் நெஞ்சத்தில் பட்டது போல் இருக்கிறதே என்று ராஜேந்திரனைப் பார்த்து விஜயகுமாரி கூறுகிறார் போலும். விரைவில் சினிமாஸ் திரைகளில் பவனிவரவிருக்கும் 'ஆலய மணி'யில் எஸ். எஸ். ஆர்.-விஜயகுமாரி ஜோடியுடன் சிவாஜி-சரோஜாதேவி ஜோடியும் தோன்றுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சியாளருக்கு . . .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டு இறுதிக்குள் விலக வேண்டியுமான இக்கட்டான நிலைக்கு தமிழ் பேசும் அரசாங்க ஊழியர் தள்ளப்பட்டுள்ளார்கள். அரசாங்கம் இப்பொழுது கையாளும் கொள்கையின் விபரங்கள் தாங்கள் அறிந்தவையாகையால் அவற்றை இங்கு எடுத்துக் கூறவேண்டியதில்லை ஆனல் இக்கொள்கை காலஞ்சென்ற பிரதமர் 1956ல் கூறியதற்கு மாறுனது மட்டுமன்றி மனித உரிமைகட்கும் இயற்கை நியதிக்கும் கூட முரணுகுமென்பதை மட்டும் குறிப்பிடல் போதுமானது

## நமது வேண்டுகோள்

இந்நிலையில், பாராளுமன்றத்துக்கு உள்ளும் புறத்தும் தங்கள் செல்வாக்கை பிரயோகித்து 1956ல் உறுதியளிக்கப்பட்டவாறு தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு உரிய அந்தஸ்தை நிலைநாட்டத் தங்கள் உதவியை நாடுகிறேம். 1956 செப்டெம்பரில் சேவையிலிருந்த தமிழ் பேசும் அரசாங்க ஊழியர் பற்றி பின்வரும் கோட்பாட்டை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளச் செய்வதே தங்கள் தலையீட்டின் நோக்கமாக இருக்கவேண்டுமென்று நாங்கள் விரும்புகிறேம்.

"பழைய சேவையாளர் அனைவரும் எவ்விதஇடர்ப்பாடுகளுக்கும் தண்டனைகளுக்கும், உள்ளாக்கப்படாது ஏற்கனவேயுள்ள நிபந்தனைகள், உடன்படிக்கைகளின்படியே தாம் இளைப்பாறும் வயதுவரை —அல்லது பிற காரணங்களுக்காக இளைப்பாறும் வரை தொடர்ந்து சேவையிலிருக்க அனுமதிக்கப்பட வேண்டுமென்பது பொது விதியாதல் வேண்டும். அவ்வாறு தொடர்ந்து சேவையிலிருக்கையில் (திறமையும் சேவைக் காலமும் போன்ற நியதிகளுக்கமைய) அவர்களுக்கு இயல்பாகக் கிடைக்கக்கூடிய பதவி உயர்வுகளும் பிற வாய்ப்புக்களும் மறுக்கப்படக் கூடாது.

இக்கோட்பாட்டின் அடிப்படையாயுள்ள பொது உரிமைகளும் சட்டரீதியான உரிமைகளும், நேர்மையானதும் இயற்கை நியதிக்கமைந்ததுமான எந்த அமைப்பிலும் மறுக்கப்பட முடியாதவை இதனை ஏற்றுக்கொள்ளவேண்டியதின் அவசியம் எமது சார்பில் பன்முறை பாராளுமன்றத்துக் குள்ளேயும் புறத்தேயும் வற்புறுத்தப்பட்டுள்ளது. இக்கோட்பாடு காலஞ்சென்ற பிரதமர் தன் நிருபங்களிற் கூறியவற்றினதும் உறுதிமொழிகளினதும் சாராம்சமேதவிர வேறில்லை. எனவே இதனை ஏற்றுக்கொள்ள வேண்டியதற்கான காரணங்களையும் அவசியத்தையும் அரசாங்கம் ஒப்புக்கொள்ளும்படி செய்வது தங்களுக்கு இயலாத செயலாகாது. மேலும் காலஞ்சென்ற பிரதமரின் உறுதிமொழிகளை அரசாங்கம் கடைப்பிடிக்குமாறு செய்வது நாட்டிற்குத் தாங்கள் செய்ய வேண்டிய கடமையுமாகும்

## புதிய சேவையாளர்

இத்துடன் தொடர்புடைய இன்னுமொரு விடயமும் தாங்கள் தலையீட்டுப் பரிகாரம் தேடுதற்குரியதாக உள்ளது. 1956 செப்டெம்பருக்குப் பின் சேவையிற் சேர்ந்த ஏறத்தாழ எல்லா தமிழ் அரசாங்க ஊழியர்களையும் அரசாங்கம் சேவையில் உறுதிப்படுத்தாதிருப்பதையே இங்கு குறிப்பிடுகிறேம். (இதன் விளைவான) அவர்களின் நிரந்தரமற்ற உறுதியற்ற நிலை, நேர்மைக்கும் இயற்கை நியதிக்கும் அமைந்த கோட்பாடுகளுக்கு முரணனதோர் இடர்ப்பாட்டுக்கு அவர்களை ஆளாக்குகிறது என்பதுடன் அரசாங்க சேவையின் திறமையையும் ஒழுங்கையும் கூட ஊறு செய்வதாகும். தற்போது நாடடை எதிர்நோக்கும் நெருக்கடியான பொருளாதார நிலையில், இவ்வாறு, பெரும் தொகையான அரசாங்க ஊழியர்களின் ஒழுக்கத்தையும் திறமையையும் பாதிக்கக் கூடிய ஏற்பாடுகளை அகற்றி, அவர்களுக்கு நீதி வழங்கவேண்டியதன் அவசியத்தை நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள்.

எனவே தங்கள் செல்வாக்கு அனைத்தையும் பிரயோகிப்பதுடன் இது விடயத்தில் தங்களுடன் ஒத்த கருத்துடைய ஏனையபாராளுமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் ஆகியோரின் செல்வாக்கையும் திரட்டி, தமிழ் அரசாங்க ஊழியருக்கு, 1956 லிருந்து வழங்களிக்கப்பட்ட, நேர்மையான, நாட்டு நலனுக்குகந்த உரிமைகளைப் பெற்றுத் தந்துதவ வேண்டுகின்றேம்.

---

## மலையகத்து...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தில். குடும்பங்கள் பிரிவதற்கு பொருளாதாரமந்தமும் ஒரு காரணம்.

மலையகத்து மக்களின் துன்ப மயமான வாழ்வை மலரவைக்க ஈழத் திருநாட்டில் இணைப்பாட்சி ஒன்றை உருவாக்கினல் ஒழிய, மலையகத்து மக்களின் வாழ்வில் மகிழ்ச்சி நிலவாது. வாழும் சுதந்திரத்தை மீட்டுக் கொடுக்க வல்லவர்களை, மலைநாட்டு மறவர் கூட்டம் இருகரமும் ஏந்தி வணங்கி வரவேற்கிறுர்கள். மக்கள் கட்சியான தமிழரசுக்கட்சி ஒன்றுதான் ஜீவாதார உரிமைகளைப் பெற்றுத்தர முடியும். மலைநாட்டில், மக்களின் மகிழ்ச்சி இணைப்பாட்சியின் மூலம்தான் பெறமுடியும்.

---

## நமது இன்ப...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளவேண்டும். நல்லன, நமக்காக காத்திருக்கும் போது, தீய சக்திகளால் திண்டப்பட வேண்டியதில்லை.

நாமும், நம்மினமும் நானிலம் புகழ வாழ வேண்டும். அதற்கு நமக்கென, நம்வாழ்விற்கெனப் பணியாற்றப் போகும் இலங்கைத் தமிழரசுக் கழகத்தின் தொழிற் சங்கத்தில் ஒற்றுமைக்காகவும், உயர்வுக்காகவும் பாடுபடுவோம்.

ஈழத் தந்தை செல்வா இயம்பும்
எல்லா வழியும் எமக்கு ஏற்பு!
வேழம் ஒத்த வீர மறவர்
வெல்வோம் நிற்போம் தமிழர்
அணியில்!

---

## கலாநிதி மன்றம் ஓராண்டு விழா

சென்ற 23-3-63 சனிக்கிழமை தமது ஓராண்டுபூர்த்தியையொட்டி கலாநிதி மன்றப் பொதுக் கூட்டம் மன்றக் காரியாலயத்தில் திரு. ச. பிரணவேந்திரன் தலைமையில் கூடப்பட்டது. மன்றப் பொதுக் காரியதரிசியான திரு. சு. பாலச்சந்திரன், சென்ற கூட்ட அறிக்கை வாசித்தார். அதன் பின்னர் இரண்டாவது ஆ[illegible] உத்தியோகத்தர்[illegible] செய்யப்பட்டனர்.

---

# முடத்தெங்கு

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

ளைப் பார்க்கும் ஆவல் சுடர் விட்டுக் கொண்டிருந்தது.

இந்த ஆசை, வடிவேலு குழந்தையாக இருந்த போது, ஒரே ஒரு முறை சுடர்விட்டு எழுந்து,— இன்றையமருமகளுக்கு—அன்றே வடிவேலைக் கொடுப்பதாகச் சத்தியம் செய்து, மருமகளின் தாயோடு அடிக்கடி பேசிக்கொண்டு இருந்த போது, பார்வதிக்கு சிதம்பரம்பிள்ளையின்மேல் சந்தேகம் எழுந்து, இன்றைய மருமகளான இலட்சுமின் தாயார் மாரிமுத்துவோடு அன்று சண்டைபோட்டு, தன் கணவனையே தாறுமாருக—தன் கணவன் பிறருக்கு இரையாகக் கூடாது என்ற எண்ணத்தில்—ஏசி, 'அந்த வீட்டுப் பக்கமே போகக் கூடாது' என்று கண்டித்தபோது, சிதம்பரப்பிள்ளை உண்மையைச் சொல்ல முடியாமல் எதையோ மழுப்ப அதைத் தவருகப் புரிந்து கொண்ட பார்வதி, "அந்தக் குழந்தைக்கு நீங்கள்தான் தந்தையா?" என்று கேட்க, "ஆம்" என்று சொல்ல வந்து பாதியிலேயே சிதம்பரம்பிள்ளை நிறுத்திக் கொள்ள, அது பெரிய ரகளையில் முடிந்துவிட்டிருந்தது.

பார்வதி கர்ப்பம் தரித்த அதே நாளில் மாரிமுத்துவும் கர்ப்பம் தரித்தாள் என்று மாரிமுத்துவின் கணவன் மூலம் கேள்விப்பட்ட சிதம்பரம்பிள்ளை, அன்றுதொட்டு மாரிமுத்துவின் குடும்பத்தில் தனிப்பட்ட அக்கறை செலுத்தத் தொடங்கினர். அப்போதெல்லாம், பார்வதிக்கு இந்த நிகழ்ச்சி தெரியவே தெரியாது. தெரிந்திருந்தால், குழந்தை பிறந்து சில வருடங்களுக்குப் பிறகு நடத்திய 'யுத்தத்தை' முன்பே நடத்தியிருப்பாள்.

இந்த நேரத்தில், பார்வதியின 'ஆண் குழந்தை' நச்சரிப்பு உதயமாகவே, அவளோடு சேர்ந்து பிற்பாட்டுப் பாடிக் கொண்டிருந்த சிதம்பரம்பிள்ளை மாரிமுத்துவோடு மனம் திறந்து பேசி ஏதோவொரு உடன் பாட்டுக்கு வந்தார்.

அதன் பிறகு எத்தனையோ நிகழ்ச்சிகள், பலரின் கண்களில் மண்ணைத் தூவிக் கொண்டு நழுவிப் போயின. ஆனல் மாரிமுத்துவிற்கும் சிதம்பரப்பிள்ளைக்கும் இருந்த நெருக்க உறவு... இருவருக்கும்தான் தெரியும்.

நடுக்கூடத்தில், சாய்மானக் கதிரையில் படுத்துக் கிடந்த சிதம்பரம் பிள்ளையின் அருகே இருந்த பார்வதி, வெற்றிலையை மடித்து அவரின் வாயில் நுழைத்துவிட்டு, சிதம்பரம் பிள்ளை நன்ருக வெற்றிலையை குதப்பிக்கொண்டபிறகு "எங்க நாக்க நீட்டுங்க, சிவந்திருக்காண்டு பாப்பம்" என்ற போது, ஐம்பத்தைந்து வயது நிரம்பிய சிதம்பரம் பிள்ளை இருபத்தைந்து வயது வாலிபனின் நிலைக்கு வந்து, இருபது வயது மனைவியோடு குழைவதைப் போல, "பார்வதி......என்ன என்ன இண்டைக்கு ஒருமாதிரியாக வனையிற...ம்...ஓங்க ......இந்தப் பக்கம் முகத்தத் திருப்பு ......இதென்ன சட்டிக் கரி எல்லாம் முகத்தில்" என்று அதைத் துடைத்து விட்டபோது, பார்வதி பதினறு வயதிற்கு இறங்கி வந்து முகத்தைத் துடைத்துக் கொண்டு, முகத்தை தரை நோக்கித் தாழ்த்தி வெற்றிலைக் காம்பைக் கிள்ளிக் கொண்டு சிரித்த சிரிப்பு— அது தான் நாணமோ?

வாசலில் 'டாக்ஸி' வந்து நிற்கும் சத்தம் கேட்டதும் சிதம்பரம்பிள்ளையின் பிடியில் கிடந்த கையை விடுவித்துக்கொண்டு ஓடிவந்த பார்வதி, ஓடிவரும்போது அவள் முகத்தில் தவழ்ந்து கொண்டிருந்த 'வடிவேலுவும் மருமகளும் [illegible] [illegible] நடையில் சரிசெய்வதுபோல திரும்பிச் சென்றபோது 'அம்மா' என்ற வடிவேலுவின் குரல் கேட்டு, நடுக்கூடத்தைத் தாண்டுவதற்கு எடுத்து வைத்த காலைப் பெயர்க்காமலே நின்று திரும்பினுள்.

'அம்மா' என்று அழைத்தவன் நடுக்கூடத்து நுழைவாயில் வந்தபோது, சாய்மானக் கதிரையில் படுத்தபடி கிடந்த சிதம்பரம் பிள்ளை மெல்லச் சிரித்துக் கொண்டு, மருமகளோடு வந்த மாரிமுத்துவை வரவேற்ருர்.

மாரிமுத்து சிதம்பரம்பிள்ளையின் அருகில் உட்கார்ந்து கொண்டதும், [illegible]தைக் காணுதவளைப் போல மகனையும் மருமகளையும் அழைத்துக்கொண்டு வேறு அறையில் உட்கார வைத்துவிட்டு மாரிமுத்துவுக்கும் சிதம்பரம்பிள்ளைக்கும் இடையே நடைபெறும் பேச்சைக் கவனிக்க, ஒதுக்குப் புறமாக இருவர் கண்ணிலும் படாமல் நின்று கொண்டாள், பார்வதி.

இரண்டு மணி நேரமாக சிதம்பரம்பிள்ளையும், மாரிமுத்துவும் பேசிய பேச்சுக்களைக் கேட்டுக் கொண்டிருந்த பார்வதி, தனக்குள்ளாகவே அழுது தீர்த்துவிட்டு மகனும் மருமகளும் இருந்த அறைக்கு வந்தாள்.

இதுவரைக்கும் இல்லாத புதிய பார்வை தன்மீது படிவதைப் பார்த்த இலட்சுமிக்கு, அந்தப் பார்வைக்குச் சரியான பதில் பார்வை பார்க்கத் தெரியாது கணவனுக்குப் பின்புறமாக ஒதுங்கிக் கொண்டாள். வடிவேலுக்கு தன் தாயின் போக்கே விசித்திரமாக இருந்தது.

'மகளே' என்று அழைக்கச் சேர்த்த உதடுகளில் இருந்து எந்த வார்த்தையும் வெளிவராமல் உதடுகள் மட்டும் மெல்லத் துடிக்க, சேலை முந்தானையை சுட்டு விரலால் சுருட்டிவிட்டுக்கொண்டு தன்னை மீறிய நிலையில் நின்ற பார்வதிக்கு, தன் கணவன் மாரிமுத்துவோடு பேசிய பேச்சுக்கள் நினைவுக்கு வந்தன.

தன்மீது தன் கணவன் கொண்டிருக்கும் அன்பு, இத்தனை ஆழமானதாக இருக்கும் என்பது இதற்கு முன்பு புரியவில்லை. இப்போது புரிகிறது. தனனுடைய ஆசை குலைந்துபோகாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத் தன் கணவன் செய்து விட்ட செயலும், இதுவரை அதை அவளிடம் சொல்லிக் கொள்ளாமல் இருப்பதையும் எண்ணிய பார்வதிக்கு, தன் கணவன் மேல் அனுதாபம் பிறந்தது.

கிழமைகளின் எல்லைக் கோட்டிலே, இதயத்தின் கசிவு நீரத் துளிகள் யாருடைய உத்தரவையும் எதிர்பாராமல் விழுந்து விடத் துடித்துக் கொண்டிருந்தன. தான பெற்ற பெண்ணின் முகத்தை பெற்றவள் என்ற பாசத்தோடு பார்த்து 'மகளே' என்று அழைத்த போது, 'இத்தனை நாளாக இன்ஞெருவருக்குப் பலன் கொடுத்துக்கொண்டிருந்தாயே' என்ற ஏக்கம்-பாசம் இன்னும் என்ன வெல்லாமோ கலந்து கிடப்பதை அங்கே வந்துகொண்டிருந்த சிதம்பரம்பிள்ளையால் உணர முடிந்தது.

[யாவும் கற்பனை]


ஜேர்மனியில் உற்பத்தி செய்யப்பட்ட

தமிழ் டைப்ரைட்டர்

"எரிக்கா" போட்டபிள் டைப்ரைட்டர்



இந்த கனம் குறைந்த மெஷினில் நடுத்தர டைப்ரைட்டர்களிலிருக்கும் சகல அம்சங்களும் உள்ளது. கந்தோரில் அல்லது வீட்டில் பாவிப்பது போன்று பிரயாணத்தின்போதும் அதே பிரயோசனமானது.

விநியோகஸ்தர்கள்:

சென்ற். அந்தனீஸ்

ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்.,

516, ஸ்கின்னர்ஸ் வீதி, தெற்கு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தொழிற் கல்வி

தவநிதிதேவி, மாதகல்

நம் முன்னோர் மானிடப் பிறப்பின் மேன்மையைப் பலபடச் சிறப்பித்துப் பேசுவதற்குக் காரணம் இப்பிறவி ஏனைய எல்லாப் பிறவிகளிலும் விழுமியது என்பதேயாகும். இப்பிறவி ஒன்றே நன்மை தீமை இன்னவை என்று அறிந்து வாழ்க்கையைத் திருத்திக்கொள்ளும் தன்மை வாய்ந்ததாய் அமைந்திருப்பது. இவ்விரண்டையும் அறிவதற்குக் கல்வி அறிவு உதவியாய் இருக்கிறது. இக் கல்வி அறிவை ஏட்டின் மூலமும் தொழிலின் மூலமும் நாம் பெறுகிறோம்.

ஏட்டுக் கல்வி என்பது புத்தகங்களின் மூலம் படித்து மன அறிவைப் பெற்றுக் கொள்வதாகும். தொழிற் கல்வியோ, உடலை வருத்திக் கஷ்டப்பட்டு வேலை செய்வதால் பெற்றுக் கொள்வதாகும். உழவு, நெசவு, தச்சு முதலிய தொழில்கள் இக் கல்வியில் அடங்கும். தொழிற் கல்வியைக் கற்பவர் ஏட்டுக் கல்வியையும் கற்க வேண்டும். இரு கல்வியும் ஒவ்வொருவரும் பெற்றிருத்தல் மிகவும் நன்மையானதே. ஏட்டுக் கல்வி கற்றவர் தொழிற் கல்வியைக் கற்கச் சிறிது அசுசி கொள்வர். தொழிற் கல்வி இழிசனர் மேற்கொள்ள வேண்டியது என்று சிலர் எண்ணுவர். அப்படி நினைப்பது எட்டுணையும் பொருந்தாது. கல்வியே ஒரு நாட்டில் வளர்ந்து வருமானால் பல பொருள்கள் நாட்டில் உற்பத்தியாகமாட்டா. ஆகவே, நாட்டுக்கு நன்மை ஏற்பட வேண்டுமானால், ஒவ்வொரு நாட்டிலும் தொழிற் கல்வி இன்றியமையாது பரவ வேண்டும்.

ஏட்டுக் கல்வி அநேகமாக ஒருவர் கீழ் அடிமையாகத் தொழில் புரிவதற்கே துணை செய்யும். தொழிற் கல்வியோ, ஒருவன் சுயமரியாதையுடையவனாய், தனக்குத் தொழில் இல்லாத காலத்திலும் தான் கற்ற தொழிலால் பொருளைச் செய்து விற்று ஜீவனத்துக்கு வழி ஏற்படுத்திக்கொள்ள ஏதுவாய் இருக்கிறது. ஏட்டுக் கல்வி மனத்துக்கு உரம் கொடுக்கும். தொழிற் கல்வியோ மனத்துக்கேயன்றி உடலிற்கும் பலத்தைத் தரும். இதனால் ஆரோக்கியத்திற்கும் வழியுண்டாகிறது. தொழிற் கல்வி அபிவிருத்தி அடைய அடைய, நாமும் செல்வத்தில் சிறந்து விளங்குவோம். ஒரு நாடு முன்னேற்றம் அடைந்த நிலையில் இருக்கிறதெனில், அதற்குக் காரணம் அந்நாடு தொழிற் கல்வியில் கவனத்தை அதிகம் செலுத்தியதே அன்றி வேறன்று. இதனுடைய அருமையான நன்மைகளைக் கண்டன்றோ இப்போது தொழிற் கல்விக்கு எல்லா நாடுகளும் மதிப்பு அளிக்கின்றன?




# தேச மெல்லாம் தமிழியக்கம்

## அண்ணனுக்கு அன்பு மடல்

'பேச்செல்லாம் தமிழ் மொழி
யின் பெருமை பேசி
பெற்றதெல்லாம் தமிழ்த்
தாயின் வெற்றி என்றும்
மூச்செல்லாம் தமிழ் வளர்க்கும்
மூச்சே வாங்கி
முற்றுமவள் திருப்பணிக்கே
மூச்சு விடுவோம்'

அன்பின் அண்ணா!

வணக்கம். உங்களது அழகு மடலை வாசித்து அகமிக மகிழ்ந்தேன். தேன் சொட்டும் தீந்தமிழில் இளந் தமிழன் ஒருவர்க்குரிய வீராவேசத்துடனும், உணர்ச்சிப் பெருக்குடனும் உங்கள் மடல் அமைந்திருந்தது. 'தூங்காதே தமிழா! விழித்தெழு!' என்று உங்கள் மனத்தின் உள் ஒலியைப் போர் முரசாக்கி அறைகூவியிருந்தீர்கள். அந்த அறைகூவலை ஏற்று எங்கள் அன்பு நண்பர்களும், நண்பிகளும் அன்னையின் பாதங்களில் பூட்டியிருக்கும் விலங்கைத் தகர்த்தெறியச் சித்தமாய் இருக்கின்றனர். ஆனால் அந்நிலைக்கு நாம் செல்லு முன் எம் வாழ்வையே எல்லாம் தமிழ் வாழ்வாக்கிடல் வேண்டும்.

சேர, சோழ, பாண்டியரின் மடியிலே சிங்காரப் பண் இசைத்தது எம் கன்னித் தமிழ்! இமயம் முதல் குமரி வரை வெற்றிக்கொடி நாட்டியது எம் செந்தமிழ்! முச்சங்கத்திலே, தொட்டிலிலே வளர்ந்து மாறுத பசுமையும், சாகாத புதுமையும் பெற்றது எம் பைந்தமிழ்! புறநானூற்றின் பெருமையைப் புவியோர்க்கு உணர்த்திய ஒண்டமிழ்—பாரதியாரின் பாவிலே களிநடனம் புரிந்த தேன் சொட்டும் தீந்தமிழ்—வள்ளுவர் வகுத்த வண்டமிழ்! கனக விசயர் தலையில் கல்லேற்றிய தமிழ்-குவோத்துங்கன் கொலுவிலே, கம்பர் உருவிலே திருநடனம் புரிந்த தமிழ்-இன்று இலங்கையில் ஒதுக்கப்பட்டு, புதைக்கக் குழியும் தோண்டப்படுகின்றது.

வந்தவர்க்கு வாழ்வளிப்பது வண்டமிழர் வாழ்வு முறை. தம் நாட்டை நோக்கி வந்தவர் இன்று எம்மையே வதைக்கத் தொடங்கிவிட்டனர். நம் தமிழன்னை எம் முன்னே அலறித் துடிக்கின்றாள். அவள் வாழ்ந்த வீடு உருக்குலைந்து காணப்படுகின்றது. செந்தமிழ்ச் செம்மல்காள்! அன்னையின் பழியைத் துடைக்காத மைந்தர் இருந்தென்-இறந்தென்?

அந்நிலையை நீக்குவதில் இளைஞராகிய நாம் முதற்படியில் இறங்க வேண்டும். அந்தப் படிதான் எம் வாழ்வை எல்லாந் தமிழாக்கும் பணியாகும். இக்கால மாணவர்களில் அனேகர் தித்திக்கும் தேன் தமிழைப் புறக்கணித்து விட்டு ஆங்கில மோகம் கொண்டு அலைகின்றனர். அஞ்சல்களை ஆங்கிலத்தில் எழுதுகின்றனர்; வீட்டுப் பெயர்ப் பலகைகளை ஆங்கிலத்தில் மாட்டுகின்றனர். வீட்டு மொழியாகவும் வந்தோரை வரவேற்கும் மொழியாகவும் ஆங்கிலமே உள்ளது. பத்து மாதம் சுமந்து பெற்ற தாயைப் புறக்கணிப்பது நியாயமாகுமா? அன்றி நீதிதான் ஆகுமா? இக்கால மாணவர்களின் நிலையிலே அவர்கள் தமிழைப் புறக்கணிக்கக் கூடாது. தமிழரசு புரிந்திடல் வேண்டும் என்பதைக் கவி பாரதிதாசனும்,

'ஆங்கிலத்தைக் கற்கையிலும்
அயல் மொழியைக் கற்கை
யிலும்
திங்களினை செந்தமிழை
தென்னாட்டின் பொன்
னேட்டை
உயிரெனக் கொள்வீர்'

என்று பாடியுள்ளார்.

இன்று ஆட்சி பீடத்தில் அமர்ந்துள்ள சிங்களவர் 'உத்தியோகம்' என்ற பசப்பு வார்த்தையைக் கூறி இளைஞர்களை மயக்க முயற்சிக்கின்றனர். இதனால் மாணவர் சிலர் சிங்களம் கற்க முன்வந்துள்ளனர். வயிற்றுப் பசியைப் போக்கப் பணம் வேண்டும், அதற்கு உழைப்புத் தேவை. ஆனல் அந்த ஓர் காரணத்திற்காக அன்னியரிடம் அடிமைப்பட்டு, கைகட்டி, வாய் பொத்தி நிற்க வேண்டுமா? அன்றேல் அன்னிய மொழியைத் தான் படிக்க வேண்டுமா? வீரசுதந்திரம் வேண்டி நின்றார் பின் வேறொன்று கொள்வாரோ? சோற்றிற்காகச் சொந்த மொழியைத் தள்ளிவைப்பதிலும் பட்டினி கிடந்து சாவதே மேல்.

'மண்ணில் இன்பங்களை
விரும்பிச் சுதந்திரத்தின்
மாண்பினை இழக்கமாட்டோம்'

என்று தமிழ் பேசும் மக்கள்-ஆண், பெண் உட்பட-அனைவரும் சங்கற்பம் செய்து, ஓர் அணியாகத் திரண்டு, தேசமெல்லாம் தமிழியக்கம் பரவும் வகை செய்தல் வேண்டும். அண்ணாவிற்கும் மற்றும் தோழர் தோழியர்க்கும் உங்கள் அன்பின் சிறீதர் கூறிடும் கருத்திது.

உங்கள் அன்புத் தம்பி,
சிறீதர்.

— விமலா நடராசா —

அன்புள்ள மருமக்களே!

'எல்லாம் தமிழ் இயக்கம்' ஆரம்பித்து விட்டது. மருமக்களாகிய நீங்களும் உங்கள் கடிதத் தொடர்புகள், மற்றும் அலுவல்கள் எல்லாவற்றையும் தமிழ் மொழியிலேயே ஆற்றுங்கள். இயக்கம் வெற்றி பெற இளைஞர்களாகிய உங்களின் உற்சாகமான தொண்டே மிகவும் அவசியமானதாகும்.

மலைக்குகை மர்மத் தொடர் கதையைப் பாராட்டிப் பல கடிதங்கள் வந்துள்ளன. இப் பகுதியில் சித்திரத் தொடர் கதையொன்றையும் ஆரம்பிக்க வேண்டுமென அநேக மருமக்கள் தமது ஆவலைத் தெரிவித்து எழுதியிருக்கின்றனர். அது பற்றி ஆலோசித்து, ஆறுதலாக உங்களுக்கு ஓர் முடிவு சொல்லுவேன்.

உங்கள் அனைவருக்கும் ஈஸ்டர், புத்தாண்டு வாழ்த்துக்கள்.

வணக்கம்.

உங்கள் அன்பின்,

வளர்மதி மாமா

# சுதந்திரப் பொன்மொழிகள்

(தமிழழகன், ஊவாகட்டவளை)

எந்த ஒரு ஜீவராசியும் சுதந்திரமாக வாழத்தான் விரும்பும் என்பதை செப்ப வேண்டியதில்லை. ஆனால், எதிர்த்துப் போராடி சுதந்திரம் வாங்கி, சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற கொள்கை மனிதனிடத்தில் மட்டுமே இருக்கிறது என்று கூறினால் அது மிகையாகாது.

எது மனிதனை அடிமைப்படுத்தினாலும் அது அவனிடமுள்ள நல்லவைகளில் பாதியை அழித்து விடுகிறது. —போப்

அநியாயம் என்ற அடிப்படையில் கட்டப்பட்டதுதான் அடிமைத்தனம். —பிளட்டோ

அடிமைத்தனம், திருடுவதற்கும், கொள்ளை அடிப்பதற்கும் ஒப்பானது.

—சாக்ரடீஸ்

நாம் சுதந்திரமாய் வாழப் பிறந்தோம் என்பதை உணராதவைரும் சுதந்திரத்திற்காகப் போராட முடியாது.

—கோதே

உண்மை, வீரம் ஆகியவற்றின் அடிப்படையில் பிறப்பது தான் சுதந்திரம். தாழ்வு மனப்பான்மை, மடமை ஆகியவற்றின் அடிப்படையில் பிறப்பதுதான் அடிமைத்தனம்.

—ஜெ. பெந்தாம்

ஒரு நாட்டு மக்கள் சுதந்திரம் அடைவதற்குத் தகுதி ஆகாத வரையில், அதன் அரசியல் தலைவர்கள் எவ்வளவு முயன்றும் அதற்குச் சுதந்திரம் கிடையாது.

—மெக்காலே

# கடல் நீரிலிருந்து குடி தண்ணீர்

நாளொன்றிற்கு கடல் நீரிலிருந்து இரண்டு லட்சம் கலன் குடி தண்ணீர் உற்பத்தி செய்யும் இயந்திரம் ஒன்றை அமெரிக்கா அமைக்கப்போகிறது. உலகிலேயே இவ்வகையில் இது தான் மிகப் பெரிய இயந்திரமாக இருக்கும். அமெரிக்காவில் வட கரோலினா மாநிலத்தில் ரைட்ஸ் வில் என்ற ஊரில் இவ்வருடம் நவம்பர் மாதத்தில் இயங்கத் தொடங்கும்.

உறைய வைத்து உப்பு நீக்கும் விதம் இதில் கையாளப்படும். கடல் நீர் சிறிய பனிக் கட்டிகளாக மாற்றப்படும். அப்பொழுது உப்பு மாறிவிடும். நன்கு சுத்தம் செய்யப்பட்ட பின்னர் பனிக்கட்டிகள் உருகித் தண்ணீராகும்.

கடல் நீரிலிருந்து குடி தண்ணீர் தயாரிக்கப் பல முறைகள் இருக்கின்றன. இந்த முறைகளை விரிவாகச் சோதித்துப் பார்க்க அமெரிக்க அரசாங்கம் ஐந்து இயந்திரங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளது. வட கரோலினா இயந்திரம் நான்காவதாகும். எம்முறை நல்லது, எது கட்டுப்படியாகக் கூடியது என்பதெல்லாம், நீண்ட காலம் இந்த இயந்திரத்தை இயக்கிப் பார்த்தால் தான் தெரியும்.




—ந. இராணி நவமணி—

கண்ணைக் கசக்கிவிட்டுப் பார்த்தான். கண்டதெல்லாம் உண்மைதான் என்ற நம்பிக்கை அவனுக்கு ஏற்பட்டது. மீண்டும் சிறிது தூரம் பார்த்துக்கொண்டே சென்றான். அங்கே ஒரு அதிசயத்தைக் கண்டான். மலைக் குகை மாளிகையில் கிடந்த ஒரு கல்லில் ஏதோ ஒரு மொழியில் எழுத்துக்கள் செதுக்கப்பட்டிருந்தன. அந்த எழுத்துக்களோடு இரண்டு இடங்களில் 100, 10 என்னும் இலக்கங்களும் காணப்பட்டன.

சிறுவன் அதை நன்றாகக் கவனித்துப் பார்த்தான். ஒன்றும் புரியவில்லை. இப்படி ஒரு பாஷை இருக்கிறதென்றும் அவனுக்குத் தெரியாது. இன்னும் சிறிது தூரம் சென்று பார்த்து விட்டுத் திரும்பினான். போகும்போது வழியில் மரக் கொப்புகளை முறித்துப் போட்டுக் கொண்டு போனான். அதன் உதவியுடன் அந்த அடையாளத்தைப் பார்த்துக் கொண்டே கள்வர் வீட்டை அடைந்தான். அப்போது நேரம் மாலை 5-30 இருக்கும். இருட்தேவி உலகை அணைத்துக் கொள்ள ஆயத்தமானாள்.

சிறுவன் பக்கத்தில் இருந்த மரத்தில் ஒரு பழத்தைச் சாப்பிட்டு விட்டு மரத்தில் ஏறிக்கொண்டான். வீட்டினுள் ஒரே இருளாக இருந்தது. அங்கு ஏதும் தெரிகிறதா என்று சிறுவன் பார்த்துக்கொண்டிருந்தான். சில நிமிடங்களில் விளக்கொன்று எரிய ஆரம்பித்தது. பலர் பேசும் சத்தமும் கேட்கத் தொடங்கியது. ஆனால் தெளிவாக ஒன்றும் கேட்கவில்லை.

சில நிமிடங்களில் ஒரு முரடனின் குரல் கேட்டது. அடுத்து ஒரு பெண்ணின் அழுகைக் குரலும் கேட்டது. அப்போது கதவு திடீரென்று திறந்து கொண்டது. முகமூடி அணிந்த பலர் குதிரையில் ஏறி எங்கோ போவதற்குத் தயாராக இருந்தனர். தலைவனின் கட்டளை பிறந்தது: 'காரியத்தை முடித்துக் கொண்டு வெற்றியோடு திரும்புங்கள்! அரசன் மிகவும் விழிப்புடன் இருக்கிறான், கவனம்! தோல்வி என்பதை என் பரம்பரையே கண்டிராது. நீங்களும் அந்நிலைக்கு வந்து விடாதீர்கள்!'

குதிரைகள் வீட்டைச் சுற்றிக் கொண்டு சென்றன. காட்டின் அமைதியைக் குழப்பி, இருளைக் கிழித்துக் கொண்டு சென்றன.

வீட்டினுள் பல பெண்களைத் தூணோடு சேர்த்துக் கட்டியிருந்தார்கள். இன்னும் பலரை அறைகளில் போட்டுப் பூட்டியிருந்தனர்.

சில நிமிடங்களின் பின் கதவு பூட்டப்பட்டது. சிறுவன் இறங்கி வந்து ஜன்னல் வழியே பார்த்துக்கொண்டிருந்தான். அங்கு தூணோடு கட்டி வைத்திருந்த கன்னிப் பெண்களின் முன், திருடர் தலைவன் கையில் சவுக்குடன் நின்றான். கன்னியர்கள் பார்க்கப் பரிதாபமான நிலையில் இருந்தனர். சவுக்கடித் தழும்புகள் அப்படியே தெரிந்தன. அப்போது ஒரு பெண் பேசலானாள்: 'நாங்கள் உங்களுக்கு என்ன குற்றம் செய்தோம்? எதற்காக எங்களைச் சித்திரவதை செய்கிறீர்கள்? உங்களுக்குத் தாய் தங்கையர் இல்லையா? உங்கள் இதயமென்ன இரும்பா? ஒன்றும் அறியாத எங்களை விட்டு விடுங்கள் ஐயா!'

'ஹ...ஹா...ஹா!' பயங்கரமாகச் சிரித்தான் அவன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## திருமதி பண்டாரநாயக்காவுக்கு தேன் தமிழ் மன்றம் வேண்டுகோள்

'அன்பு நிறைந்த தாயே! உரிமையை இழந்து வாழும் தமிழ் மக்கள் நிலை பற்றி, தாங்கள் சர்வ கட்சி மகாநாடு கூட்டப் போவதாகவும், அம் மகாநாட்டிற்கு, வட கிழக்கு, மாகாணங்களில் உள்ள தமிழ்ப் பிரமுகர்களை அழைக்கப் போவதாகவும், தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளை அழைக்கப் போவதில்லை எனவும், பத்திரிகை மூலம் அறிந்தோம். தாங்கள் எடுக்கும் முயற்சி மகத்தானது. ஆனால் தமிழ் அரசுக் கட்சிப் பாராளுமன்றப் பிரதிநிதிகள் மகாநாட்டில் பங்கு கொள்ளாது விட்டால், அம்மகாநாடு தமிழர் உரிமை மகாநாடாக அமைய முடியாது, வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்கள், தமது அரசியல் வாழ்க்கையை தமிழ் அரசுக் கட்சியிடமே ஒப்படைத்திருக்கின்றார்கள். சென்ற இரண்டு, பாராளுமன்றத் தேர்தலிலும், தமிழ் மக்கள் தமிழ் அரசுக் கட்சியிடமே தமது பொறுப்பை ஒப்படைத்தார்கள் என்பதை நீங்களும் அறிவீர்கள்.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளாவிட்டால் அம்மகா நாட்டால் பிரயோசனம் இல்லை, தமிழ் அரசுக் கட்சிப் பிரதிநிதிகளை மகாநாட்டில் பங்கு கொள்ளாது செய்வது—தமிழ் மக்களை அவமதிப்பதாகும். தாங்கள் சிங்கள மக்கட்கு மாத்திரம் தாயாக இருக்காது. தமிழ் மக்கட்கும் தாயாக இருக்க வேண்டும் என்பதே எமது பணிவான வேண்டுகோள், தாங்கள் கூட்டும் மகாநாட்டில், தமிழரசுப் பிரதிநிதிகளையும் அழைத்து தமிழ் மக்களின் குறையைத் தீர்க்க வேண்டுமென வேண்டுகின்றோம்.

உரிமையை இழந்து வாழும் தமிழ் மக்கட்கு, உரிமையைக் கொடுத்து அவர்களும் சரிநிகர் சமானமாக வாழச் செய்தால் தான் இந்த நாடு பொருளாதாரத்தில் முன்னேற முடியும்—இனப்பகை ஒழிந்து, அன்பும் அறமும் வளரும்.'

இவ்வாறு, கொடிகாமம் தேன் தமிழ் மன்றம் ஓர் வேண்டுகோளைப் பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு அனுப்பியுள்ளது.

---

### சமய நூல் வெளியீட்டு விழா

சைவத் தமிழ்ப் பேரறிஞர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட 'சமயக் கட்டுரைகள்' என்னும் நூலின் வெளியீட்டு விழாவினை வைப்பது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டமொன்று சென்ற ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் ஆசிரியர் சங்கக் கந்தோர் மண்டபத்தில் நடைபெற்றது.

ஈழநாட்டில் இப்பொழுது இலக்கிய நூல்கள் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. சமய சம்பந்தமான நூல்கள் வெளி வருவது அரிதாக இருக்கிறது. பண்டிதமணி அவர்களால் எழுதப்பட்ட "சமயக் கட்டுரைகள்" என்னும் நூல் தமிழ் மக்களுக்கு-சைவமக்களுக்கு-ஓர் அரிய வரப்பிரசாதமாய் அமையுமென்று விழாக் காரியதரிசி திரு.அ. பஞ்சாட்சரம் அவர்கள் கூறினர். வெளியீட்டு விழாவை சித்திரை பிற்பகுதியில் யாழ் நகரில் வைப்பதெனவும், மிகவும் விமரிசையான முறையில் நடாத்துவதெனவும், பல பேரறிஞர்களை விழாவில் முக்கிய பேச்சாளர்களாய் அழைப்பதெனவும் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது.

### மத்திய மாகாண சைவ மகாசபை

'சத்தியம், ஒழுக்கம் ஆகியவற்றில் தவறாத நள மகாராசன் கடமையிற் சிறிது தவறியதால் கலி அவனைப் பற்றிக்கொண்டு பல ஆண்டுகள் துன்பம் அனுபவித்தான். அதே போல், வளர்மதி போல் பலரும் போற்ற வளர்ந்து வந்த நம் சபை, நன்றேக்குடன் செய்த தவறு சூதாட்டமாக முடிந்தது. பள்ளிக் கூடம் நடத்துவதற்கென வாடகைக்குக் கொடுக்கப்பட்ட எம் சபைக் கட்டிடத்தை அரசாங்கம் தனதுடைமையாக்க முனைகிறது.'

இவ்வாறு மத்திய மாகாண சைவ மகா சபையின் 37-ம் ஆண்டு நிறைவு விழா 23-3-63 சனிக்கிழமை மாலை சபை மண்டபத்தில் திரு. ம. ஆனந்தா அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொழுது காரியதரிசி தனது அறிக்கையில் குறிப்பிட்டார்.

சுவாமி சச்சிதானந்தா அவர்கள் மக்கள் சமய வளர்ச்சிக்கு ஆற்ற வேண்டிய கடமை பற்றி சொற்பொழிவாற்றினர். சபையின் ஞாயிறு சமயபாட வகுப்பு மாணவ மாணவிகளால் பேச்சுகளும் தேவார இசையும், செல்விகள் காந்தி அண்ணாமலை, சிவாந்தி சிவஞானம் அவர்களின் பரத நாட்டிய நிகழ்ச்சியும் இடம் பெற்றன.

---

### நுண்கலைகள் பற்றி வானொலி நடிகர்

"இந்து சமுத்திரம் பசுபிக் சமுத்திரமெனச் சமுத்திரங்களை வெவ்வேறு பெயரிட்டு அழைக்கின்றோம். ஆனால் பசுபிக் சமுத்திரத்தின் ஒரு பகுதியில் இந்து சமுத்திரத்தின் தண்ணீர் கலந்திருக்கும்; அத்திலாந்திக் சமுத்திரத்தின் ஒரு பகுதியில் பசுபிக் சமுத்திரத்தின் தண்ணீர் கலந்திருக்கும். இதைப் போன்றவையே நுண்கலைகளும். அவை தனித் தனிப் பெயர்களால் அழைக்கப்பட்டாலும் அவை ஒன்றுடனொன்று சம்பந்தப்பட்டவை; தொடர்புடையவை." எனச் சென்றவார இறுதியில் திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தின் சிறப்புக் கூட்டத்தில் பேசிய இலங்கை வானொலி நாடகத் தயாரிப்பாளர் திரு. சண்முகநாதன் (சானா) கூறினர்.

இக் கூட்டத்திற்குச் செல்வன் ஆ. மகேசுவரன் தலைமை வகித்தார். செல்வன் சு. நடராசா வரவேற்புரை கூறினர்.

---

### கலாசாலைத்தினம்

புனித வளனர் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைத் தினம் 19-3-63-ல் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்று காலை சிங்காரமாக அலங்கரிக்கப்பட்ட கலாசாலை ஆலயத்தில் இக் கலாசாலையின் முன்னாள் அதிபர் அதி வண. வ. தியோகுப் பிள்ளை சுவாமி அவர்கள் திவ்விய பூசை நிறைவேற்ற, சாதனா போதனா கழக மாணவர்களும், கோப்பாய் மகளிர் ஆசிரிய கலாசாலை மாணவிகளும் திவ்விய பூசை கண்டு நல்விருந்தருந்தி மாதவன் ஆசியை வேண்டி நின்றனர். சாதனா கழகச்சிறுரின் முதல் நன்மையும் இடம் பெற்றது. இத்துடன் விழா ஆரம்பமாகியது.

காலைப் போசனம் அருந்திய பின் போதனா கழக மாணவர்களிடையே கரபந்தாட்டம். கயிறிழுத்தல் ஆகிய விளையாட்டுக்கள் மிக உற்சாகமாக நடைபெற்றன.

பின் மாலை 5 மணியளவில் சதம்ப நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஈற்றில், 'வாழ்வளித்தவன்' என்ற நாடகம் இடம் பெற்றது.

---

### இலங்கை ம. பொ. சி. மன்றம்

இலங்கை ம. பொ. சி. மன்றத்தாரின் நிர்வாகத் தேர்தல் 17-3-63 ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு திரு. எம். பி. பாரதி தலைமையில் நடைபெற்றது. வரவு செலவு கணக்கு சமர்பித்த பின் கீழ்க் கண்ட, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:

தலைவர்: எம். பி. பாரதி, பொதுச் செயலாளர்: மு. அரசு, துணைச் செயலாளர்: எம். பி. பரந்தாமன், செயற்குழு அங்கத்தவர்கள்: திருவாளர்கள் தமிழ் நெஞ்சன், வி. என். இராசரெத்தினம், எஸ். எம். யூசுப், மீராசாயுபு, த. மணி, எஸ். செல்லத்தம்பி, ஜோன் பீட்டர், ஆரோக்கியம், குமார், குமாரசாமி, அ. பட்டையா.

இவ்வருடம் இலங்கையில் ம. பொ. சி. வருவதாக இருந்தால், அவரைக் கொண்டு பிரமாண்டமான கூட்டம் ஒன்றினை நடத்தவும் செயற்குழுவினல் தீர்மானிக்கப்பட்டது.

---

### கல்முனை மாவட்ட எழுத்தாளர் சங்கம்

"பண்டைக் காலத்திலே பல புலவர்களும் கவிஞர்களும் பல்கிப் பெருகியதனலேயே என்றென்றும் அழியாப் புகழ் படைத்த பல நூல்கள் உதயமாயின. அதே போன்று நம் மத்தியிலும் பல எழுத்தாளர்கள் தோன்றி நல்ல—போற்றக் கூடிய சிருஷ்டிகளை உற்பவிக்க வேண்டும். இதனல் நாட்டில் அறியாமையைப் போக்கி நல்லறிவை வளர்க்கலாம். எழுத்தாளர்கள் காலத்திற் கேற்க படைப்புகளைப் படைக்கத்தெண்டிக்க வேண்டும்."

கல்முனை மாவட்ட எழுத்தாளர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையில் நடைபெற்றபோது, தமது தலைமைப் பேருரையில் வித்துவான் க. ஞானரெத்தினம் அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார்.

பின் வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். [illegible] எம். அப்துல்காதர்ஸ், திரு. கதிரேசன் செட்டியார், கல்முனை காசிம் ஜுவலரீஸ், தலைவர்: வித்துவான் க. ஞானரெத்தினம், உப தலைவர்: திரு. நா. நாகராஜா (கவிதாபரணன்), காரியதரிசி: திரு. சீ. குணரெத்தினம்; உப காரியதரிசி: செல்வன் ஏ. சேகுமுகமத்துஅலி, பொருளாளர்: திரு. பி. தெய்வநாயகம், நிர்வாக சபை அங்கத்தவர்கள்: செல்வர்கள் எம். முஸ்தபா (கல்முனையான்), ஏ. செயினுலாப்தீன் (ஜமால்), ஆர். சிதம்பரநாதன் (நாதன்), திருவாளர்கள் வி. கனகசபை, யூ. செல்லத்தம்பி, சி. செபரெத்தினம்.

---

### கல்லாறு பஸ் பிரயாணிகள் நலவுரிமைச் சங்கம்

'இப்பகுதி மக்களின் போக்குவரவுச் கஷ்டங்களை நான் நேரடியாகச் சென்று அவதானித்து வருகிறேன். போதிய பஸ்கள் கைவசமில்லை; கையிருப்பில் உள்ளவைகளும் நல்ல நிலைமையில் இல்லை-என்றாலும் நாட்டின் போக்கு வரவுத் தேவைகளை பிரயாணிகள் சங்க மூலம் புகார் செய்வதால் திருப்தியான பஸ் சேவைகளை ஏற்படுத்த உதவியளிக்கும்'.

30-3-63 சனிக்கிழமை கல்லாறு பஸ் பிரயாணிகள் நல உரிமைச் சங்க தூதுக் குழுவினருக்கு புதிதாக மாற்றம் பெற்று வந்துள்ள மட்டக்களப்பு டிப்போ மனேஜர் திரு. குமாரகுலசிங்கமவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தூதுக் குழுவினர் கல்முனை களுவாஞ்சிக்குடி பஸ்சேவைகளைப் பற்றிப் பிரஸ்தாபித்த போது குறிப்பிட்டதாவது:-

குறித்த இரு இடங்களுக்கிடையில் ஒரு நிரந்தர பஸ் சேவை அமைக்கப்படுவதால் பஸ் சேவையற்ற பழுகாமம், பெரிய போரதீவு, முனைத்தீவு, கோவிற் போரதீவு, மண்டூர், எருவில், வெல்லாவெளி, மண்டூர்க் கோட்டைமுனை, துறைநீலாவணை, அன்னமலை, நாவிதன் வெளி, ஆகிய கிராம மக்களின் பயணக் கஷ்டம் நீங்கி விடும்.

அம்பாறைக்கு வேலைக்குச் செல்லும் தொழிலாளரதும், உத்தியோகத்தரதும் கஷ்டம் தீரும்.

கல்முனைக்குச் செல்லும் வியாபாரிகளின் கஷ்டம் நீங்கும்.

கல்முனைக்குச் செல்லும் சாதாரண தொழிலாளரின் கஷ்டம் நீங்கும்.

பாடசாலை ஆசிரியர், மாணவரது கஷ்டம் தீரும்.

---

## நிழல்கள்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

வத்தை அண்ணன் மறந்திருந்தான். ஆனால், நேற்று நிகழ்ந்த சம்பவம்—கனகம் சின்னராசனோடு ஓடியது—பழைய நினைவை உண்டாக்கி, அண்ணனைக் கவலையில் ஆழ்த்தி விட்டதா?

சின்னராசு அண்ணனிலும் பார்க்க எவ்விதத்தில் உசத்தி?

அண்ணனைப் போல அழகனா? குணமானவனா?

அண்ணனிடம் காணாத எதைக் கனகம் சின்னராசுவிடம் கண்டாள்?

'கனகம்...கனகமக்கா! நீ எதைக் கண்டு சின்னராசுவோடு ஓடிப் போனாய்? என் அண்ணன், உன்னை விரும்பி ஆச்சியை அனுப்பி முறையாகப் பெண் கேட்டபோது எங்கள் ஏழ்மையைச் சுட்டிக் காட்டி கந்தையர் பேசினார்! தூரத்து வழியில் உறவு என்ற உரிமையோடு தான் ஆச்சி உன்னைக் கேட்டு வந்தவ...! நீ கூறியதை மறந்திருக்க மாட்டாய்......'ஒரு சுருட்டுக் காறனை மணக்கவோ' என்று கேட்டாயே? இன்று நீ என்ன பெரிய உத்தியோகத்தனையா மணந்து விட்டாய்...? கேவலம்...சீ! உனக்கிது நல்லாவேணும்...!'

ராஜகோபால் போர்வையை இழுத்து உடலை மூடிக் கொள்ள முயல்கிறான்.

நெஞ்சக் கடலில் மோகனப் புன்னகை சிந்தி மலரும் அவள்—

'புவனம்!' என்று உதடுகள் முணுகுகின்றன.

(தொடரும்)

### அருந்ததியர் சங்க பொதுக் குழு கூட்டம்

மேற்படி கூட்டம் அதன் தலைவர் திரு. எஸ். சுந்தரராஜ் அவர்கள் தலைமையில் சென்ற 24-3-63-ம் நாள் ஞாயிறு மாலை 4 மணியளவில் கூடியது.

சமூக மக்களின் நன்மைக்கான பூர்வாங்கப் பொருளாதாரத் திட்டம் பொதுக் குழுவினரால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு, அதன் வெற்றிக்கு நிதிக்குழு ஒன்றைத் தெரிவு செய்து, அது வகுத்துக் கொடுக்கும் வழிமுறைகளால் இப்பொருளாதாரத் திட்டம் நிறைவேறுவதற்கு சங்கம் முழு மூச்சாக ஆவன செய்வது எனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

பொருளாதாரத் திட்டத்திற்கான வழி முறைகளை வகுத்துக் கொடுக்க 17 பேர்களைக் கொண்ட நிதிக் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது.


## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் ரைப் பவுண்டரி,**

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு—12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!!

**எல்பின்ஸ்டன்**
(மருதானை)
**ரெக்ஸ்**
(பொரளை)
**அசோகமாலா**
(நீர்கொழும்பு)
**கிங்ஸ்** (பதுளை) **றீகல்** (கம்பளை)
**வின்ஸர்**
(யாழ்ப்பாணம்)
**இம்பீரியல்**
(மட்டக்களப்பு)
**நெல்சன்** (திருகோணமலை) **றீகல்** (யாழ்ப்பாணம்)

சிவாஜி கணேசன், சாவித்திரி, எம்.என்.ராஜம், எஸ்.வி.சுப்பையா, வி. கே. ராமசாமி, ஏ. கருணாநிதி, வி. ஆர். ராஜகோபால், எஸ். வரலட்சுமி, முத்துலட்சுமி, மனோரமா
தோன்றும் உன்னத சித்திரம்




---

# இப்பொழுது காண்பிக்கப்படுகிறது !

சிலோன் எண்டர்டெயின்மெண்ட்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கும்
மாபெரும் விருந்து!

ஜனாதிபதியின் வெள்ளிப் பதக்கம் பெறும் ஒரே ஒரு தமிழ்ப் படம்

ஸ்ரீதரின்

# நெஞ்சில் ஓர் ஆலயம்

| | | | |
|---|---|---|---|
| **சென்ட்ரல்** [ மருதானை ] | **ரொக்ஸி** [ வெள்ளவத்தை ] | **ராணி** [ யாழ்ப்பாணம் ] | **வேல்ஸ்** [ கண்டி ] |
| **ஜோதி** [ திருகோணமலை ] | **லிபர்ட்டி** [ பதுளை ] | **பிரீதி** [ ஹட்டன் ] | **சென்ட்ரல்** [ நாவலப்பிட்டி ] |

**13ம் திகதி முதல் ராஜேஸ்வரா** [மட்டக்களப்பு] **மீபுர** [நீர்கொழும்பு] ஆகிய திரைகளில் விருந்தளிக்கிறது!

குறிப்பு: பிரேஸில் நகரத்தில் நடைபெறவிருக்கும் திரைப்பட விழாவுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒரே ஒரு தென்னாட்டுத் தயாரிப்பு நெஞ்சில் ஓர் ஆலயம்.

---

# இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

| | | | |
|---|---|---|---|
| **கிங்ஸ்லி** (கொழும்பு) | **பிளாஸா** (வெள்ளவத்தை) | **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) | **விஜயா** (மட்டக்களப்பு) |
| **ஸ்ரீகிருஷ்ணா** (திருகோணமலை) | **விஜயா** (ஹட்டன்) | **ஜெமினி** (ராகலை) | |


......**சபாஷ் சந்திரபாபு** என......
நாடும் ஏடும் வாழ்த்துகிறது — நடிப்புலகம் போற்றுகிறது
சிந்தைக்கு சிரிப்பு! சிந்தனைக்கு விருந்து!
**காணத் தவறாதீர்கள்!**

திரைக் கதை-வசனம்: முரசொலி மாறன் எம்.ஏ.
டைரக்ஷன்: ஜி. கே. ராமு
இசை: டி. ஆர். பாப்பா

பின்னணி பாடியவர்கள்:
வி. என். சுந்தரம், பி. சுசீலா, ஜமுனாராணி, ரத்தினமாலா, சூலமங்கலம் ராஜலட்சுமி.

நடனம்: சாயி - சுப்புலெட்சுமி, ஹெலன்

ஜே. பி. சந்திரபாபு — எம். என். ராஜம்
டி. எஸ். பாலையா — கே. சூரியகலா
டி. எஸ். துரைராஜ் — பி. எஸ். ஞானம்
ஜாவர் சீதாராமன் — சி. டி. ராஜகாந்தம்
கள்ளபார்ட் நடராஜ் — மாஸ்டர் கோபி
நடித்த




இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்த, 194 ஏ, இலக்கத்தில் 1963-ம் வருடம் ஏப்ரல் மாதம் 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org